# இந்து தருமம் 2014



## இந்து மாணவர் சங்கம்
## 2014/2015
## பேராதனைப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சதானந்தி, இறுதி வருடம், விஞ்ஞான பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்

# இந்து தருமம் - 2014

## இந்து மாணவர் சங்கம்
## 2014/2015

### பேராதனைப் பல்கலைக்கழகம்



# HINDU DHARMAM - 2014

***Hindu Student's Union - 2014/2015***
***University Of Peradeniya***

**காப்பு**

**முப்புரம் எரிசெய்த அச் சிவன்**
**உறை ரதம் அச்சது**
**பொடி செய்த - அதிதீரனுக்கு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூன்முகம்


நூல் : இந்து தருமம் : 2014

இதழாசிரியர்கள் : சி.ரமேஸ்
செ.வர்மிலா

வெளியீடு : இந்து மாணவர் சங்கம் 2014 / 2015
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை

பிரதிகள் : 250

அட்டைப்படம் : சி.சேரலாதன்

தாள் : 70g/m$^2$ (இந்தோனேசியா)

அச்சுப்பதிப்பு : தேவி Printers
140/1 மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்
021 300 3030

Title : Hindu Dharmam 2014

Editors : S.Ramesh
: S.Varmila

Published By : Hindu Student' s Union 2014/ 2015
University of Peradeniya
Peradeniya

Copies : 250

Cover Image : S.Seralathan

Paper : 70g/m$^2$ (Indonesia)

Printed By : தேவி Printers
140/1, Manipay Road,
Jaffna
Deviprinters@live.com
021 300 3030



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பேராதனை உறைந்து பேணி
நம்மைக் காப்பதற்கு
கூரான வேல் தாங்கும்
குறிஞ்சிக் குமரனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர்களின் இதயங்களிலிருந்து

குன்று தோறும் உறைந்து அருள்பாலிக்கின்ற கடவுளாக முருகன் விளங்குகின்றான். மலையும் மலைசார்ந்த இடமாகிய குறிஞ்சிக்குரிய கடவுளாக முருகனை போற்றி வழிபடுவது இந்துக்களின் மரபு. அந்தவகையில் பேராதனைக் குன்றின் மீது குமரனுக்கு கோயிலெடுத்து வழிபாடு இயற்றி வருகின்றனர் பேராதனை வாழ் இந்து சமூகத்தினர்.

ஆலயத்தை மையமாகக் கொண்டு இந்துமாணவர் சங்கத்தினர் ஆற்றுகின்ற பணிகளினொன்று "இந்து தருமம்" என்ற இதழினை ஆண்டுதோறும் வெளியிடுதலாகும். அந்தவகையில் இவ்வருடமும் குறிஞ்சிக் குமரன் திருவருளோடு இவ்விதழ் சிறப்பாக வெளியிடப்படுகின்றது. இவ் இதழில் வாழ்த்தியல், கட்டுரையியல், கவிதையியல் ஆகிய மூன்று இயல்கள் காணப்படுகின்றன.

இவ் இதழின் சிறப்பானது பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவ நண்பர்கள் முதலியவர்களால் எழுதப்பெற்ற ஆக்கங்கள் உள்ளடக்கியிருப்பதாகும். வழமை போலவே இம்முறை வெளிவரும் இவ் இதழும் இந்து சமயக் கருத்துக்களையும், மாணவர்களது படைப்பாற்றலையும் கொண்டிருக்கின்றது.

இவ் இதழ் உங்கள் கைகளில் தவழ ஆக்கங்கள் தந்து உதவியவர்களுக்கும் மேலும் சிறப்புற பல்வேறு வழிகளில் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். இவ் இதழில் ஏதாவது குறைகள், தவறுகள் இருப்பின் பொறுத்தருள்வீர் என்ற நம்பிக்கையுடன் குறிஞ்சிக் குமரன் பாதங்களில் இம்மலரை சமர்ப்பிக்கின்றோம்.

**இதழாசிரியர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

## வாழ்த்தியல்

1. ஆலய பிரதம குருவின் ஆசியுரை i

2. நல்லைதிருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரின் ஆசிச் செய்தி ii

3. இராமகிருஷ்ணமிஷன் வழங்கிய ஆசிச் செய்தி iii

4. MESSAGE FROM VICE CHANCELLOR iv

5. பெருந்தலைவரின் வாழ்த்துச் செய்தி v

6. பெரும் பொருளாளரின் வாழ்த்துச் செய்தி vi

7. பொறுப்பாண்மைக் குழுத் தலைவரின் வாழ்த்துச் செய்தி vii

8. இந்துமாணவர் சங்கத் தலைவரின் எண்ணத்தில் இருந்து viii

## கட்டுரையியல்

9. கணிதமும் கடவுளும் 01

10. வவுனியாவும் நரசிம்மர் வழிபாடும் 03

11. நாடி ஜோதிடம் 07

12. பாவ புண்ணியங்கள் 09

13. மனங்கள் மாறவேண்டும் 11

14. சோதனை மேல் சோதனை 14

15. நாட்டார் மரபில் முருக வழிபாடு 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. அறமும் சமயச் சார்பும் சமத்துவமும் அசமத்துவமும் 24

17. இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள சாசன பயிலரங்கு 34

18. நவீன இந்து சமய ஞானி 41

19. இன்பக் கொள்கை 43

20. மெய்ஞ்ஞானத்தில் விஞ்ஞானம் 45

21. நாயிற்கடையாய் கிடந்த அடியேன் 47

22. பசுவை ரக்ஷசித்தல் 50

23. அருச்சுனன் தவம் 52

## கவிதையியல்

24. நியாயப்படுத்தப்பட்ட நியாயங்கள் 63

25. காணாமல் இருப்பது ஏன் 65

26. கதைகேளாய் 66

27. கந்தன் காதல் 68

## பதிவியல்

28. இந்து மாணவர் சங்கத்தின் ஆண்டறிக்கை 69

29. இந்து மாணவர் சங்க பெருந்தலைவர்கள் 72

30. நன்றிமறந்திலோம் 74

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்தியல்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய பிரதமகுருவின் ஆசி உரை

"ஓம் சரவணபவாய வித்மஹே.

சக்தி ஹஸ்தாய தீயஹி தன்னோ குறிஞ்சிக் குமரப்ப்ரசோதயாத்"

கண்டி பேராதனைப் பல்கலைக்கழகம், குறிஞ்சிக்குமரன் ஆலய இந்து மாணவர் சங்கமானது தனது ஆண்டு விழாவைக் கொண்டாடும் பொழுது "இந்து தர்மம் 2015" என்னும் மலர் வெளியிட இருப்பதை அறிந்து மகிழ்வுறுகிறேன்.

வருடா வருடம் மாறி வருகின்ற இந்து மாணவ சங்க நிர்வாகிகளால் இந்நூல் வெளியிடப்படுவதாலும் புதியவர்களின் ஆக்கங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதாலும் புதியவர்கள் ஊக்குவிக்கப்படுவது டன் பல வித வாய்ப்புக்களும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

பல்வேறு பயன்களைத் தாங்கி வரும் இந்நூல் மேலும் வளர்ச்சி பெறவும் உதவிபுரிவோரும், எழுது வோரும், வெளியிடுவோரும் வாசிப்போரும் பெரும் பயன் பெற வேண்டுமென ஆசிகள் கூறி எல்லோ ருக்கும் எல்லாம் வல்ல குறிஞ்சிக்குமரன் திருவருள் பாலிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

"மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்

**க.வரதராஜசர்மா**
**பிரதம குரு குறிஞ்சிக் குமரன் கோயில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரின் ஆசிச் செய்தி

அன்புடையீர்,

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தினர் வருடாந்தம் வெளியிடுகின்ற "இந்து தர்மம்" மலர் இம்முறையும் வெளிவருவதனையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இம்மலர் வழமைபோல சிறப்பான அறக்கருத்துக்களையும், பயன்தரு ஆக்கங்களையும் தாங்கி வருவது போற்றுதற்குரியது.

சமயம் ஒவ்வொன்றும் மனிதனை மனிதனாக வாழ வழிகாட்டியாக உள்ளது. அந்த வகையில் சமய, கலை, கலாசாரங்களை வளரக்க வேண்டிய பொறுப்பு இளந்தலைமுறையினரிடமே உள்ளது. பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர்கள் குறிஞ்சிக்குமரன் ஆலயத்தை மையமாகக் கொண்டு பல சமய நிகழ்ச்சிகளையும், வெள்ளிக்கிழமை தோறும் பஜனைகளையும் நடத்தி வருகின்றனர். அதன் தொடர்ச்சியாகவே 'இந்து தர்மம்' நூல் வெளியீடும் அமைந்துள்ளது. சிந்தனைகளைத் தூண்டும் ஆன்மீக கட்டுரைகளையும், ஆய்வுக் கட்டுரைகளையும் தாங்கிவரும் இம்மலரை வெளியிட்டு வைக்கும் இந்து மாணவர் சங்கத்தினருக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் இம்மலர் சிறப்புற வெளிவந்து அனைவருக்கும் பயனுள்ளதாக அமைய இறைவன் ஆசீர் வதிப்பானாக.

என்றும் இறவாத இன்ப அன்பு வேண்டும்

சுபமஸ்து

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்**
**2 வது குருமஹா சந்நிதானம்,**
**நல்லூர்.**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமகிருஷ்ணமிஷன் வழங்கிய
# ஆசிச் செய்தி

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இந்து மாணவர்கள் சங்கம் இவ்வருடமும் மகா சிவராத்திரி அன்று 'இந்து தர்மம்' என்ற நூல் வெளியிட இருப்பதை அறிந்து பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

"உலகிற்கு நான் சொல்ல வேண்டுவதெல்லாம் வீரர்களாக இருங்கள்...! வலிமையும் வளர்ச்சியுமே வாழ்விற்கு அடையாளம், பலவீனம் சாவிற்கு அடையாளம். பலவீனமான எல்லாவற்றிலிருந்தும் விலகி விடுங்கள். சாவு வலிமையானது என்றால் அதைப் பெற நரகத்திற்குச் செல்ல நேர்ந்தாலும், சென்று அதைப் பற்றிக்கொள்ளுங்கள்.

உண்மையான வெற்றியின், உண்மையான ஆனந்தத்தின் மாபெரும் இரகசியம் இதுவே. பிரதி பலனை எதிர்பாராதவன், முற்றிலும் தன்னலமற்றவன் - அவனே எல்லாவற்றிலும் சிறந்த வெற்றி யடைவான்." என்று சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார்.

அறப்பணிகள் செய்து வரும் இந்து மாணவர் சங்க உறுப்பினர்களுக்கும், மேலும் இந் நூல் வெளிவர உழைத்த அனைவருக்கும் பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தில் வீற்றிருக்கும் குறிஞ்சிக் குமரன் அருளையும் ஆசிகளையும் வழங்க பிரார்த்திப்பதோடு என் அன்பையும் வாழ்த்துக்களையும் தெரிவிக் கின்றேன்.

இறைபணியில்<br>
சுவாமி சர்வரூபானந்த<br>
தலைவர்<br>
கொழும்பு – 6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE FROM VICE CHANCELLOR

*I have pleasure in sending my greetings to the Hindu Student's Union of the University of Peradeniya on the event of launching of its annual publication "Hindu Dharmam" to mark Maha Sivarathri festival.*

*The varied cultural activities of the Hindu Student's Union offer its members to exchange views and opinions on matters of shared interest that leads to foster peace and harmony. It is appreciated the articles and creative writings by those who have published in "Hindu Dharmam" that contributes to develop the organizational culture and society as a whole. I believe that contribution of students in social and cultural activities would make easy for them to widen their vision of life and society.*

*I congratulate the members of the Hindu Student's Union for their efforts and achievements towards success of this event and wish them every success in their future endeavours.*

*VICE-CHANCELLOR*
*UNIVERSITY OF PERADENIYA*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தலைவரின் வாழ்த்துச் செய்தி

இந்து மதம் அனைத்து மதங்களினதும் தாய். கீழைத்தேய மதங்கள் அனைத்தும் இந்து மதத்தின் இனிய குழந்தைகளே. அன்பால் அனைவரையும் அரவணைத்து, அருள் நிறைத்து, ஆன்மீகம் பரப்பி உய்வுக்கு உதவும் உயர் சமயம். இந்து மதத்தின் உயர் தனிச் சிறப்பு அதன் தருமக் கொள்கையே ஆகும். இறைவன் தரும வடிவினன் என்பதை ஆழமாகவும் அழகாகவும் அகலமாகவும் சொல்லி வைத்த மதம் இந்து மதம். ஒவ்வொரு இந்துவினதும் வாழ்வின் நாதமும் ஆதார சுருதியும் தருமமே என்று வரையறுத்த தலையாய சமயம் இந்து மதம். இத்தகைய மதத்தின் அடிப்படைச் சிறப்பான "இந்து தருமம்" எனும் பெயரில் பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் வருடந்தோறும் வெளியிடும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதற்குக் கிடைத்த வாய்ப்பு இறையருளாற் கைகூடியது.

கல்விச்சூழல் கடவுள் வழிபாட்டுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும். "கற்றதனால் ஆய பயன் என் கொல் வால் அறிவன் நற்றாள் தொழார் எனின்" என்பார் வள்ளுவப் பெருந்தகை. கற்றலின் ஆரம்பமும் அந்தமும் கடவுள் வழிபாட்டுடன் தொடர்புடையது. இன்றைய கல்விச் சூழலில் இதனை மறந்து வரும் நிலை காணப்படுகின்றது.

கல்விச் சூழலில் அமைந்த ஆலயத்தில் மாணவர்கள் சரியைத் தொண்டில் ஈடுபடுவது குறைவு. அறிவியல் உலகில் ஆன்மீகத்தை நாடுவது குறைவு. கற்பவர்களும் கற்பிப்பவர்களும் ஆலய முன்னேற்றத்திலும் சிறிதளவு நேரத்தைச் செலவு செய்து இறையருளை வரவு வைத்தால் இந்த வையகத்தில் உயரலாம். இதை உணர்ந்து அனைவரும் செயற்படுவார்கள் என நம்புகின்றேன்.

"இந்து தருமம்" இதழ் சிறப்புற வெளிவந்து ஆன்மீக ஒளியையும் அறிவொளியையும் பரப்ப வேண்டும் என வேண்டுவதோடு இறைவனை இறைஞ்சி இதழாசிரியர்களுக்கும் இந்து மாணவர் சங்க உறுப்பினர்களுக்கும் நல்லருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**வடிவேல்முருகன் தர்மதாசன்**
**பெருந் தலைவர்**
**இந்து மாணவர் சங்கம்**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் பொருளாளரின் வாழ்த்துச் செய்தி

குன்றினில் ஆடும் குமரனின் பாதார விந்தங்களைப் பணிந்து இவ் வாழ்த்துரையைத் தொடங்குகின்றேன்.

இந்து சமயத்தின் மேன்மைகளைப் பரப்பி நிலைநாட்டவும் வேதநெறி தழைத்தோங்கவும் இந்து மாணவர் சங்கத்தினர் ஆற்றிவரும் பங்களிப்பானது பாராட்டுக்குரியது அவர்களின் அர்ப்பணிப்பின் பெறுபேறாக புலமைத்துவம் சார் கட்டுரைகளைத் தன்னகத்தே தாங்கி ஆண்டுக்கொருமுறை வெளிவரும் இதழான இந்து தருமம்' இவ்வருடமும் மலர்ந்திருப்பதைக் கண்டு உவகையடைகின்றேன்.

தமது கற்றல் கடமைகளின் மத்தியிலும் குறிஞ்சிக்குமரன் ஆலயத்தின் நாளாந்த செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்தி வரும் எமது இந்து மாணவர் சங்கத்தினரை பாராட்டாமல் இருக்க முடியாது அவர்களின் செயற்பாடுகள் தொடரவும் மென்மேலும் மெருகூட்டவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாநிதி த. சிவானந்தவேள்
பெரும் பொருளாளர்
இந்து மாணவர் சங்கம்
பேராதனைப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிஞ்சிக் குமரன் கோயில் பொறுப்பாண்மைக் குழுத் தலைவரின்

# வாழ்த்துச் செய்தி

பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவர்கள் பல்தரப்பட்ட கற்கைநெறிகளுக்கு மத்தியிலும். ஆன்மீக வழிபாட்டில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபடுவது சிறப்புக்குரியதொன்றாகும். இவர்கள் பலதரப் பட்ட நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இந்து தர்மம் சஞ்சிகையை வருடாவருடம் வெளியிடுவது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது.

இன்றைய காலகட்டத்தில் இந்து மதத்தை மேலும் வலுவடையச்செய்து. பாதுகாப்பது இளந் தலைமு றையினரான மாணவர்களின் தலையாய கடமையாகும். இக்கடமையை இம்மாண வர்கள் திறம்படச் செய்து வருகிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்கும் போது நான் பெரிதும் மனம் மகிழ்வதுடன். இச்சேவையை சமூகத்தின் மத்தியில் எடுத்துச்செல்வதற்கு இந்து மக்கள் தமது ஆதரவையும் ஒத்து ழைப்பையும் நல்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இம்மாணவர்களின் பணி மேலும் மேலும் தொடர்ந்து. அவர்கள் வாழ்க்கையில் எல்லா நிலைக ளிலும் முன்னேறக் குறுஞ்சிக்குமரனின் நல்லாசிகளை வேண்டி நிற்கின்றேன்.

பேராசிரியர் வை. நந்தகுமார்.
தலைவர்
பொறுப்பாண்மைக்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவர் சங்கத் தலைவரின் எண்ணத்திலிருந்து

கண்டி மாநகரில் குறிஞ்சிப் பகுதியிலே குமரனாக அமர்ந்து எம்மையெல்லாம் ஆன்மீகப் பாதையில் சென்று ஈடேற்றமடைய அருள்பாலித்துக் கொண்டிருக்கின்ற குறிஞ்சிக்குமரன் புகழ் உலகமெல்லாம் பரவச் செய்வது எங்கள் ஒவ்வொருவருடைய தலையாய கடமை ஆகும்.

கோயில் என்பது மதத்தின் அடையாளச் சின்னம் ஆகும். குறிஞ்சிக்குமரன் ஆலயமானது கண்டிவாழ் மக்களின் அடையாளச் சின்னமாக விளங்குகிறது. குறிப்பாக பேராதனைப் பல்கலைகழகத்து மாண வர்களின் அடையாளச் சின்னமாக விளங்குகிறது. ஆகவே இனமத பேதங்களை விடுத்து இவ் ஆல யத்தை போற்றிப் பேணிப் பாதுகாப்பது எமது கடமையையும் விட உரிமை கொண்டதாகும்.

தற்போது மாறிவரும் சமூக கலாசாரப் போக்கு காரணமாக ஆலயத்திற்கு செல்வது என்பது அனைவரி டமும் அருகிவருகிறது ஆகவே நாளைய தலைமுறையை உருவாக்கப் போகின்ற மாணவர்களாகிய நாம் நமது கலாசாரத்தை வளர்த்தெடுத்து அடுத்த சந்ததிக்கு கொடுக்க வேண்டிய நிலைப்பாட்டில் நிற்கின்றோம். ஆகவே அனைத்து மாணவர்களும் குறிஞ்சிக் குமரன் ஆலயத்திற்கு வந்து தங்கள் கலாசார விழுமியங்களை வளர்த்தெடுப்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

இந்து மாணவர் சங்கம் வருடாவருடம் "இந்து தர்மம்" மலர் வெளியிட்டு வருகின்றது. இவ் ஆக்கம் மாணவர்களின் அறிவை வளர்த்தெடுக்க மிக முக்கிய பங்குவகிக்கின்றது. ஆந்த வகையில் 58 ஆவது இந்து தர்மம் இதழுக்கு இந்த மாணவர்சங்கத் தலைவராக இருப்பது குமரன் தந்த பேறாக கருதுகி றேன்.

இவ் இதழ் சிறப்புற எல்லாம் வல்ல குறிஞ்சிக்குமரனைப் பிரார்த்திக்கிறேன்.

**கு.அபிராம்**
**தலைவர் இந்துமாணவர் சங்கம்**
**இறுதி வருடம், பொறியியல் பீடம்**
**பேராதனை பல்கலைகழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவர் சங்கம்

## செயற்குழு 2014 / 2015

| | | |
|---|---|---|
| பெருந்தலைவர் | : | திரு. வ.தர்மதாசன் |
| பெரும்பொருளாளர் | : | கலாநிதி த.சிவானந்தவேள் |
| கௌரவகணக்காய்வாளர் | : | திரு. ந.அகிலன் |
| தலைவர் | : | செல்வன் கு. அபிராம் |
| உபதலைவர் | : | செல்வன் இ. ஜதீசன் |
| இணைச்செயலாளர்கள் | : | செல்வன் தி.ஜனதன் |
| | | செல்வன் த. திருவரன் |
| இளம்பொருளாளர் | : | செல்வன் சி.சேரலாதன் |
| இதழாசிரியர்கள் | : | செல்வன் சி.ரமேஸ் |
| | | செல்வி செ.வர்மிலா |
| நூலகர் | : | செல்வன் வை.கோகுலன் |
| பண்டகமுகாமையாளர்கள் | : | செல்வன் பா.சேகரன் |
| | | செல்வன் லோ.சஜீவன் |
| நிர்வாக அலுவலர்கள் | : | செல்வன் ச.மதிலக்சன் |
| | | செல்வன் இ.நிரோசன் |
| இணைப்பாளர் | : | செல்வன் கு.பாலகஜன் |
| செயற்குழு உறுப்பினர்கள் | : | செல்வன் ஸ்ரீ.யரோசன் |
| | | செல்வன் து. புருசோத்தமன் |
| | | செல்வன் உ.கதீஸ்வரன் |
| | | செல்வன் மா.அகிதகுமார் |
| | | செல்வன் வே.குகதாசன் |
| | | செல்வன் ந.நவபிரசாத் |
| | | செல்வி செ.சுமதி |
| | | செல்வன் ஜெ.ஹிருசாந் |
| | | செல்வன் இ.வேல்மகிபன் |
| | | செல்வன் ப.கீர்த்தனன் |
| | | செல்வி சோ.வேணுயா |
| | | செல்வன் பூ.இவான்சலின் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சிக்குமரன் ஆலயம்

# பொறுப்பாண்மைக் குழு 2014 / 2015

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பேராசிரியர் வை.நந்தகுமார் |
| பொதுச் செயலாளர் | : | இரா. மகேஸ்வரன் |
| நிர்வாக செயலாளர் | : | கலாநிதி த.சிவானந்தவேள் |
| பொருளாளர் | : | திரு.வ.தர்மதாசன் |
| செயற்குழு உறுப்பினர்கள் | : | பேராசிரியர் செ.சிவயோகநாதன் |
| | | பேராசிரியர் வ.மகேஸ்வரன் |
| | | திரு.ச.விஜயச்சந்திரன் |
| | | திரு.து.சிவசுப்பிரமணியம் |
| | | திரு.அ.அரியரத்தினம் |
| | | திரு.வ.கதிர்காமநாதன் |
| | | கு.அபிராம் |
| | | சி.சேரலாதன் |
| | | தி.ஜனதன் |
| | | ர.ஜதீசன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுரையியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கணிதமும் கடவுளும்

மு.கதிர்காமத்தம்பி

விலங்கு மருத்துவ விஞ்ஞானபீடம்

கடவுளின் சிந்தனையில் தோன்றிய சிக்கலைத் தீர்ப்பதே கணிதம் எனப்படும். எமது முன்னோர் கணிதம் எனும் கற்கண்டை கடவுளுக்கு காணிக் கையாக்கி, எண்கலை எனும் எழுத்தாணியை கடவுள் முன்னால் கற்பூரமாக எரிய விட்டிருக் கின்றனர். முடிவில் கணிதத்தையும் கடவுளை யும் ஒன்றாகக் கலந்து அதிலே இன்பம் கண்டி ருக்கின்றனர்.

கடவுள் எனும் கருப்பொருள் தோன்றும் காலத் தில் கணிதம் எனும் எண்ணக்கருவும் கருத் தரித்து விட்டதற்கான சான்றுகள் ஏராளம். உரோம கிரேக்க நாகரிகங்களில் உரோமர்கள் "ஆதீ னாதேவி" எனும் தமது பெண் தெய்வத்திற்கு கணிதத்தினை காணிக்கையாக்கினார்கள் என 'இலியற்' எனும் வீரகாவியத்திலே குறிப்பிடப்பட் டுள்ளது. சீனாவின் குவாங்கோ நதிக் கரையை அண்டி வாழ்ந்த மக்கள் தமது இறைவனைப் போற் றிப் பாடிய பாடல்கள் எழுதப்பட்ட ஆமையோட்டுக் கீலங்களில் மிகுதியாக இருந்த பகுதிகளில் கணி தச் செய்கைகளையும் கடவுளுக்கு பக்தியோடு பாடி னார்கள் என வரலாறுகள் குறிப்பிடுகின்றன. வர லாற்று நிபுணர்கள் குறிப்பிடும் கருவியான 'அபா கஸ்' அக்காலத்தில் கடவுளுக்கு அருகில் வைத்துப் பூசை செய்யப்பட்டது. இதனை அக்காலத்தில் மிக வும் கீழ் மட்டத்தைச் சேர்ந்த ஒருவன் படமாக வரைந்ததால் கோபம் கொண்ட அவ்வூர் மக்கள் அவனை கல்லால் அடித்தே கொன்றதாகவும் கூறப்படுகின்றது. கடவுளுக்கு பூசை செய்ய உயர் தகுதியுடைய மக்கள் இருந்தததைப்போல் கணி தத்தைக் கற்பதற்கு உயர்தகுதி வேண்டும் என்ப தனையும் கடவுளும் கணிதமும் சமன் என்பதை யும் இவ்வாறான வரலாற்று நிகழ்வுகள் எமக்கு உணர்த்துகின்றன. முதன் முதலில் கணித இயந் திரத்தை கண்டுபிடித்த பிளேஸ்பஸ்கால் தான் வணங்கும் தெய்வத்தை நோக்கி கூறியது என் னவென்றால் "இது என்னுடையதல்ல உனது அவதாரம்" என்றார்.

இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என வேதங் கள் 4 வகைப்படும். அவ்வாறே சரியை, கிரியை, யோகம், ஞானம் என இறைவனை அடையும் வழிகளும் 4 வகைப்படும். இதைப் போலவே கணிதச் செய்கைகளும் கூட்டல், கழித்தல், பெருக் கல், பிரித்தல் என நான்கு வகைப்படும். இந்நான் கையும் விளங்கினவனால் மட்டுமே கணிதத்தை அடையமுடியும். வேதங்களுள் வேதகணிதம் என் பது முக்கியமானதாகும். இவை கணிதத்தை இல குவாக்குகின்றன. இறைவனை, அவனை அடை யும் வழிமுறைகளைப் பற்றி கூறும் வேதங்கள் கணிதத்தைப் பற்றிக் கூறுவதில் இருந்து கணி தத்துக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பை அறி யலாம்.

மனதை ஒரு நிலைப்படுத்தக் கூடியவனுக்கு எளி தில் அறியக்கூடிய அறிவியலாக கணிதம் விளங் குகிறது. இதைப்போல் அவனுக்கு இறைவனை யும் எளிதில் தனது மனக் கண் முன் கொண்டு வரக்கூடியதாக இருக்கும். இறைவன் எவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயசார்புத்தன்மை கொண்டவரோ அவ்வாறே கணிதமும் சுய சார்புத்தன்மை கொண்டது. இங்கு சுயசார்புத் தன்மை என்பது கணிதம் ஏனைய அறிவியல்களில் தங்குவதில்லை ஏனைய அறிவியல்களே கணிதத்தில் தம்மை வளர்த்துக் கொள்கின்றன என்பதாகும்.

'ஆகஸ்தே கொம்தே' என்னும் அறிவியலாளர் அறிவியலின் அடுக்கமைவை அமைத்து சாதனை படைத்தார். அவரின் அடுக்கமைவின்படி ஏனைய அறிவியலை தாங்கி அடித்தளத்தில் நிற்பது கணிதமே. இதைப்போலவே உலகத்தைத்தாங்கி நிற்பவன் கடவுளே.

*"கணிதமும் கடவுளும் இரண்டென்பார் அறிவிலார்*
*கணிதமே கடவுளாம் என்றுணர்வார் அறிவுளார்*
*கணிதமே கடவுளாகிவிடும் அறிந்தபின்*
*கணிதமே கடவுளாய் அமர்ந்திருந்தாரே"*

இப்பாடலின் கருத்து என்னவென்றால் அறிவிலிகளே கணிதத்தையும் கடவுளையும் இரண்டாகக் கருதுவர். ஆனால் அறிஞர்கள் கணிதம் என்பது கடவுள் என்பார்கள். கணிதமும் கடவுளும் ஒன்று என்பதை நாம் அறிந்த பின்னே உணர்ந்துகொள்வோம். ஆனால் கணிதம் தான் கடவுளாய் வீற்றிருக்கிறது என்பதே உண்மையாகும்.

பைதகரசின் தேற்றத்திலே செம்பக்கம் தவிர்ந்த ஏனைய இரு பக்கங்களிலும் வரையப்படும் சதுரங்களின் பரப்பளவுகளின் கூட்டுத் தொகை செம்பக்கத்தில் வரையப்படும் சதுரத்தின் பரப்பளவிற்கு சமன் என்பதைப் போல, லௌகீக வாழ்க்கையினதும், ஆன்மீக வாழ்க்கையினதும் கூட்டலால் தான் இறைஅருள் உருவாகும். இதேபோல கணிதத்தின் அடிப்படையாகிய எண்களுக்கு ஆதியும், அந்தமும், வரையறையும் இல்லாததைப்போல இவ் உலகத்தின் அடிப்படையாகிய ஆண்டவனுக்கும் ஆதியும், அந்தமும், வரையறையும் இல்லை.

கடவுளைப் பாடிப் புகழ்ந்த அதேவாயாலே தான் ஔவையார் "எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்" என்கிறார். அதாவது கணிதமும் இலக்கியமும் எம் இரு கண்களுக்கு நிகரானவை. அவனின்றி ஓரணுவும் அசையாது" என கடவுளின் பெருமையைக் கூறுவர். அவ்வாறான ஒவ்வொரு அசைவையும் இன்று கணிதத்தால் விளக்க முடியும். ஆகவே கணிதமும் கடவுளும் ஒன்றை ஒன்று விட்டுப்பிரிக்க முடியாதவை என்ற உண்மையை உணர்ந்து வாழ்வோமாக.

இக் கட்டுரையை எனது மதிப்பிற்குரிய நண்பன் காலஞ்சென்ற செ.இளஞ்சேய் அவர்களிற்கு சமர்ப்பிக்கின்றேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வவுனியாவும் நரசிம்மர் வழிபாடும்


வ.சி. கேசவன்

தமிழ்த்துறை கலைப்பீடம்


"விளாங்குளம்" என்று முன்பு அழைக்கப்பட்ட வவுனியா, வடமாகாணத்தின் தலைவாசலாக விளங்குகின்ற எழில்மிகு பிரதேசமாகும். வன்னிப் பிரதேசத்தின் முக்கியமானதொரு பகுதியாக விளங்குகின்ற வவுனியாவில் வசித்த மக்களில் பெரும்பாலானோர், விவசாயத்தையே நம்பி வாழ்ந்து வந்தனர். இதனால் பிரதேசம் எங்கும் குளங்களை அமைத்த இவர்கள், விவசாயத்தின் மீது கொண்டிருந்த தீராக்காதலினால் தமது கிராமங்களிற்கும் விவசாய நடவடிக்கைகளைப் பிரதிபலிக்கும் பெயர்களைச் சூட்ட முற்பட்டனர். இதனால், வவுனியாவில் உள்ள 95 வீதமான ஊர்களின் பெயர்கள் "குளம்" எனும் பின்னொட்டைக் கொண்டு முடிவடைவதனையும், ஏனையவற்றில் சில, மடு, ஓடை, மோட்டை, வயல் போன்ற பின்னொட்டுக்களைக் கொண்டு முடிவடைவதனையும் காணலாம். இவ்வாறு, கிராமங்களிற்குப் பெயர் சூட்டியவர்கள், தம் பிரதேசங்களைச் சோலைகளாகவும் ஆக்கினர். இங்கு வழிபாட்டு முறைகளும் சிறப்பாகப் பேணப்பட்டன. எனினும், வவுனியாவில் காலங்காலமாக வழிபடப்பட்ட தெய்வம் எதுவெனவும் அதன் ஆலயம் எது வெனவும் அறுதியாக கூற இயலாத சூழ்நிலை காணப்படுகிறது. இவை தொடர்பான ஆய்வுகள் பெருமளவில் இடம்பெறவில்லை. யாழ்ப்பாணத்தினைப் போன்றதொரு சைவமரபு வவுனியாவில் காணப்படாமையினாலும், தொடர் இடப்பெயர்வுகளை வவுனியா சந்தித்தமையினாலும், வவுனியா மக்கள் பொருளாதார, கல்வி ரீதியில் பின்தங்கி இருந்தமையினாலும், காலப்போக்கில் "வன்னியர்" என்ற சொல்லாடலினை, யாழ். பிராந்தியங்களில் வசித்தோர், தாழ்வான வகுப்பு என்ற நோக்கில், புறநடையாகப் பொருள் கொண்டமையினாலும், வவுனியாவின் வழிபாட்டு முறைகள் பெரிதாகக் கருத்திற் கொள்ளப்படவில்லை. தற்போதைய சூழ்நிலையில், வவுனியாவில் உள்ள பல ஆலயங்கள் ஆகம மயமாக்கலிற்கு உட்படுவதனை அவதானிக்க முடிகிறது. ஓரிரண்டு ஆலயங்களே தொடர்ந்தும், கிராமிய முறைசார் வழிபாடுகளைப் பேணி வருகினறன. அவ்வகையில் அமையும் ஆகம முறைசாராத நரசிம்மர் வழிபாடு தொடர்பாகவே இக் கட்டுரை ஆராய்கிறது.

"நரசிம்மர்" என்பது விஷ்ணுவின் அவதாரங்களிலொன்று மனித உடலையும், விலங்கு முகத்தையும் கொண்டு இரணியனை அழிக்க விஷ்ணு எடுத்த அவதாரமே இது. நரசிம்மருக்கான வழிபாடுகளை பூந்தோட்டம், பம்பைமடு, இயங்காவூர் போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்படுவதனை அவதானிக்கலாம். பம்பைமடு, இயங்காவூர் பகுதிகளில் ஆகம முறைசாராத பூசை வழிபாடுகள் தொடர்ந்தும் இடம்பெறுவதனைக் காணமுடிகிறது.

வவுனியா நகரில் இருந்து 14 கிலோமீற்றர் தொலைவில் மன்னார் வீதியில் பூவரசன்குளம், செக்கட்டிப்புலவு போன்ற கிராமங்களின் அருகில் இயங்காவூர் என்ற அழகிய கிராமம் அமைந்திருக்கிறது. ஜே.பி.லூயிஸ் அவர்களது தகவல்களின்படி 1817 ஆம் ஆண்டிற்கு முன்பே இங்கு மக்கள் வசித்திருக்கின்றனர். பல ஆண்டுகளாக நரசிம்மர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாடு இங்கு சிறப்பாக ஆற்றப்பட்டு வருவதனை அவதானிக்கலாம். ஆரம்பத்தில் இத் தெய்வமானது. ஊர் எல்லையில் ஆள் நடமாட்டம் இல்லாத பகுதியில் வழிபடப்பட்டது. பின்னர் வசதி கருதி இவ்வூரினுள் உள்வாங்கப்பட்டது. இக் கோயிலின் அருகில் கணபதி, கண்ணகி போன்ற தெய்வங்களிற்கான கோயில்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கும் பூசாரியார்களினாலேயே பூசை நிகழ்த்தப்படுகிறது. நரசிம்மருக்கு பரிவார மூர்த்திகளாக, தென் மேற்கு மூலையில் மறிகார பைரவனும், வட மேற்கு மூலையில் கம்பளி பைரவனும், வாயிலுக்கு நேராக காடேறி பைரவனும், உள்ளன. வருடத்தில் ஒருமுறையே சிறப்பான முறையில் பூசைகள் இடம்பெறுகின்றன. பூசாரிமரபில் வந்தவர்கள் அதனை ஆற்றுகின்றனர். ஆனி மாதம் வரும், பூரணை தினத்திற்கு அண்மித்த வெள்ளிக்கிழமை மாலையில் "மாலை முழக்கம்" என்ற பறையடித்தல் நிகழ்வுடன் பூசை ஆரம்பமாகும். பூசையின் முதல் அம்சமாக "நோர்ப்பு நோர்தல்" என்ற மூதாதையர் வழிபாடே இடம்பெறும்.ஆலயத்திற்கு அருகில் தடிகளை நாட்டி வெள்ளைத்துணியினால் மறைத்துக் கட்டுவர். அதனுள் பூசாரி மரபில் தோன்றிய மூத்த பூசாரியின் திருவுருவப்படத்தையும், பூசைக்குப் பயன்படும் சகல பொருள்களையும் வைத்துப் பூசை செய்வர். அதன்போது மூதாதையர் பூசாரி மூலமாக வெளிப்பட்டு பூசை செய்வதற்கான அனுமதியைக் கொடுப்பார். அவ்வாறு கொடுத்த பின்னரே, தெய்வங்களிற்கான பூசைகள் இடம் பெறும். இந் நிகழ்வின் பின்பு, அன்னதானம் வழங்கப்படும். அதனைத் தொடர்ந்து பண்டமெடுக்கும் நிகழ்வு இடம்பெறும். இதன்போது பூசைப் பொருள்கள் யாவும், குறித்த ஓரிடத்தில் வைக்கப்பட்டு பூசை செய்யப்பட்டபின்னர் பறைமுழங்க ஆலயத்தினுள் எடுத்து வரப்படும். நள்ளிரவு 12 மணியளவில் மடைபரவுதல் இடம்பெறும். நரசிம்மருக்கு மடைபரவுகின்றபோது வெள்ளை வேட்டியை விரித்துப் பரவுவர். இதன்போது வெள்ளை வேட்டியின் பகுதி சிறிதளவும் வெளியே தெரியாத வண்ணம் வெற்றிலை கொண்டு மடையிடுவர். ஆனால், நரசிம்மரின் பரிவாரமாக இவர்கள் வழிபடும் கம்பளி பைரவனுக்கு மடையிடும்போது அலங்கோலமாகவே மடையிடுவர். மடைபரவியதன் பின்னர், வளந்து நேருதல் இடம்பெறும். பொங்கலிடுவதற்கான அரிசியைப் பெறும் முறையும் வித்தியாசமானது. "ஆண்கள் நெல்குத்தும் சடங்கு" என்ற சடங்கு இடம்பெறும். ஆண்களே உரலில் நெல்லைக் குத்துவர். இதன்போது பெறப்படும் அரிசியையே பொங்கலிற்காகப் பயன்படுத்துவர். இவ்வாலய பரிவாரத் தெய்வங்களிற்கான பூசைகள் தனித்துவமான முறையில் இடம்பெறுவதனை அவதானிக்க முடிகின்றது. "மறிகார பைரவன்" என்ற பரிவாரத் தெய்வம், மந்தைகளை மேய்க்கும் கடவுளாகக் கருதப்பட்டு, கிராம மக்களினால் வழிபடப்படுகின்றதனை நோக்கலாம். தமது மந்தைகளை இத்தெய்வம் பாதுகாக்கும் என்று கிராமமக்கள் நம்புகின்றனர். "வார்க்கந்து" என்பது, இத் தெய்வத்திற்கான பூசையில் முக்கிய இடம்பெறுகின்றது. வார்க்கந்து என்பது, மாட்டுத் தோலினால் உருவாக்கப்பட்ட கயிறாகும். இத் தெய்வத்திற்கு பூசை செய்யும் போது, பூசாரி மீது இத் தெய்வம் உருவாடும். இதன்போது, தன்னை மறிகார பைரவன் போல் அபிநயித்துக் காட்டும். மாடு மேய்ப்பதனைப் போலவும், கட்டி அவிழ்ப்பதனைப் போலவும், பால் கறந்து காய்ச்சிக் குடிப்பதனைப்போலவும் அபிநயிக்கும். "காடேறி பைரவன்" என்ற தெய்வமும் பரிவாரத் தெய்வமாக உள்ளது. இது காட்டில் உறையும் தெய்வமாகும். முன்னைய காலங்களில் வேட்டைக்குச் செல்ல முன்னர், தாம் தேடிச் செல்லும் விலங்குகள் கிடைக்கவேண்டும் என இத் தெய்வத்தை வழிபடுவர். வேட்டையாடி வந்த பின்னர், மிருகத்தின் இரத்தத்தையும், தேனையும், செந்நிறப் பூக்களையும் கொண்டு வழிபாடாற்றுவர். சிலர், வேட்டையாடிய இடத்திலேயே அம்மிருகத்தின் ஈரலை வாட்டி, பன்னம் இலைகளைப் பரப்பி படையல் படைத்து வழிபட்டனர். இவ்வாலயத்தில், காடேறி பைரவனுக்கு படையிலட வாழை இலைகளோ, வேறு பொருட்களோ பயன்படுத்தப்படுவதில்லை. காட்டில் "பன்னம்" எனப்படும் மரத்தினை வெட்டிக் கொண்டுவருவர். அதனை நீர் ஊற்றித் தூய்மைப்படுத்துவர். பின்பு, அதன் இலைகளை எடுத்து இத் தெய்வத்திற்கு முன்னால் பரப்பி, அதன் மீதே படையிடுவர். இத்தெய்வத்தை சிறு பிள்ளைகள், பெண்கள் வழிபடுவதில்லை என்பதும் குறிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடத்தக்கது. "கம்பளி பைரவன்" என்ற பரிவாரத் தெய்வமும் இங்கு காணப்படுகிறது. முன்பு குறிப் பிட்டதனைப் போல, இதற்கு மடை பரவும்போது, எதுவித ஒழுங்குமில்லாது அலங்கோலமாகவே மடைபரவப்படுகிறது. இத் தெய்வத்தின் அடையா ளமாகச் சூலம் காணப்படுகிறது. பெரியதொரு இரும் புச் சங்கிலியால் சூலத்தைத் தூணுடன் சேர்த்துப் பூட்டி வைத்திருக்கின்றனர். இவ்வாலயத்தில் பலி யிடலும் இடம்பெறுகின்றது. வெள்ளை, கறுப்பு, பொறி வெள்ளைச் சேவல்கள் மாத்திரமே இங்கு பலியிடப்படுவது குறிப்பிடத்தக்கது.

பூசைகள் யாவும் முடிவடைந்தவுடன், பறையொலி முழங்க பூசாரியாரை வீட்டிற்கு அனுப்பி வைக்கும் சடங்கு இடம்பெறும்.

நரசிம்மர் வழிபாடு இடம்பெறும் இடங்களில் ஒன் றாக, பம்மைபடு எனும் கிராமமும் விளங்குகின் றது. இதுவும் ஒரு பழைய கிராமமே ஆகும். இங் குள்ள நரசிம்மர் கோயிலில், நரசிம்மருக்குரிய அடை யாளமாக திரிசூலமே காணப்படுகிறது. கணபதி, நரசிம்மர், காடேறி பைரவன் ஆகிய தெய்வங்க ளிற்கு இங்கு வழிபாடாற்றப்படுவதுடன், வருடப் பூசையின்போது ஏனைய பரிகலன்களிற்கும் வழிபா டாற்றப்படுவதனைக் காணலாம். வருடாந்த பூசை யானது ஒரு நாளே நடைபெறுவதுடன், பூசை யின் ஆரம்பமானது இத் தெய்வத்தைப் பரம்பரை யாக ஆதரித்து வருவோரின் வீட்டிலேயே நடை பெறுகின்றது. "பண்டாரம்" எனப்படுபவர், முருக னது வேலை இவர்களது வீட்டில் வைப்பர். அதன் பிறகு பூசைகள் இடம் பெற்று பகல்வேளையில் சமைத்த உணவு பரிமாறப்படும் பின்பு, மாலை ஆறு மணியளவில், மாலை முழக்கத்துடன் (பறை வாத்தியம் இசைக்கப்படல்) பூசைப் பொருள்களை இவ் வீட்டில் இருந்து, ஆலயத்திற்கு எடுத்துச் செல் வர். கொண்டுசெல்லும் பூசைப்பொருள்கள், பூசாரி யின் அணிகலன்கள் யாவற்றையும் கட்டாடி எனப் படுவோரால் விரிக்கப்பட்ட வெள்ளைத்துணியில் வைத்து மூடிவிடுவர். பின்பு பூசாரியார் தீபங்காட் டிய வண்ணம் அதனை மூன்று முறை சுற்றி வரு வார். அதன்போது அவர் தெய்வமாடத் தொடங்கி விடுவார். தெய்வமாடியே வளந்துப் பானைகளை உரியவர்களது பூசாரியாரது இரத்த உரித்துடை யோர் தோளில் வைப்பர் இதன் போது, வெள்ளைத் துணியினால் பானை வைக்கப்பட்டவரை மூடிவி டுவார். பின்பு, குறித்தவொரு இடத்தில் வெள்ளைத் துணி விரித்து அதன் மீது இவ் வளந்துப் பானை களை வைப்பர். ஒன்பது மணியளவில், மடைபர வுதல் இடம்பெறும். கட்டாடி எனப்படுபவர் வெள் ளையை (வெள்ளைத் துணி) கோயில் வாசலில் விரிப்பார். பூசாரி கலையாடிய வண்ணம், கடகப் பெட்டியில் உள்ள பச்சை அரிசியை மூன்று முறை அள்ளி வெள்ளை மீது போடுவர். அதன் பின்னர், ஏனைய பக்தர்கள் பூசைப் பொருள்களைக் கொண்டு மடைபரவுவர். நள்ளிரவு பன்னிரெண்டு மணிக்கு நிலத்தில் அடுப்பு வெட்டி பொங்கத் தொடங்குவர். நரசிங்கர், காடேறி பைரவன் ஆகிய தெய்வங்க ளிற்கு வெண்பொங்கலும், கணபதிக்கு சர்க்கரைப் பொங்கலும் படைப்பர். அதிகாலை ஆறுமணிக்கு பூசைகள் இடம்பெறும். இதன் இறுதி நிகழ்வாக "வழிவிடுதல்" என்பது இடம் பெறும். அதாவது, பூசை யின் ஆரம்பத்தில் துஸ்டதேவதைகள், பரிவாரங்கள் என்பவை மந்திரம் மூலம் கட்டப்படுமாம். இவற்றை அவிழ்த்து விடுதலையே இந் நிகழ்வு குறித்து நிற் கின்றது. இதன் பின்னர், பூசாரியினை மேளதா ளங்கள் முழங்க, வீட்டிற்கு அழைத்துச் செல்லல் இடம்பெறும். "வீட்டு வேள்வி" எனும் நிகழ்வு பூசா ரியின் வீட்டில் இடம்பெறும். இதன்போது மாமிச உணவுகள் சமைக்கப்பட்டுப் பரிமாறப்படும். இந்த நிகழ்வுடன் வருடப் பூசை நிறைவு பெறும்.

இவ்வாறு வவுனியா மாவட்டத்தில் காணப்படும் நரசிம்மர் வழிபாடு குறித்துச் சுருக்கமாக ஆராய முடியும். இவ்வாறான வழிபாடுகள் இடம் பெற்ற பல ஆலயங்கள் ஆகமமயமாக்கலிற்குள் உள்வாங் கப்படுவதனையும் அவதானிக்கமுடிகின்றது. இவ் வாறான வழிபாட்டு முறைகளை மேற்கொள்வது நாகரிகம் அல்ல எனவும், பிராமணரே பூசை செய் யத் தகுதியுடையோர் எனவும் புறநடையான கருத் துக்கள் மக்கள் மனதினை ஆழமாகப் பாதித்திருப் பதனையும் உணர முடிகின்றது. பாரம்பரிய வழி பாட்டு முறைகளைத் தொடர்ந்து பேண, உந்து தளிக்க எவரும் முன்வராமையினாலும், தொன் மையான மரபுகளின் முக்கியத்துவம் குறித்தான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிப்புணர்வு மக்களிடையே காணப்படாமையும் இவ் வழிபாடுகள் அருகிச் செல்ல வழி சமைக்கின் றன. இவற்றைப் போன்ற வழிபாட்டு முறைகள் காலவோட்டத்தில் முற்றாக அழிவடையக்கூடிய அபாயம் இருப்பதனால், இவற்றைத் தொடர்ந்து பேண ஊக்குவிக்கப்பட வேண்டிய தேவையும் இருக்கிறது. காலவோட்டத்தில் ஏற்படும் மாறுதல் களை ஏற்றாக வேண்டும். எனினும், பாரம்பரிய வழிபாட்டு முறைகளைப் பேணிக்காக்க வேண்டிய பொறுப்பு எங்கள் ஒவ்வொருவர் மீதும் சுமத்தப்பட் டிருப்பதனை நாம் மறந்து விடமுடியாது.

**உசாத்துணைகள்**

*சதாசிவம், ப.(2013) ஆலய வரலாறு:*
*வவுனியா இயங்காவூர்பதி, ஸ்ரீவிக்னேஸ்வரர் கண்ணகை அம்பிகை,*
*வீரபத்திரர், நரசிங்கமூர்த்தி, பூவரசன்குளம்;*
*ஆலய பரிபாலனசபை*

*சுப்ரமணியம்.வே (முல்லைமணி) (2009)*
*வன்னியன் கதை*
*கொழும்பு - சென்னை*
*குமரன் பதிப்பகம்.*

*Lewis J.P (1895) "Manual of the Vanni Districts"*
*Colombo,*
*H.C. Cottele Acting Govet.*
*printer ceylon.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாடி ஜோதிடம்

ராமசுப்பிரமணியம் ரோஹினி

மருத்துவபீடம்

அடுத்தநொடி என்ன நிகழப்போகின்றது என்று தெரியாத புதிர்ப்பெட்டகமே வாழ்க்கை. இதுவே வாழ்வின் உயிர்நாடியாகவும் திகழ்கிறது என்றாலும் எதிர்காலத்தைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வமோ மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவரிடத்திலும் என்றும் நிலைகொண்டிருக்கிறது என்பது யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மையாகும். இந்த ஆர்வமே கிளிஜோதிடம் முதல் கம்பியூட்டர் ஜோதிடம் வரை அனைத்திற்கும் வித்திட்டிருக்கிறது என்றால் மிகையாகாது.

நம் அனைவரினது வாழ்க்கையும் அதில் நிகழப்போகும் தீயதின் வீரியத்தை பூஜை, பரிகாரங்கள் மூலமும், தானதர்மங்களின் மூலமும் சற்றேனும் குறைத்துவிடமாட்டோமா என்ற ஏக்கத்திலேயே ஜோதிடர்களின் உதவியை நாம் நாடுகின்றோம். இதுவும் ஒரு விதத்தில் எமது இயலாமையின் வெளிப்பாடே என்று கூறினாலும் மிகையாகாது என்பது என் கருத்து. இவ்வாறான எமது இயலாமையை பயன்படுத்தி பணம் பறிக்கும் கும்பல்கள் அதிகரித்து விட்ட இன்றைய காலகட்டத்திலும் உண்மையை எடுத்துக்கூறும் சிலரும், சில வழிமுறைகளும் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றில் பெரும்பாலான மக்களால் நம்பப்படும் ஒன்று தான் நாடி ஜோதிடம்.

ஆயிரமாயிரம் வருடங்களுக்கு முன்னர் சப்தரிஷிகளால் அவர்களின் ஞானசக்தியைக் கொண்டு எழுதப்பட்ட ஓலைச்சுவடிகள் இந்தியாவின் சிதம்பரத்திலுள்ள மிகவும் புகழபெற்ற ஆலயங்களில் ஒன்றான வைத்தீஸ்வரன் ஆலயத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டு இருந்தன. சக்தி தையல் நாயகி எனவும், சிவன் வைத்தீஸ்வரனாகவும் போற்றப்படும் இவ் ஆலயத்தின் இறைவன் வைத்தீஸ்வரன் என்ற பெயருக்கமைய இங்குவரும் அடியார்களின் நோய் நொடிகள் அனைத்தையும் தீர்க்கக்கூடிய வல்லமை கொண்டவர் என நம்பப்படுகிறது. அதுமட்டுமன்றி இத்தலத் தீர்த்தமான சித்தாமிர்த குளத்தில் நீராடினால் சரும நோய்கள் நீங்கும் என்றும் கூறப்படுகிறது. இவ்வாறான சிறப்புக்கள் வாய்ந்த ஆலயத்தில் பேணப்பட்டு வந்ததாலோ என்னவோ இந்தச் சுவடிகள் தனிச்சிறப்பு வாய்ந்தவையாக விளங்குகின்றன. தற்போது இந்தியாவிலும், நம் ஈழத் திருநாட்டிலும் பல்வேறு இடங்களில் இதற்கான நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஓலைச் சுவடிகளின் தோற்றம் இந்தியாவில் என்றாலும், இந்தியர்களது மட்டுமல்லாது உலகின் பல்வேறு மூலைகளிலும் வாழ்ந்த, வாழும் மேலும் இனிமேல் பிறக்கப்போகும் பல இலட்சம் மக்களின் சுவடிகள் இதில் அடங்குவதாகக் கூறப்படுகிறது. ஆனால் விந்தை என்னவென்றால் ஒரு மனிதன் எப்போது, எங்கே தன் சுவடியிலுள்ள தகவல்களை அறிந்து கொள்வான் என்பதுகூட ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டு இருப்பதாகவும், உரிய காலத்தில் மட்டுமே அது அவனிடம் வந்து சேரும் என்றும் கூறப்படுவதுதான்.

ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்துவமான அடையாளமாக இன்றைய அறிவியலிலும் ஏற்றுக்கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளப்பட்ட கைரேகையே அவரவருக்கான ஓலைச் சுவடியை அறிந்து கொள்ள உபயோகிக்கப்படுகின் றது. ஆண்களாயின் வலதுகை பெருவிரலிலும், பெண்களாயின் இடதுகை பெருவிரலிலும் ரேகை அடையாளங்கள் எடுக்கப்படுகின்றன. 108 வகை யான கைரேகை வகைகளில் மிகப்பொருத்தமா னதை தேர்ந்தெடுத்து அந்த ரேகைக்குரிய ஓலைச் சுவடிக் கட்டுக்களில் இருந்து குறித்த நபருக்கான சுவடியை தேர்ந்தெடுக்கும் ஆரம்பப் படிமுறை மிக முக்கியமானதாகவும், நாட்கள் முதல் மாதங் கள் வரை காத்திருக்கவேண்டியதாகவும் அமை கின்றது. ஒவ்வொரு சுவடியிலிருந்தும் நம்மைப் பற்றி கூறப்படும் தகவல்கள் சரி அல்லது தவறு என கூறவேண்டியதே இங்கு எமது பாகமாகும். ஏதே னும் ஒரு தகவல் தவறாயினும், அந்தச் சுவடி நிரா கரிக்கப்படும். இவ்வாறு அனைத்து தகவல்களும் பொருந்திய பின்னரே பலன்கூறுவதும் தொடரப் படுகிறது.

நாடி ஜோதிடத்தில் பதினாறு காண்டங்கள் உள் ளடங்குகின்றன. முதல் காண்டம் நமது தற் போதைய வாழ்க்கையில் பொதுவான தகவல்களைக் கூறுவ தாக அமைகின்றது. இதில் பெயர், பெற்றோரின் பெயர், சகோதர, சகோதரிகள் பற்றிய தகவல்கள், வாழ்க்கைத்துணை பற்றிய குறிப்புக்கள் மேலும் வாழ்க்கைக் காலம் பற்றிய சாராம்சம் என்பன குறிப் பிடப்படுகின்றன. இரண்டாவது காண்டத்தில் கல்வி, குடும்பவிவரம், செல்வம் பற்றிய விவரங்களும் மூன்றாவது காண்டத்தில் சகோதரர்கள் பற்றிய தக வல்களும் விவரிக்கப்படுகின்றன. நான்காம் காண் டத்தில் குறித்த நபரின் தாயைப்பற்றியும் வீடு, வாகனங்கள் போன்ற சொத்துக்கள் பற்றியும் குறிப் பிடப்பட்டுள்ள வேளையில் ஐந்தாம் காண்டம் குழந் தைப் பாக்கியம், அவர்களின் வாழ்க்கை முறை யைப்பற்றி விளக்கும். ஆறாம் காண்டம் நோய், நொடி கள் பற்றியும், ஏழாம் காண்டம் திருமண வாழ்க் கையைப் பற்றியும் எட்டாம் காண்டம் வாழ்க் கைக் காலம் பற்றியும் விவரங்களை எடுத்துரைக் கும். ஒன்பதாம் காண்டத்தில் தந்தை, பரம்பரை சொத்துக்கள் பற்றிய தகவல்களும் பத்தாம் காண் டத்தில் வியாபாரம் பற்றியும், பதினோராம் காண் டத்தில் இரண்டாம் மணம் சாத்தியமா? இல்லையா? என்பதும் அதனை பற்றிய விளக்கங்களும் இருக் கும். இவ்வாறு தொடர்ந்து வரும் காண்டங்களில் முறையே அடுத்த ஜென்மம் பற்றிய தகவல்கள், கடந்த ஜென்மம் மற்றும் அதில் பெற்ற பாவங்களுக் கான பரிகாரங்கள், பயன்விளைவிக்கும் மந்திரங் கள், ஞானவாழ்வு பற்றிய விவரங்கள் மற்றும் சமூக வாழ்வு எவ்வாறு இருக்கும் என்ற தகவல்கள் உள் ளடங்குகின்றன.

இவ்வாறாக அனைத்து தகவல்களையும் தெள் ளத்தெளிவாகக் கூறும் இந்தச் சுவடிகளில் பரிகா ரங்களும் கூறப்பட்டுள்ளன. இன்றைய 21 ஆம் நூற்றாண்டில் அறிவியலின் துணையுடன் எவ்வ ளவோ உச்சங்களைத் தொட்டுவிட்ட விஞ்ஞானிக ளால்கூட அடுத்த நிமிடம் தன் வாழ்வில் நிகழப் போவதையேனும் ஊகிக்க முடியாதுள்ள நிலை யில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த வர்கள் எப்படி இவ்வளவு கச்சிதமாக இன்று நிக ழப்போகும் வாகனவிபத்தை எதிர்வு கூறமுடியும் என்பது புரியாத புதிராகவே நிகழ்கிறது. ஜோதிடம் பார்த்தலும் மூடநம்பிக்கைகளில் ஒன்றாகவே பல ரும் கருதத் தொடங்கிவிட்ட இந்நாளிலும்கூட நாடி ஜோதிட ஓலைச் சுவடுகள் நம் முன்னோரின் அப ரிவிதமான ஆற்றலை பறைசாற்றும் சிறந்ததொரு சான்றாகவே அமைகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாவ புண்ணியங்கள்

ப.தீபிகா

பல் மருத்துவ பீடம், ௨0௧௨ ஆம் ஆண்டு

இந்த உலகில் நாம் எவருமே பாவியாக இருக்க விரும்பவில்லை. ஆனால் பாவ காரியமே அதிகம் செய்கிறோம். நாம் எல்லோருமே புண்ணிய பயன் பெறத்தான் விரும்புகிறோம். ஆனால் புண்ணிய காரியங்களைச் செய்வதில்லை.

"பாவம் செய்ய யாருமே விரும்பவில்லை. ஆனாலும். கிருஷ்ணா! அவனை எதுவோ பாபத்திலேயே பலாத்காரமாகத் தூண்டிக் கொண்டிருக்கிறதே. அது என்ன?" என்று அர்ஜுனன் பகவானைக் கேட்கிறான்.

"அதுதாண்டா அப்பா. ஆசை. ஆசை என்பது" என்று பகவான் பதில் சொன்னார்.

ஆசையினால் ஒன்றை அடைய முயல்கி றோம். எப்படியாவது அதை அடைந்து விட வேண்டும் என்பதால் தர்ம அதர்மங்களைப் புறக்கணித்து விடுகிறோம். அந்த ஆசை நிறைவேறிவிட்டால் அது அணைந்தா போகிறது? மேலும் மேலும் பெரிதாக வளர்கிறது. அப்படியே ஓர் ஆசை பூர்த்தியான மனதில் இன்னோர் ஆசை பெரிதாக மூளுகிறது.

சரி. அப்படியான ஆசை நிறைவேறாவிட்டால் நல்லது என்று சொல்லவா! அப்படியும் இல்லை. ஆசை நிறைவேறாவிட்டால் நமக்கு ஆத்திரம் உண்டாகிறது. சுவரில் எறிந்த இறப்பர் பந்து திரும்புவதுபோல் நிறைவேறாத ஆசையானது கோபமாகத் திரும்பி வந்து நம்மைப் பாவத்தில் மேலும் தள்ளுகின்றது. ஆசைக்கு அடுத்தபடி இந்தக் குரோதத்தைத்தான் பகவான் கீதையில் சொன்னார். இதுவும் ஆசையின் விளைவுதான்.

இதை எப்படி செய்வது! நாம் காரியம் பண்ணாத போதுகூட நம் மனது காரியம் பண்ணிக் கொண்டே தான் இருக்கிறது. எதையாவது எண்ணிக் கொண்டே இருப்பதுதான் மனதின் காரியம்.

"சிந்தையை அடக்கியே சும்மாயிருக்கின்ற திறம் அரிது" என்று தாயுமான சுவாமிகள் சொன்னார். உடலின் காரியத்தைக் கொஞ்சம் நிறுத்தினால் கஷ்ட சித்தத்தின் காரியம் நிற்கமாட்டேன் என்கிறது. அதுதான் காரியம் செய்வதோடு உடலையும் காரியத்தில் ஏவிவிடுகிறது.

ஆசையை நேராக நிறுத்த முடியவில்லை. காரியத்தையும் நிறுத்த முடியவில்லை. என்றால் நமக்கு கதி மோக்ஷமே இல்லையா? இப்பிரச்சினைக்கு தீர்வே இல்லையா? இருக்கிறது. அதாவது. இப்போது நாம் இருக்கிற நிலைமையில் காரியத்தை அடியோடு நிறுத்தி விட வேண்டு மென்பதில்லை. ஆனால். நம் சொந்த ஆசைகளுக்காகவே காரியம் செய்து கொள்கிறோம் என்று வேண்டாம்.

கோபகரமாகவும். நமக்கே ஆத்மார்த்தமாகப் பலன் தருவதாகவும் இருக்கப்பட்ட காரியங்களில் இறங்க வேண்டும். இப்படிப்பட்ட காரியங்களில் ருசியை உண்டாக்கிக் கொண்டு மேலும் மேலும் ஈடுபடுகிற போது. ஆசைகளும் குறைந்து கொண்டே வரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. பாவம் குறைகிறது. புண்ணியம் ஏறுகிறது. அதாவது இப்போது நாம் செய்யவேண்டியது என்னவென்றால் ஆசையில்லாமல் காரியம் செய்யப்பழக வேண்டும். ஆசையில்லாமல் செய்வது தான் புண்ணிய காரியம்.

நாம் இப்போது நான்கு விதங்களில் பாவம் செய்கிறோம். உடலால் பல கெட்ட காரியம், வாயால் புரளிப் பேச்சும் அசத்தியமும், மனதினால் கெட்ட நினைவுகள், பணத்தினால் செய்கிற பாவத்தைச் சொல்லவே வேண்டாம். எந்த நான்கால் பாவம் செய்தமோ அந்த நான்காலுமே புண்ணியம் செய்யப்பழக வேண்டும்.

உடலைப் பரோபாகாரம், பகவானைப் பிரதக்ஷிணம் நமஸ்கரிப்பது இவற்றில் ஈடுபடுத்திப் புண்ணியம் செய்ய வேண்டும்.

வாயால் பகவத் நாமாவைச் சொல்லிப் புண்ணியம் செய்யவேண்டும். சம்பாதிப்பதிலேயே பொழுதெல்லாம் போய்விடுகிறது. இதற்கு அவகாசம் இல்லையே என்பீர்கள். சம்பாதிப்பது கிருஹஸ்தர்களுக்கு அவசியம்தான். ஆனால், யோசித்துப் பார்த்தால் அதற்கே பொழுது முழுவதும் போய்விடவில்லை என்று தெரியும்.

மனது பகவானின் இடம் இல்லை. அதைக் குப்பைத் தொட் டியாக்கி இருக்கிறோம். அதைச் சுத்தப்படுத்தி மெழுகி, பகவானை அமரவைத்து, நாமும் அமைதியாக அமர்ந்து விடவேண்டும். தினமும் ஐந்து நிமிடங் களாவது இப்படித் தியானம் செய்ய வேண்டும்.

பணத்தைக் கொண்டு பகவானுக்கும் ஏழைகளுக்கும் பலவிதங்களில் தர்மம் செய்து புண்ணியம் சேர்க்க வேண்டும். பாவத்துக்கு இரண்டு சக்திகள் ஒன்று, நாளைக்கு இதே தவறை நாம் செய்யுமாறு தூண்டுவது, உதாரணமாக, பொடி போடுவது அன்றைக்கு கெடுதல் செய்கிறது. அத்தோடு நில்லாமல் நாளைக்குப் பொடி போடவும் தூண்டுகிறது. இதுதான் பழக்க வாசனை என்பது. இந்த வாசனையை மங்கவைத்து, புண்ணியங்களைச் செய்து , செய்து புண்ணிய வாசனையை ஏற்றவேண்டும்.

நம்மைப்போல் இருந்தவர்கள் நம்மைவிட மகா பாவிகளானவர்கூட பக்தர்களாகவும், ஞானிகளாகவும் ஆகியிருக்கின்றார்கள். பாவிகளை ரட்சிக்கா விட்டால் ஈஸ்வரனுக்குத்தான் என்ன பெருமை? நாம் பாவியாக இருப்பதாலேதான் அவனுக்கு 'பதிதபாவனன்' என்ற விருது கிடைக்கிறது. அவனுக்கு அந்த பெருமையை நாம் தான் கொடுக்கின்றோம்!

"என்னை மட்டும் சரணைந்துவிடு! நான் உன்னை எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவிக்கிறேன் - ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச - பயப்படாதே" என்று தீர்மானமாக அபய வாக்குத் தருகிறார் ஸ்ரீகிருஷ்ண பராத்மா.

அதனால் நாம் தைரியமாக இருப்போம். எத்தனை சுற்றுச் சுற்றினாலும் அத்தனையையும் திருப்பிச் சுற்றினால்தான் கட்டு சுழலும். பாவ வாசனை அவ்வளவும் தீர அத்தனை புண்ணிய வாசனை உண்டாக வேண்டும். நடுவே அவசரமும் ஆத்திரமும் வேண்டாம்.

அப்படிச் செய்தால் சுற்று சிக்கலாகி முடிச்சு விழுந்துவிடும். பொறுமையாக பகவானை நம்பி நம் தர்மத்தைச் செய்தால் நிச்சயம் கைபொடுப்பான்.

மனோ வாக்குக் காயங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக இந்திரிய வியாபாரத்திலிருந்து திருப்பி பகவானிடம் வைத்துப் பழகுவதற்குத்தான் இத்தனை மதங்களும் தோன்றியிருக்கின்றன. ஜீவனாகப்பட்டவன் இந்திரிய சுகங்களுக்காகச் செய்கிற பாவங்களிலிருந்து அவனை மீட்பதற்காகத்தான் ஒவ்வொரு பெரியவரும் தோன்றி ஒரு மதத்தைக் கொடுத்து விட்டுப் போயிருக்கிறார். பாவத்தினால், இந்திரிய சுகத்தினால் கிடைக்கிற ஆனந்தம் ரொம்பவும் தற்காலிகமானதுதான்.

"பரமாத்மாவைச் சேர்ந்திருப்பதுதான் நிரந்தரமான ஆனந்தம்" என்றென்றும் புண்ணியம்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனங்கள் மாற வேண்டும்

சா.சதீஸ்

நான்காம் வருடம் பொறியியற் பீடம்

தொன்மை தொட்ட இந்து மதம் தமிழின் தொன்மைக்கும் ஒரு சான்று. மனிதகுலத்தின் செம்மை வாழ்விற்கு அர்த்தம் பகிர்வது சிந்தையில் உறங்கும் இறை உணர்வே. இன்றோ இயற்கைகளும், செயற்கைகளும் தம் இயல்புகளை வெளிக்கொணர ஆடிப்போகும் உயிர்கள் இறை எண்ணத்தை தேடுகின்றது.

கல்வி மான்களுக்கும் ஒரு அமைதியான அக மனதை அகத்தில் ஊன்றுவதற்கு சிறுகுன்றிலே அமர்ந்திருக்கும் குறிஞ்சிக்குமரன் ஆலயம் அமைக்கப்பட்டு இற்றைக்கு ஆண்டுகள் அயர்ந்திருக்கிறது. இதற்கு

*"இன்று நடை தளர்ந்தும்*
*நரை விழுந்தும் தள்ளாடும்*
*ஆண்டுகளுக்கு முந்திய இளைஞர்களே சாட்சி"*

ஆலயம் அர்த்தச் சிறப்பு பெற்று நிற்பதற்கு பேராதனையின் தமிழ் சமூகமே அடியொற்றி நிற்கிறது. கடந்து வந்த காலங்களில் பல்கலைக்கழக சமூகம் இந்து மதத்தின் மீதும், தமிழ் மொழி மீதும் கொண்டிருந்த ஒப்பற்ற பற்றுணர்வுகள் தற்போது ஆலயம் சிறப்புப்பெற்றிருப்பற்கு காரணம் எனக் கூறிக்கொள்வதிலும் தவறில்லை. ஒரு வகையில் இத்தன்மையின் விளைவாக இந்து கலாசாரத்தின் தொன்மைத் தன்மை தொடர்ந்தும் தலை நிமிர்ந்து நிற்கிறது. மனிதன் மனிதனாக வாழ்வதற்கு அதாவது மனதில் அகங்கார ஆணவத்தன்மையை அகற்றி அகத்தில் அமைதியை விதைப்பதற்கு ஆலயத்தின் நிலவுகையே கருப்பொருளாக அமைகின்றது.

இவ்வாலயத்தின் சிறப்பிற்கு பேராசிரியர்களினதும், பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்படும் தமிழ் மாணவர்களினதும் பற்றுள்ள பணிகளுமே கூடிய பங்கினைத் தொட்டு நிற்கின்றது. இவ்வாலயத்தின் எதிர்காலம் என்பது இங்கே கல்வி தொடரும் மாணவர்களினையே அதிகம் சார்ந்திக்கிறது. சிறப்பான வாழ்க்கையின் அனு கூலங்களை அடைவதற்காக மனிதகுலம் ஏதோ ஒரு தெய்வத்தையேனும் வணங்க வருகின்றது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்விபயிலும் மாணவர்கள் தங்கள் மனதில் எழும் எண்ணங்களுக்கேற்ப ஆலயத்தை தரிசித்து வருகின்றார்கள். குறிப்பாக கடந்த மூன்று வருடங்களில் மாணவர்கள் இவ்வாலயத்தை எவ்வகையில் அணுகுகிறார்கள் என்பதை சற்று ஆராயவேண்டும்.

இவ்வாலயம் சிறப்புடன் நிலைத்திருப்பதற்கு பல்கலைக்கழக சூழலுக்கு அதாவது இந்து மதத்தினை தம் அகத்தே வைத்து வழிபடும் மாணவ சமூகத்துக்கு ஏற்புடையதாக உள்ளது. ஆனால் ஆலயம் தொடர்ந்தும் சிறப்புப் பெறவேண்டும் எனில் அவர்கள் ஆலயத்தின் மீது கொண்டுள்ள பற்றுணர்வின் தொடர்ச்சித் தன்மையே இங்கு அவசியமாக உள்ளது. அதாவது ஆலயத்தின் செயற்பாடுகளில் இவர்களின் பங்கு என்பது மிகவும் எதிர்பார்க்கப் படுகிறது. இவ்வாறு இருக்கையில் பல்கலை மாணவர்களின் ஈடுபாடுகள் தொடர்பில் சற்று அவதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னிக்க வேண்டிய தேவை இங்கே எழுகின்றது.

இந்தச் சூழலில் அமைந்திருக்கும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பல பீடங்கள் இருக்கிறது. இப் பீடங்கள் எல்லாவற்றிலும் இந்து மாணவர்கள் இருக்கிறார்கள். மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக ஆலயத்தில் நடைபெறும் சரியைத் தொண்டுகள் என்றாலும் சரி, சிறப்பு பூசை வழிபாடென்றாலும் சரி பக்த்தர் கூட்டம் தொடர்ச்சியாக சற்று அதிகமாகத்தான் இருந்து வந்திருக்கிறது. தற்போது கூட அவ்விதமான தொண்டுப் பணிகளிலும் வழிபாடுகளிலும் தொடர்ச்சித் தன்மை இருப்பினும் அத் தன்மை மெல்லக் குறைந்து செல்வது கண்கூடாக அவதானிக்க முடியும்.

*"உடல் கீறி விதை போட்டால்*
*உரமின்றி மரமாகும்*
*கடல் மீது வலை போட்டால்*
*கரையெங்கும மீனாகும்*
*மதம் என்னும் சேலையைப் பற்றி*
*இந்தா ஒருவன் தெருவில்*
*இழுக்கின்றான், பார்த்துவிட்டுப்*
*படுத்துறங்குபவனே*
*நீட்டிப்படு*
*உனக்கும் நெருப்புட்டிக் கொளுத்த*
*அவனுக்கு வசதியாக இருக்கட்டம்"*

மாற்றம் வராவிடின் இந்த கால் நீட்டிப்படுப்பவனுக்கு ஒப்பாகிவிடுவோம்.

ஒவ்வொருவருடைய மனங்களும் இறைமனம் கொண்டதாக இருப்பினும் குறிஞ்சிக்குமரன் ஆலயத்தின் எதிர்கால நிலவுகைக்கு பல்கலைக் கழக பக்தர்களின் பணிகள் எந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் தம் அகத்தில் இருத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு ஆலயத்தின்பால் ஈர்க்கப்படும் எண்ணங்கள் மனங்களில் விதைக்கப்படுவதை இங்கே இரண்டு விதமாக நோக்க முடியும். ஒன்று பல்கலைக்கழகத்துக்குள் மாணவர்கள் புகுந்து கொள்ளும் காலப்பகுதியில் இளையோரை வழி நடத்தும் செயற்பாடுகளில் காட்டும் ஈடுபாடும் அர்ப்பணிப்புத் தன்மையும் இங்கே பல்கலைக் கழகத்துக்குள் நுழைகின்ற போது அநேக மாணவர்கள் இவ் ஆலய சூழல் தொடர்பாக அதாவது முழுமையாக சூழலை அறியாத சிந்தை உள்ளவர்களாகவும் வெற்றுத் தன்மை கொண்ட மனங்களை உடையவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் ஆலயச் சூழல் நோக்கி தங்களின் மனங்களை திசை திருப்பிக்கொள்ள முனைகின்ற போது ஆலயத்தின் செயற்பாடுகளில் முன்னையவர்கள் எவ்வாறு ஈடுபடுகிறார்கள் என்பதையும் அவர்கள் மற்றவர்களை எவ்வாறு வழிநடத்துகிறார்கள் என்பதையும் அவதானித்தே ஆலயத்தில் தங்களின் எதிர்கால செயற்பாடுகளை புதுமுக மாணவர்கள் ஈடுபடுத்த கடந்த காலங்களில் முனைகிறார்கள் செய்தும் இருக்கிறார்கள். வெறுமனே வழி நடத்துனர்களாக இருந்து விடாமல் புதிதாக வருபவர்களுடன் தங்களையும் இணைத்துக் கொண்டு அணுகும் தன்மையே இங்கே முக்கியத்துவம் பெறுகிறது.

இரண்டாவது இயல்பாக சிந்திக்கும் தன்மை அதாவது ஆலயம் தொடர்ந்தும் இங்கு சிறப்பாக விளங்க வேண்டும் என்ற உள்ளத்திலெழும் சிந்தனை வெளிப்பாடு ஒவ்வொருவரிலும் குடி கொள்ள வேண்டும். காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப தம்மை மாற்ற வேண்டியதன் அவசித்தை ஒவ்வொருவரும் தெளிவாக புரிந்துகொண்டு செயற்படுவது சாலச் சிறந்ததே.

கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது தற்போது ஆலயம் என்ற எண்ணக்கவுருக்குள் அடங்கி தொண்டுகளில் ஈடுபடும் தொண்டர்களின் எண்ணிக்கையும் செயற்பாடுகளும் சற்று மாங்கியே செல்கிறது. நாட்டில் அசாதாரண சூழ் நிலைகள் நிலவுகின்ற தருணத்தில் ஆலயத்தில் பெரியளவிலான தாக்கம் செலுத்தும் சந்தர்ப்பம் தற்போது வரைக்கும் குறைவாக இக்கின்ற போதும் காலம் என்பது மாற்றங்களை உண்டு பண்ணக்கூடிய திறனைக் கொண்டுள்ளது. எனவே காலத்தின் தேவைகளுக்கேற்ப ஆலயச் சூழலை மாற்றுவதற்கு மனங்கள் மாற வேண்டும். இல்லையேல் காலம் நம்மை மிதித்துச் செல்லும் என்பது கண்கூடு.

ஓர் இனத்தை அடையாளப்படுத்துவதில் மதம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாரம் என்பன துணை போகின்றது. அந்த வகையில் தொன்மை தொட்ட தமிழ் இனத்தின் அடையாளங்கள் காப்பாற்றப்பட வேண்டுமெனில் தமிழின் அடையாளங்களும், மதக் கோட்பாடு களையும் கலாசாரத்தையும் தெளிவான பாதையி னூடாக நகர்த்திக்கொள்வதில் கல்விச் சமூகம் தெளி வான சிந்தனையுடைய மனங்களால் நிரப்பப் பெற் றவர்களாக மாற வேண்டும். ஆன்மிக உணர் வினை குறிஞ்சிக்குமரனுக்காய் செப்புகின்ற போது வரும் வரிகளிவை...

*சும்மா காற்றில் பற்றியா இந்தத் தீ மூன்றது*
*இந்த அனல் பிடித்தெரிவது எத்தனை காலம்*
*எத்தனை பேரைத் தீய்த்து*
*இந்தத் தீ வளர்க்கிறோம்*
*அணையவிடக் கூடாது*
*ஊதிக் கொண்டேயிரு*
*பற்றியெரியப் போகுதெனப் பதறட்டும்*
*ஆன்மிகத் தீயை ஆலயத்தில்*
*ஊதுவதை நிறுத்தி விடாதே*
*இந்தத் தீயின் சுவாலையில் தான்*
*குறிஞ்சியின் அருளைக் காண வேண்டும்.*
*ஆகையால் ஓய்ந்து விடாதே...*
*அத்தனைக்கும் உந்தன் மனதை மாற்று.*

குறிஞ்சிக் குமரன் ஆலயத்தின் சிறப்பை தொடர்ந் தும் குன்றில் நிலை நிறுத்தவேண்டுமெனில் பல்க லைக்கழகத்தில் கல்விபயில வரும் அனைத்து தமிழ் இந்து மாணவர்களினதும் ஆலயம் நோக்கி வரும் பக்கதர்களினதும் சிந்தையில் தன்னலம் மறந்து பொதுநலம் என்ற தொனிப் பொருளுக்காக மனங் களை மாற்ற வேண்டியதே ஆலயத்தின் எதிர்கா லத்தின் சிறப்புத் தன்மைக்கு ஒவ்வொருவரும் செய்ய வேண்டியது அகம் பூத்த அறப்பணியா கும். எல்லாவற்றுக்கும் மனதில் மாற்றம் வேண் டும். குறிஞ்சிக்குமரன் மீது செலுத்தும் பக்தி நிறைந்த ஆன்மிகத்துக்காக மனங்கள் மாற வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சோதனை மேல் சோதனை

கி.பிரசாந்,

இறுதியாண்டு, பொறியியற்பீடம்

இன்றைய நவநாகரிக உலகில் மனிதன் தனது வேண்டத்தகாத செயல்களின் மூலம் தனக்கும் தன்னைச் சார்ந்தோருக்கும் துன்பத்தைத் தேடிக் கொள்கின்றான். இறுதியில் தனக்கு அத்துன்பம் நேர்ந்ததற்கான பழியை இறைவன் மீது சுமத்தி ஆண்டவனையும் தூற்றுகின்றான். எனினும் வையத்தில் வாழும் முறைப்படி வாழும் இறையடியாருக்கும் துன்பங்கள் நேர்வதை நாம் காண்கிறோம். அவ்வேளையில் தன்னை நம்பியோருக்கும் இறைவன் ஏன் இத்தகைய துன்பங்களை அளிக்கின்றான் என நாம் குழப்பமடைவதுண்டு.

செயல்களனைத்தும் செயற்படுத்துவோனாகிய இறைவன் கட்டளைப்படியே நிகழ்கின்றன. இது நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய உண்மை. போர்க்களத்தில் போரிடத் திராணியற்றுச் சோர்ந்து போய் அமர்ந்து விட்ட அருச்சுனனை நோக்கி கண்ணபிரான் கூறும் வாக்கியங்கள் இங்கு ஈண்டு நோக்கற் பாலது.

*"அருச்சுனா நீயும் போர்க்களத்தில் போரிடக் கூடியிருக்கும் அனைவரும் வெறும் கருவிகள் மட்டுமே ஏற்கனவே எடுக்கப் பட்ட முடிவின்படி செயல்களைப் புரிவதே உங்கள் கடமை. உங்கள் அனைவரையும் கட்டுப்படுத்துவதும் இயக்குவதும் நானே எனவே பழிவரும் என அஞ்சாது உனக்கு விதிக்கப் பட்ட கடமையைச் செய்வாயாக"*

மேலும் தன் மீது மாறா பக்தி கொண்ட அடியாரின் பெருமையை உலகறியச் செய்யவே இறைவன் அவர்களுக்கு அவ்வாறான சோதனைகளை அளிக்கிறான். அந்த வகையில் ஒரு சில இறையடியாரின் பெருமையை இறைவன் உலகறியச் செய்த விதங்களைப் பார்ப்போம்.

## கண்ணை அப்பிய கண்ணப்பர்

பொத்தப்பி எனும் நாட்டின் வனப்பகுதியில் வாழும் வேடர் குலத்தில் திண்ணன் என்பான் வாழ்ந்து வந்தான். அக்கூட்டத்தின் தலைவனாகிய அவன் தந்தை வயோதிபம் காரணமாக தலைமைப் பதவியைத் திண்ணனுக்கு அளிக்க முடிவு செய்தான். இதன்படி, தலைவனாக்கப்பட்ட திண்ணன் தனது கன்னி வேட்டையை நிகழ்த்துவதற்காக தனது நண்பர்களான நாணன் மற்றும் காடன் ஆகியோருடன் காளத்தி மலைக்குப் புறப்பட்டான்.

வெகுநேரம் வேட்டையாடிக்களைத்த காரணத்தால் அவர்கள் ஓய்வெடுக்க முடிவு செய்தனர். அப்போது காடன் என்பான் காளத்தி மலைக்கு எதிர்ப்புறத்தே பொன்முகலி ஆறு ஓடுவதாகவும் அங்கேயே ஓய்வெடுக்கலாம் என்பதோடு அருகிலுள்ள 'குடுமித் தேவர் எனும் சிவ மூர்த்தத்தையும் வணங்கி வரலாம் எனக் கூறினான். அதன்படி பொன்முகலி யாற்றங்கரையை அடைந்த மூவரும் ஆற்றில் நீராடி குடுமித் தேவரையும் வணங்கினர்.

குடுமித்தேவர்மேல் பக்தி வசப்பட்ட திண்ணன் அங்கிருந்து நீங்க மனமின்றி, தான் அங்கேயே தங்கி பெருமானுக்கு வழிபாடு செய்ய விரும்புவதாகக் கூறி நண்பர்களை அனுப்பிவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் திண்ணன் காலையில் வேட்டைக்குச் சென்று நன்கு வளர்ந்த பன்றியைக் கொன்று அதை நெருப்பிலே வாட்டி அவற்றில் சிலவற்றைச் சுவைத்து சிறந்த இறைச்சியை எடுத்துக்கொண்டு பொன்முகலியாற்றுக்குச் செல்வான். அங்கு ஆற்று நீரை வாயில் நிரப்பிக் கொண்டு காட்டுப் பூக்களைப் பறித்துத் தலையில் செருகிக் கொண்டு சிவலிங்கத்தினடியில் செல்வான். வாயிலே உள்ள நீரை உமிழ்ந்து சிவலிங்கத்தைக் குளிபாட்டி, பூச்சூட்டி பன்றி இறையைச்சியை அதற்குப் படைப்பான் இறைவன் சிந்தனையில் மகிழ்வெய்துவான்.

இதேவேளை, சிவகோசரியார் என்பார், அச் சிவலிங்கத்துக்கு நாள் தோறும் பூசை செய்து வணங்கி வந்தார். ஆசாரம் மிகுந்த பிராமணரான அவருக்கு சில நாட்களாக அங்கு நடைபெறும் அநாசாரங்கள் வேதனையை ஏற்படுத்தின. இறை சந்நிதியில் மாமிசத்தைப் போட்டது யார் என்று அவர் குழம்பினார். இச்சிந்தனையில் அவர் ஒருநாள் உறங்குகையில் இறைவன் அவர் கனவில் வந்து திண்ணன் தன்னை வழிபடுவதைப் பற்றிக் கூறி அவன் பக்தியை நாளை உலகறியச் செய்வதாகவும், நாளை அவன் வழிபாடு செய்கையில் மறைந்திருந்து அதனைக் காணுமாறும் கூறி மறைந்தார்.

இறைவன் கட்டளைப்படி மறு நாள் காலை குடுமித்தேவருக்குப் பூசை செய்து முடித்தவுடன் சிவகோசரியார் ஒரு மறைவிடத்திலிருந்து அங்கு நடப்பதை அவதானிக்கலானார். வழக்கம் போல் பன்றி இறைச்சிப் படையலுடன் அங்கு வந்த திண்ணன் சிவலிங்கத்தின் ஒரு கண்ணிலிருந்து குருதி வழிவது கண்டு பேரதிர்ச்சியுற்றான். செய்வதறியாது திகைத்த அவன் மனந்தெளிந்து, ஊறுபட்ட உறுப்புக்கு இன்னோர் உறுப்பே பரிகாரம் என முடிவு செய்தான். தன் அம்பறா தூணியிலிருந்து அம்பு ஒன்றை எடுத்த திண்ணன் தன் இடது கண்ணைக் கொய்தான். அக் கண்ணைக் குருதி வழியும் இடத்தில் அப்பினான். இரத்தம் வழிவது நின்றது. மகிழ்வு கொண்ட திண்ணன் இறைவனை வணங்கினான்.

ஆனால் மறுகணமே சிவலிங்கத்தின் மறுகண்ணிலிருந்து குருதி கொட்டத் தொடங்கியது. சற்றும் தயங்காது திண்ணன் தன் கால் பெருவிரலை அடையாளத்துக்காக குருதி வழியும் இடத்தில் வைத்துக்கொண்டு மறு கண்ணையும் கொய்யத் தயாரானான். அப்போது இறைவன் அசரீரி வடிவில் "நில்லு கண்ணப்பா" என அறிவித்து திண்ணனைத் தடுத்தருளினார்.

நடந்த நிகழ்வுகளைக் கண்டு சிவகோசரியார் வியப்பு மேலிட இறைவனைப் போற்றினார். இறைவனும் திண்ணனுக்கு முத்திப்பேறு அருளினார். தன் கண்ணை அப்பிய காரணத்தால் திண்ணன் அன்று முதல் கண்ணப்பர் என அழைக்கப்பட்டார்.

## பிள்ளைக்கறியுண்ட பெருமானார்

திருச்செங்காட்டங்குடி எனும் ஊரிலே சிறுத் தொண்டர் எனும் அடியவர் வாழ்ந்து வந்தார். இவர் நரசிம்ம பல்லவன் எனும் மன்னனின் சேனாதிபதியாகப் பணியாற்றினார். சிவனடியாருக்குப்பணி செய்வதைப் பெரும் பேறாகக் கருதிய அவர் சேனாதிபதி பதவியைத் துறந்து அல்லும் பகலும் சிவனடியாருக்கு அமுது படைக்கும் கைங்கரியத்தைச் செய்துவந்தார்.

இவர் பக்தியை உலகுக்கு அறிவிக்க இறைவன் திருவுளம் கொண்டார். சண்டாளன் வேடம் பூண்ட இறைவன் உடல் முழுவதும் திருநீறணிந்து சிறுத்தொண்டர் இல்லம் அடைந்தார். சிறுத்தொண்டர் அவ்வேளை வெளியில் சென்றிருந்தார். வந்த சண்டாளன் சிறுத்தொண்டரை அழைத்தான். வெளியே வந்த அவர் மனைவி சிறுத்தொணடர் வெளியில் சென்றிருப்பதாகக் கூறி வீட்டினுள் வருமாறு அழைத்தார். எனினும் சண்டாளன் வீட்டினுள்வர மறுத்து வெளியே இருந்த ஆல மரமொன்றின் அடியில் அமர்ந்து கொண்டான்.

வெளியே சென்றிந்த சிறுத்தொாண்டர். அன்று அமுது படைக்க சிவனடியார் ஒருவரையும் காணாத நிலையில் வீட்டையடைந்தார். அவரைக் கண்ட மனைவி சண்டாளன் வந்த கதையைக் கூறி அவன் ஆலமரத்தினடியில் இருப்பதாகவும் கூறினாள். ஆலமரத்தடிக்கு விரைந்த சிறுத்தொண்டர் சண்டாளனைக் கண்டு அவரை உணவு உண்ண வரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறு அழைத்தார்.

எனினும் அதனை மறுதலித்த சண்டாளன் சிறுத் தொண்டரால் தான் கேட்கும் உணவை வழங்க முடியாது எனக் கூறினான். அது கேட்டு மனஞ் சோர்ந்த சிறுத்தொண்டர். அடியவர் விரும்பும் உணவு எது என வினாவினார். அப்போது சண்டாளன் தனக்கு ஐந்து வயது நிரம்பிய சிறுவன் ஒருவனின் மாமிசம் வேண்டும் என்றும், அதனை அவனது தாய் தந்தையரே தயார் செய்து தர வேண்டும் எனவும் கூறினான்.

அப்போது சிறுத்தொண்டர் தங்கள் மகனை எந்தப் பெற்றோரும் பலியாகத் தரவிரும்பார் என எண்ணிச் சோர்ந்து வீடுதிரும்பினார். வாடிய முகத்துடன் சிறுத்தொண்டர் வருவது கண்ட அவர் மனைவி சிவனடியார் பற்றி விசாரித்தார். சிறுத்தொண்டர் சிவனடியார் விரும்பும் உணவைப் பற்றிக் கூறினார். அதனைக் கேட்ட அவர் மனைவி மலர்ந்த முகத்துடன் நமது பிள்ளை சீராளன் உணவாகத் தகுவானே என உரைத்தாள். மகிழ்ந்த சிறுத்தொண்டரும் அவரது மனைவியும் சேர்ந்து பிள்ளையை அறுத்து கறி சமைத்தனர். விருந்து தயாரானதும் சிறுத்தொண்டர் அடியவரை உணவுண்ண அழைத்தார்.

விருந்துண்ண அமர்ந்த சண்டாளன். சிறுத் தொண்டரையும் அவர் மனைவியையும் தன்னுடன் சேர்ந்து விருந்துண்ண அழைத்தான். வேறு வழியின்றி சிறுத்தொண்டரும் அவர்மனைவியும் சண்டாளனுடன் விருந்துண்ண அமர்ந்தனர். அப்போது சண்டாளன் சிறுத்தொண்டரிடம் அவரது மகனையும் உணவு உண்ண அழைக்குமாறு கூறினான்.

செய்வதறியாது திகைத்த சிறுத்தொண்டர் தனது மகனையே கறியாக்கிய செய்தியை அவனிடம் தெரிவித்தார். அதனை ஏற்றுக்கொள்ளாத சண்டாளனோ வெளியில் சென்று சீராளனைக் கூப்பிடுமாறு சிறுத் தொண்டரிடம் கூறினான். அவ்வாறே சிறுத் தொண்டரும் வெளியில் சென்று "சீராளா" என அழைத்தார் என்ன ஆச்சரியம்! பாடசாலையிலிருந்து வருவது போல சீராளன் வீட்டை நோக்கி ஓடி வந்தான்.

நடந்த நிகழ்ச்சிகளால் திகைப்படைந்த சிறுத் தொண்டர் வீட்டினுள் புகுந்து அடியவரைத் தேடிய போது, சண்டாளன் இருந்த இடத்தில் சோதிப்பிளம்பாகத் தோன்றிய இறைவனைக் கண்டார். சிறுத்தொண்டரின் பக்தியை மெச்சிய இறைவன் அவருக்கு முத்திப்பேறு அளித்தார்.

## மனைவியைத் தானம் செய்த இயற்பகையார்

காவிரிப்பூம் பட்டினத்தில் இயற்பகையார் என்ற தன வணிகர் வாழ்ந்து வந்தார். அவர் சிவனடியாருக்குச் சேவை செய்வதில் இன்பம் கண்டார். அடியாருக்கு வேண்டிய தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றுவார். இவரது பக்தியை உலகுக்கு காட்ட விழைந்த இறைவன் சிவனடியார் வேடம் பூண்டு இயற்பகையார் வீட்டை அடைந்தார். சிவனடியாரை முறைப்படி வரவேற்று உபசரித்த இயற்பகையார் அடியவர் வேண்டுவது யாது என வினாவினார்.

சிவனடியாராக வந்த இறைவன் இயற்பகையாரிடம் உம் மனைவியை நாடியே உம்மிடம் வந்தோம் எனப் பதிலளித்தார். இதனைக் கேட்டுச் சற்றும் பதற்றமடையாத இயற்பகையும் அடியவர் வேண்டுவதை வழங்குவது தம் கடமையென்று உணர்ந்து தம் மனைவியிடம் சென்று விடயத்தைக் கூறினார். இது கேட்ட அவர் மனைவியும் தன் கணவனின் தர்மத்துக்கு பங்கம் விளைவிக்கக் கூடாது என எண்ணி அச்சிவனடியாருடன் செல்ல இசைந்தார்.

இயற்பகையின் மனைவி தன்னுடன் வருவதற்கு இசைந்ததை அறிந்த சிவனடியார் மகிழ்ந்தாராயினும், இயற்பகையின் உறவினர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பர் என எண்ணிப் பயந்து அதனை இயற்பகையிடம் கூறினார். அது கேட்ட இயற்பகையும் தம் உறவினாகள் அடிய வருக்குத் தீங்கு இழைக்காமலிருக்கத் தானே துணை வருவதாக் கூறி அவருடன் புறப்பட்டார்.

இயற்பகையின் செயலை அறிந்த உறவினர்கள் வெகுண்டு, அடாது செய்த இயற்பகைக்கும் அப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலி அடியவனுக்கும் தக்க பாடம் புகட்ட வேண்டும் எனத் துணிந்து ஆயுதங்களுடன் அவர்களை எதிர்க்கலாயினார். இயற்பகையும் சளைக்காது ஆயுதம் ஏந்தி தம்மை எதிர்த்த உறவினர்களுடன் போரிட்டு அவர்கள் அனைவரையும் கொன்றொழித்தார். அதன் பின் அடியவருடன் ஊர் எல்லை வரை சென்றார். ஊர் எல்லையை அடைந்ததும் அடியவர் இயற்பகையை நோக்கி இனி எமக்குத் தீங்கொன்றும் நேராது. எனவே நீ வந்த வழியே திரும்புவாயாக" எனக் கேட்டுக்கொண்டார். இயற்பகையும் தான் அடியவருக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றிய திருப்தியில் வந்த வழியே திரும்பிப் பயணிக்கலானார்.

அப்போது "இயற்பகையே ஓலம்" என அடியவர் அழைத்தார். அவ்வொலி கேட்ட இயற்பகையும் அடியரின் இடத்துக்கு விரைந்து அவருக்கு நிகழ்ந்த ஆபத்து யாதென வினவினார். அப்போது அடியவரின் இடத்தில் இடப வாகனத்தில் இறைவன் எழுந்தருளினார். நடந்தது யாவும் இறைவன் திருவிளையாடல் என்று அறிந்து இயற்பகையும் ஆனந்தக் கண்ணீர் சொரியலானார்.

அப்போது இறைவன் இயற்பகையிடம் "அடியவரை ஆதரிக்கும் உன் பண்பால் நாம் மகிழ்ந்தோம். இனி நீ சிவலோகத்தில் என்னோடு இருப்பாயாக" என விளம்பி அவருக்கு முத்திப்பேறு அளித்தார்.

## தாலியை விற்று தூபமிட்ட குங்குலியக் கலயர்

திருக்கடவூர் அட்ட வீரட்டானத் தலங்களில் ஒன்றாகும். காலனைக் காலால் உத்தைத்த அமிர்த கடேசுவரர் இவ்வூரில் உறைகின்றார். இவ்வாறு சிறப்புற்ற இவ்வூரிலே கலயர் எனும் பக்தர் வாழ்ந்து வந்தார். தினந்தோறும் திருக்கடவூர் அமிர்த்தகடேசுவருக்கு குங்குலியம் காட்டும் திருப்பணியை இவர் மேற்கொண்டு வந்தார். இதனால் இவர் குங்கிலியக் கலயர் என அழைக்கப்பட்டார்.

இவரின் இறை பக்தியை உலகுக்குக் காட்ட இறைவன் விரும்பினார். எனவே கலயரின் செல்வம் தேயுமாறு செய்தார். வறுமை வந்துற்ற போதிலும் கலயர் குங்கியலிம் இடும் திருப்பணியை வழுவாது செய்து வந்தார். வீட்டில் செல்வம் சுருங்கிய காரணத்தால் கலயரின் மனைவியும். பிள்ளைகளும் உணவின்றி வாடினார்.

ஒருநாள் பிள்ளைகள் பசியால் வருந்துவது பொறுக்காத கலயரின் மனைவி தனது மாங்கல நாணில் அணிந்திருந்த தாலியைக் கழற்றிக் கலயரிடம் கொடுத்து, அதனை விற்று உணவுப் பொருட்களை வாங்கி வருமாறு வேண்டினார். தாலியைப் பெற்றுக் கொண்ட கலயர் உணவுப் பொருட்கள் வாங்கச் சந்தைக்குச் சென்றார். அங்கு குங்கிலயம் விற்கும் வியாபாரியைக் கண்டார். குங்கிலிய வியாபாரியைக் கண்ட கலயர் தன்னிலை மறந்தார். தம் மனைவியின் தாலியை வியாபாரியிடம் கொடுத்து குங்கிலியப்பொதி அனைத்தையும் வாங்கிகொண்டார். குங்கிலியப் பொதியைப் பெற்றுக்கொண்ட கலயர் ஆலயத்துக்குச் சென்று ஆண்டவனுக்குக் குங்கிலியம் இடும் திருப்பணியைச் செய்யத் தொடங்கினார். கலயரின் வீட்டில் பசியால் வாடிய குழந்தைகளும், மனைவியும் கலயரைக் காணாது தவித்தனர்.

கலயரின் மாறாத பக்தியைக் கண்ட கடவுளே மனமிரங்கி கலயருக்கு அருளத் திருவுளம் கொண்டார். ஆண்டவன் அருளால் கலயரின் வீட்டில் தானியங்களும் உணவுப் பொருட்களும் நிறையத்துவங்கின. இறைவன் திருவளை வியந்த கலயரின் மனைவியும் தானியங்களைக் கொண்டு உணவு தயாரிக்கத் தலைப்பட்டார்.

இதேவேளை, ஆண்டவனின் அற்புதத்தை அறியாத கலயர் பசி மயக்கத்தால் கோவிலிலேயே உறங்கிவிட்டார். கலயரின் கனவில் தோன்றிய இறைவன் "நீ பசித்தனை! உன் வீடு சென்று பாலன்னம் உண்பாயாக" என அறிவித்தார். கனவு கண்டு விழித்த கலயரும் ஆண்டவன் கட்டளைப்படி நடப்பது நமது கடமை என்று உணர்ந்து வீடு நோக்கி விரையலானார்.

கணவர் வீடு திரும்பியது கண்ட மனைவியும் கலயரை அழைத்து ஆண்டவனின் அருட்கிருபை பற்றி விவரித்தார். ஆண்டவன் கருணையை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணி வியந்த கலயரும் கண்ணீர் மல்க இறைவனைத் தொழுதார். அவ்வேளை இறைவனும் அசரீரி வடிவில் இறைபணியில் இன்புறும் உனக்கு முத்திப்பேறளித்தோம்" என அறிவித்து அவருக்குச் சிவலோகப் பதவியளித்தார்.

ஆகவே இவ்வாறான சிவனடியாரின் சரித்தரங்களின் மூலம் நாம் அறிவது யாதெனில் தம் மீது அன்பு கொண்ட மெய்யடியாரின் பக்தியைச் சோதிப்பதற்கும், அவர்தம் பக்தியை உலகறியச் செய்யவுமே இறைவன் இவ்வாறான சோதனைகளைத் தம் பக்கதர்களுக்கு அளித்து திருவிளையாடல் புரிகிறான் என்பதாகும்.

வெறும் வைரக்கல் ஒளி வீசுவதில்லை. வைரத்தில் பளபளப்பை ஏற்படுத்த வேண்டுமானால் அது சரியான முறையில் பட்டை தீட்டப்பட வேண்டும். வைரக்கல் பட்டை தீட்டலின்போது தன்னில் சிறு பகுதியை இழக்க நேரிடலாம். ஆனாலும் இறுதியில் யாவரும் மதிக்கும் ஒளி பொருந்திய பொருளாக அது மாற்றமடைகிறது. அது போலவே இறை பக்தியில் சிறந்த மெய்யடியாரின் உண்மையான பெருமையை உலகறியச் செய்வதற்கான ஒளி மங்கிக் கிடக்கும். அவர்கள் வரலாற்றை வெளிச்சம் போட்டுக் காட்டு வதற்கான பட்டை தீட்டல் செயல் முறையாகவே இறைவன் அவர்களுக்கு அளிக்கும் சோதனைகளை நாம் நோக்க வேண்டும்.

உண்மையான பக்தன் சோதனை வந்துற்ற காலத்திலும் இறைவன் மீது நம்பிக்கை இழக்காமல் அவர் மீது மாறாத பக்தி கொண்டிருக்க வேண்டும். அப்போது தான் அவன் காணும் சோதனைகள் யாவுமே சாதனைகளாக மாறி அவனது நிலையை உயர்த்தி இறுதியில் அவன் முத்திப்பேறடையவும் வழிகாட்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாட்டார் மரபில் முருக வழிபாடு

கலாநிதி திருமதி. சோதிமலர் ரவீந்திரன்

சிரேஷ்டவிரிவுரையாளர், தமிழ்த்துறை பேராதனை பல்கலைக்கழகம்

நாட்டுப்புற மக்களிடையே ஆழமாக ஆதிக்கம் செலுத்தி வந்த சமயம் ஆகமநெறி சாரா சமயமாகும். சிறுதெய்வங்களை அல்லது நாட்டுப்புறத் தெய்வங்களை முன்னிலைப்படுத்திய அச்சமயம், மக்களின் பண்பாட்டில் ஆழமாக வேரோடிப் பரவி இருந்தமையை ஆய்வுகள் பல தெளிவுபடுத்துகின்றன.

நாட்டுப்புறத் தெய்வங்கள் பல்வேறு வகைமைக்குள் அடங்குகின்றன. அவை குடும்பத் தெய்வங்களாகவும், குல தெய்வங்களாகவும், ஊர்த்தெய்வங்களாகவும் விளங்குகின்றன. பொதுவாக இந்நாட்டுப்புறத் தெய்வங்கள் கோயில் பெறும் தெய்வங்களுடன் அல்லது ஆகம முறைப்படி வழிபடும் தெய்வங்களுடன் தொடர்பு கொள்ளாதவையென்றும் இத்தெய்வங்களுக்கான பூசை, திருவிழா என்பன குறிப்பிட்ட காலவரையறையற்றவை என்றும் சு.சக்திவேல் கூறுகிறார்.

மேற்கூறிய அனைத்துத் தன்மைகளையும் கொண்ட முருகன், திருமுருகாற்றுப்படை, கந்த புராணம் போன்ற இலக்கியங்களின் தோற்றத்துடன் திராவிட மரபினையும், வடநாட்டு மரபினையும் பெற்று மேனிலையாக்கம் பெறுவதைக் காணலாம். இந்நிலையினை விநாயகர் வழிபாட்டிலும் நோக்கலாம். தற்போதைய நிலையில் முருகனானவன் இருவேறு வழிபாட்டு முறைக்கும் உட்பட்டவனாகக் காணப் படுகின்றான்.

ஆரம்ப காலங்களில் முருக வழிபாடானது இயற்கையோடு கூடியதாகவே காணப்பட்டது. குறிஞ்சி நிலப்பகுதியில் வாழ்ந்த மக்கள், அந்நிலத்திலுள்ள மரநிழலிலும், சோலைகளிலும், குகைகளிலும் வேலை நட்டு வணங்கி வந்தனர். அத்துடன் அவ்வேலனுக்கு அல்லது அதில் உறையும் தெய்வத்திற்கு கடம்பன், சோலையன், குகன் என்றெல்லாம் அந்தந்த இடத்திற்கேற்ப பெயரிட்டும் மகிழ்ந்தனர். இவ்வாறு குறிகளைத் தெய்வமாக வழிபடுவது நாட்டார் மரபில் முக்கியமான அம்சமாகக் கருதப்படுகிறது.

சங்ககால அக இலக்கியங்கள் முருகனை, காதல் தெய்வமாகவும், இளமை பொருந்தியவனாகவும் குறிப்பிடும் அதேவேளை, புறநூல்கள் முருகனைச் சீற்றமும் வலிமையும் கொண்ட போர்த் தெய்வமாகக் குறிப்பிடுகின்றன. முருக வழிபாட்டில் இடம்பெறும் 'வெறியாடல்' எனும் சடங்கு பற்றி சங்க அக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அதே வேளை இச்சடங்கு நடத்தப்படுவதற்கான காரண காரியங்கள் பற்றியும் இவ்விலக்கியங்களில் விளக்கப்பட்டுள்ளன.

குறுந்தொகை மூலம் பெண்களைக் காதல் நோயினின்றும் விடுவிக்க வெறியாடல் நிகழ்த்தப்பட்டதை அறியலாம். வெறியாடல் பற்றி விளக்கமாகப் பாடிய காமக் கண்ணியார் என்ற புலவரின் அக நானூற்றுப் பாடல்களில் பெண்களின் நோயினைத் தீர்க்கக்கூடிய வெறியாட்டு முறைகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

கபிலர் என்ற மற்றொரு புலவர் வேலனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறியயர் வியன்களத்தினை விளக்கியபின், வெறியாடும் மரபின் காரணத்தையும் விளக்கியுள்ளார். முருகனுடன் தொடர்பான வெறியாடலானது முருக வழிபாட்டில் காணப்படும் பண்பாட்டு வளர்ச்சியற்ற செயலாகத் தென்படினும், குறிஞ்சிக் கடவுளை வேண்டுதற் பொருட்டு பொருட்களோடு வேறுபல காணிக்கைகளையும் செலுத்தி வழிபடும் ஒரு நாட்டுப்புறச் சடங்காகக் காணப்பட்டதெனலாம்.

தொல்காப்பியத்தின் நூற்பாவானது (பொருள் : 113 : 01 - 04) வெறியாடலின் பின்புலத்தினைப் பற்றித் தெளிவாக விளக்குகின்றது :

*"களவு அலராயினும் காமம் மெய்ப்படுப் பினும்*
*அளவு மிகத் தோன்றினும் தலைப்பெய்து காணினும்*
*கட்டினுங் கழங்கினும் வெறியென இருவரும்*
*ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்"*

சங்ககால ஆட்டங்களில் ஒன்றான குரவையாடல் முருக வழிபாட்டோடு தொடர்புடைய நாட்டுப்புற ஆடலாகும். இதனை எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதிமரேனும் கைபிணைந்தாடுவதாக அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகின்றார் (சிலம்பு : 03:2 - 4).

*"குரவை என்பது எழுவர் மங்கையர்*
*செந்நிலை மண்டலக் கடகக் கைகோத்*
*தந்நிலைக் கொப்ப நின்றாடலாகும்"*

களப்பிரர் காலத்தில் தோன்றியதாகக் கூறப்படும் சிலப்பதிகாரத்தில் முருகனின் திருவுருவை வைத்து வழிபடுவதற்கு மாறாக, முருகனைக் குறிக்கும் அடையாளமாக வேலை வைத்து வழிபடும் வழக்கம் இருந்தமை பற்றிக் கணாத்திறன் உரைத்த காதையில் 'வேற்கோட்டம்' என்ற முருகன் கோயில் கூறப்படுவதன் வாயிலாக அறியலாம். எனவே, அடையாளம் அல்லது குறிகளை வைத்து வழிபடுகின்ற நாட்டுப்புற வழிபாட்டை சங்ககால முருக வழிபாட்டிலும் காணக்கூடியதாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் சிலப்பதிகாரத்திலே கோவலனை மகிழ்விக்க மாதவி ஆடிய பதினொரு வகையான நடனங்களுள் சூரனை வென்ற முருகன் ஆடிய துடிக்கூத்தும், குடைக்கூத்தும் குறிப்பிடத்தக்கன. இவ்வாடல்களும் நாட்டுப்புற வழிபாட்டில் முருகனுக்குரிய முக்கியத்துவத்தினைக் காட்டுவனவாக அமைந்துள்ளன. சிலப்பதிகாரக் குன்றக் குரவையில் வள்ளி வழிபாடு பற்றி விபரிக்கப்பட்டுள்ளது :

*"சிறுகுடியீரே சிறுகுடியீரே*
*தெய்வம் கொள்மின் சிறுகுடியீரே"*

மேற்கூறிய பாடலடிகள் மூலம் வள்ளியின் வழிபாடு பற்றி அறியலாம். வள்ளி குறவர் குலத்தைச் சேர்ந்த கிராமியப் பெண். இவளை முருகனுடன் தொடர்புபடுத்துவதனூடாக முருக வழிபாட்டின் கிராமியத்தன்மை வெளிப்படுத்தப்படுகிறது :

*வேலனார் வந்து வெறியாடும் வெங்களத்து*
*நீலப்பறவை மேல் நேரிழை தன் னொடும்*
*ஆலமர் செல்வன் புதல்வன் வரும் வந்தால்*
*மால்வரை வெற்பன் மணவணி வேண்டுதுமே*
*மலைமகள் மகளை நின்மதி நுதல் மடவரல்*
*குலமலை உறைதரு குறவர்தம் மகளார்*
*நிலையுயர் கடவுள் நின்பிணையடி தொழுதேம்*
*பலரறி மணம் அவர் பருகுவர் எனவே*
*குறமகள் அவளெம் குலமகள் அவளொடும்*
*ஆறுமுக ஒருவரின் அடியிணை தொழுதேம்*
*துறைமிசை நினதிரு திருவடி தொழுநர்*
*பெறுக நால் மணம் விடுபிழை மணம் எனவே*
*(சிலம்பு : குன்று : 15 - 18)*

சங்க காலத்தில் முருகனுக்கிருந்த தலைமை திருமுறைக் காலத்தில் சிவனுக்கு ஏற்பட்டிருந்தாலும் பழங்குடி மக்களாகிய குறவர், வேடர் முதலியோரின் வழிபாட்டில் முருகனது தலைமை குறையவில்லை என்பதைத் திருமுறைச் சான்றுகளின் வாயிலாக அறியமுடிகின்றது. அதே போல் முருகனை 'வேலன்' என்று அழைக்கும் பழைய நாட்டார் மரபும் பல்லவர் காலத்தில் காணப்பட்டது.

சோழர் காலத்தில் முருக வழிபாடு பற்றி நோக்குமிடத்து முருகன் போர்க்கடவுளாகவும் குறவர்களின் கடவுளெனவும் குறவர் குலம் வளம்பல பெற்றுச்சிறக்க பலிகளேதுமின்றி வெறியாடும் வழக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்ததென்பது பெரிய புராணம் வாயிலாகத் தெரியவருகிறது.

சோழர் காலத்தைத் தொடர்ந்து வந்த விஜயநகர நாயக்கர் காலப்பகுதியிலும் முருகன் நாட்டுப்புறத் தெய்வமாகவே போற்றப்பட்டுள்ளான் என்பதை அக்காலத்திலெழுந்த குறவஞ்சி போன்ற நாட்டார் இலக்கியங்களில் காணக் கூடியதாகவுள்ளது. முருகனை 'வள்ளியராசா' என்று அழைக்கும் மரபும் காணப்பட்டது. அதே வேளை முருக வழிபாட்டின் வளர்ச்சியில் உச்ச நிலையினையும் இக்காலத்திலேயே காணக் கூடியதாகவும் இருந்தது. இத்தகைய வளர்ச்சிக்கு முருகன் பற்றிய நாட்டார் இலக்கியங்களின் தோற்றமும் காரணமாக அமைந்ததெனலாம். ஆகம முறைப்படி முருகனை வழிபடத் தெரியாத நாட்டார் மக்களுக்கு நாட்டார் மரபினடிப்படையில் முருகனை வழிபடுவது மிகவும் இலகுவாக அமைந்தது. எனவேதான், முருக வழிபாட்டின் மறுமலர்ச்சிக் காலமாகவும் இக்காலம் அமைந்ததெனலாம்.

சங்ககாலம் தொடக்கம் இவ்வாறு நாட்டார் மரபில் வளர்ந்து வந்த முருகவழிபாடானது நாயக்கர் காலத்தைத் தொடர்ந்து மேலும் பல நாட்டார் வடிவங்களில் வளரத் தொடங்கியது. அவ்வடிவங்களை கதைப்பாடல்களாகவும் தெருக்கூத்துக்களாகவும் காணமுடியும். முருக வழிபாட்டுக்கும் தெருக்கூத்து மரபுக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. 'வள்ளி திருமணம்' என்ற தெருக்கூத்து வடிவம் கந்தபுராண இறுதியிலுள்ள வள்ளி வரலாற்றை அடியயொற்றி இன்றும் நிகழ்த்தப்பட்டு வருகிறது. புதுச்சேரி கடலூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள கன்னியக்கோயிலென்ற ஊரிலுள்ள பச்சைவாழியம்மன் வழிபாட்டில் வள்ளி வழிபாடும் முருக வழிபாடும் காணப்படுகிறது. இதனை விளக்கும் முகமாக வள்ளி கதைப்பாடல் அமை கிறது :

*"முந்தி பிறப்பு வள்ளி முப்புராதி யெக்கியத்தில்*
*இரண்டாம் பிறப்பு வள்ளி ராமனிட யெக்கியத்தில்*
*மூன்றாம் பிறப்பு வள்ளி மும்மூர்த்தி யெக்கியத்தில்*
*நாலாம் பிறப்பு வள்ளி நாகேந்திரன் யெக்கியத்தில்*
*அய்ந்தாம் பிறப்பு வள்ளி ஆதிகேசன் யெக்கியத்தில்*
*ஆறாம் பிறப்பு வள்ளி ஆறுமுகனார் வேண்டுமென்று*
*அருந்தவங்கள் செய்யலுற்றாள்"*
*(வள்ளியம்மன் பிறக்கும் பாடல்)*

இக்கதைப்பாடலானது வள்ளியின் ஆறு பிறப்புக்களைக் கூறுவதாகவுள்ளது. வள்ளியின் பிறப்பு மட்டுமல்ல. அவளின் திருமணம் பற்றிக் கூறும் கதைப்பாடலும் நாட்டார் வழிபாட்டு மரபினடிப்படையிலேயே அமைந்துள்ளது.

*"தினை காத்த வள்ளி மீது முருகன் மோகங் கொள்ள*
*நெருப்பில் இறங்கச் சொல்ல வள்ளியும் தீயில்*
*இறங்கி வந்தபின் திருமணமும் நடந்தது அங்கே"*

மேலும், வள்ளி பற்றிய கதைப்பாடல்கள் சில, அவளை வள்ளிக் கிழங்கு தோண்டிய குழியில் பிறந்தவளாகக் குறிப்பிடுகின்றன. இது வள்ளி என்ற பெயர் ஏற்பட்டதை விளக்குவதற்குத் தோன்றிய கதையென்றாலும், பழங்குடியினரின் தெய்வத் தோற்றத்தை விளக்கும் கதையாகவும் அமைந்துள்ளது. இக்கதைகளும் முருக வழிபாட்டின் நாட்டாரியற் தன்மையை விளக்குவதாகவே அமைந்துள்ளதெனலாம்.

முருக வழிபாடு பற்றி நாட்டார் கதைகள் பலவும் குறிப்பிடுகின்றன. அவை முருகன் பற்றிய புராணக் கதைகளாகவும் அமைந்துள்ளன. அவற்றுள் சூரபத்மன் முருகனைத் தூக்கிச் சென்றானென்றும் அவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக கடலில் ஒளித்துக் கொண்டானென்றும் கோயிலில் முருகனைக் காணாததனால் கோயிலுள்ளவர்கள் குடத்துள் முருகனை எழுந்தருளச் செய்து சிவபெருமானை நோக்கி முருகன் திரும்பக்கிடைக்க வேண்டுமென வேள்வி செய்தனர் என்றும் அவ்வாறு வேள்வி செய்தமையே 'கந்தசஷ்டி' என சுப்பிரமணிய சாஸ்திரி குறிப்பிடுகின்றார். இக் கதையானது கி.பி 1648 இல் திருச்செந்தூர் கோயில் முருகன் சிலை டச்சுக்காரரால் கவர்ந்து செல்லப்பட்டதை அடிப்படையாகக் கொண்டு எழுந்திருக்கலாமெனக் கருதலாம். எனவே, முருக வழிபாடு தொடர்பாக புராணக் கதைகள் மட்டுமன்றி நாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டார் கதைகள் பலவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. முருகன் பற்றிய நாட்டாரியற் கதைகள் பெரும்பாலும் புராணங்களுடன் தொடர்புபட்டே காணப்படுகின்றன.

தற்போது அனைத்து முருகன் கோயில்களிலும் கந்தசஷ்டி விழா கொண்டாடப்படுகிறது. இவ் விழாவுக்கான கதையானது நாட்டுப்புற மக்களின் நம்பிக்கையடிப்படையில் தோன்றிய கதையேயாகும். நாட்டுப்புற மக்களின் இத்தகைய கதையை அடிப்படையாகக் கொண்டே ஆசாரங்களும் இடம்பெறுகின்றன.

மேலும், நாட்டுப்புற மக்களிடையே வழங்கப்படும் பழமொழிகள் சிலவும் முருக வழிபாட்டுடன் தொடர்புடையனவாகவுள்ளன. இன்று நம்மிடையே வழங்கப்படும் பழமொழிகளில் 'சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்' என்பதும் ஒன்றாகும். இதற்குப் பாத்திரத்தில் இருந்தால்தான் அகப்பையில் எடுக்க முடியும் என நாம் தவறாகப் பொருள் கொள்கின்றோம். அம் முதுமொழிக்கு, சஷ்டியில் விரதமிருப்பின் கருப்பையில் குழந்தைச் செல்வம் தோன்று மென்பதே பொருத்தமான பொருளாகும். இப்பழமொழியானது நாட்டுப்புற மக்கள் முருகனிடத்து கொண்டுள்ள பயபக்தியையும் நம்பிக்கையையும் காட்டுகிறது. எனவே, முருகன் நாட்டுப்புற மக்களது நம்பிக்கைகளை ஈடுசெய்யும் தெய்வமாயுள்ளான் என்பது புலப்படுகின்றது.

மேலும், சூரசங்கார விழாவின் பெரும்பகுதி நிகழ்த்துமுறைச் சடங்காகவே நடத்தப்படுகின்றது. இவ்விழாவின் தொடக்கத்தில் 'காப்புக் கட்டுதல்' என்ற சடங்கு செய்யப்படுகிறது. அதே வேளை, சூரனின் வேடத்தினை நடிப்பவர் தெருக்கூத்துப் பாணியில் கட்டையைக் கட்டிக் கொண்டு வேடம் போடுவதுண்டு. இவ்விழாவில் பாடப்படும் ஓரடித் தர்க்கப் பாடல்கள் புகழ் பெற்றவையாகவுள்ளன. இவை 'லாவணி' முறையிலமைந்த காம தகனப் பாடல்களை ஒத்துள்ளன. உதாரணமாகப் பின்வரும் பாடலைக் குறிப்பிட முடியும் :

*சேனையை பாணத்தால் அழித்திட்டால்*
*உனக்கு ஜெயமென்னடா வேலனே*

*தீயனே அரை நொடியில் உந்தன் தலைதனை*
*அறுத்து ஜெயம் கொள்வேனடா சூரனே*

*வெற்றியாய் மயேந்திரபுரி பட்டணம் தன்னிலே*
*வீரங்களுள்ள வீரன்*
*வேணவரம் பெற்றுப் பயணத்தில் வலுவும்*
*வீரராக்கிய சூரன்*

*சிங்காரமாகவே எங்கெங்கும் அரசாளும்*
*செங்கோல் செலுத்தும் சூரபத்மன் நானே*

இவ்வாறு பாத்திரங்கள் தம்மைத் தாமே அறிமுகப்படுத்திக் கொண்டு சபையில் தோன்றும் மரபு தெருக்கூத்திற்குரியதாகும்.

முருக வழிபாட்டின் முக்கிய விழாவாக 'விசாகப் பெருவிழா' இடம்பெறுகின்றது. இவ்விழா கந்த புராணக் கதையினை அடிப்படையாகக் கொண்டு கொண்டாடப்படினும், இவ்விழாவில் நாட்டுப்புற மக்களின் நம்பிக்கை அடிப்படையிலமைந்த பூசைகளே முக்கியத்துவம் பெறுவதைக் காணலாம்.

திருப்பரங்குன்றத்தில் இவ்விழாவின் போது 'பாற்குட விழா' என்ற சிறப்பு விழாவொன்றும் நடைபெறும். குழந்தை வடிவிலான முருகனை பால் கொண்டு வந்து வணங்கினால் பால்போல் பல்வேறு நலன்களும் பொங்கிப் பெருகும் என்ற நம்பிக்கையிலேயே இவ்விழா இடம்பெறுகின்றது. இதனைத் தொடர்ந்து திருப்பரங்குன்றத்தின் சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து காவடி எடுத்து வருவர். இவ்விழாவின் போது 'நெருப்புக்குழி' அல்லது 'பூக்குழி' இறங்குதல் எனும் நிகழ்ச்சி இடம்பெறும். இது நாட்டுப்புற வழிபாட்டுடன் இணைந்ததோர் அம்சகமாகவேயுள்ளது.

முருகனுக்குரிய சிறப்பான வழிபாடுகளுள் 'திருக் கார்த்திகை' குறிப்பிடத்தக்கது. பாமரர்களின் கற்பனையில் இந்நாளானது முருகனின் பிறந்த தினமாகக் கருதப்படுகிறது. அத்துடன் முருகன் ஒளியினின்று தோன்றியவன் என்றும் கருதப்படுவதால் இம்மக்கள் அத்தினத்தில் முருகனுக்காக கார்த்திகை விளக்கிட்டும் வழிபடுவதுமுண்டு. இவ்வழிபாடானது சிறப்பாக நாட்டுப்புறங்களில் இடம்பெ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றும். நாட்டுப்புற மக்கள் கார்த்திகை நாளில் கொளுத் தப்படும் 'சொக்கப் பானை' என்பதை 'சொர்க்கப் பானை' எனவும் குறிப்பிடுகின்றனர்.

கிராமிய ஆடல்களில் சிறப்பானதாகக் காவடி கரு தப்படுகிறது. முருகனுடன் தொடர்புபட்ட இவ் வாட் டமானது கிராமிய சூழலிலேயே அநேகமாக ஆடப் படுவதுண்டு. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் முருக வழிபாடானது தேசிய வழிபாடாகவுள்ளது. முருகனுடன் தொடர்பான தெருக்கூத்துக்கள் கிரா மிய மட்டத்தில் இடம்பெறுகின்றன. பேச்சிமுத்துப் பிள்ளை என்ற பெயரால் வழங்கிய முருகதாஸ் என்பவரால் 'ஸ்ரீ வள்ளி யம்மை சரித்திரம்' எனும் தெருக்கூத்து 1907 ஆம் ஆண்டு பதிப்பிக்கப் பட்டுள்ளது. இக்கூத்தானது சங்கரதாஸ் சுவாமிக ளின் நாடகப்பாணியில் அமைந்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

தெருக்கூத்தினைத் தவிர கதைப்பாடல்கள் பலவும் கிடைக்கப்பெற்றுள்ளன. இவை சூரசங்கார நிகழ் வினைப் பிரதிபலிக்கும் கதைப்பாடல்களாகவும் நிகழ்த்துகலைப் பாடல்களாகவும் விளங்குகின் றன. சூரனின் பிறப்பிலிருந்து சூரனின் அழிவு வரை சூரனதும் முருகனதும் கதைகள் பாடல்களாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் முருகனின் பிறப்புத் தொடர்பான கதைகளும் அவனது புகழைக்கூறும் நாட்டுப் பாடல்களும் கதைப்பாடல்களாக அமைந்துள்ளன. எடுத்துக்காட்டுக்களாகக் கீழ்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1.கதிர்காமக் கடவுளின் தோற்றம்
*(Kadirapura Devi Upatha)*
2.கந்தகுமாரன் பற்றிய பாடல்
*(Kundakumara Sachaella)*
3.கந்தனைப் பற்றிய கதைப்பாடல்
*(Kanda Sura waruna)*

மேற்கூறிய அனைத்துப் பாடல்களும் முருகன் நாட்டுப்புறத் தெய்வம் என்பதனை வலியுறுத்திக் கூறுவனவாக அமைந்துள்ளன.

எனவே, முருக வழிபாடானது ஆகமமுறைக் குட்பட்ட வழிபாடாக மட்டுமன்றி, நாட்டுப்புறத்துக் குரிய வழிபாடாகவும் விளங்குகின்றது என்பதை மேற்கூறியவற்றிலிருந்து விளங்கிக் கொள்ள முடி கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறமும் சமயச்சார்பும்; சமத்துவமும் அசமத்துவமும்

எம்.எம். ஜெயசீலன்

விரிவுரையாளர், தமிழ்த்துறை

தமிழ்ச் சமூகவரலாற்றிலும், இலக்கிய வரலாற்றிலும் பொற்காலங்கள் என்றும் இருண்ட காலங்கள் என்றும் கட்டப்பட்டுவந்த புனைவுகள் பல அண்மைக்காலங்களில் அவிழ்க்கப்பட்டு வருவதோடு அறம், புனிதம், ஒழுக்கம், மரபு, பண்பாடு என்ற போர்வையில் காலங்காலமாக மூடிமறைக்கப்பட்டுவந்த அதிகாரத்தின் முகங்கள் யாவும் கிழித்தெறியப்பட்டு, அவற்றின் உள்ளியங்கும் ஆதிக்க நலன்கள் அம்பலப்படுத்தப் பட்டுவருகின்றன. அவற்றுள் அறநூல்கள் மீதான மீள்வாசிப்புக்கள், அறம் பற்றி சமுதாயத்தில் கட்டியெழுப்பப்பட்டிருந்த கருத்தோட்டங்களில் பெரும் சிதைவுகளை ஏற்படுத்தி வருவதனை அவதானிக்க முடிகிறது.

மனித வாழ்வை நெறிப்படுத்துவதற்கும், சமூகக் கட்டுக்கோப்பைப் பேணுவதற்கும், தனிமனிதனதும், சமூகத்தினதும் நல்வாழ்விற்கும் அறங்கள் அவசியம் என்ற பொதுக்கருத்து எல்லாச் சமூகங்களிலும் ஆழவேரூன்றியுள்ளது. அப்பொதுக் கருத்தினைக் கேள்விக்குட்படுத்தும் மறுவாசிப்புக்கள், அறங்கள் ஆதிக்க நலன் சார்ந்தவை ஆதிக்க நலன்சார்ந்து சமுதாயத்தை ஒற்றைத் தன்மைக்குள் வடிவமைக்க முயலுகின்றவை, அவை எப்பொழுதும் ஒடுக்குமுறைக்கான கருத்தியல் கருவிகளாகவே செயற்பட்டு வந்துள்ளன என்ற சார்பு நிலையும் அசமத்துவமும் கொண்டவையாக அறங்களை அடையாளப்படுத்துகின்றன. இதனால் 'மனித இனத்தின் நடத்தை, ஒழுக்கம், வாழ்க்கை நோக்கங்கள் முதலியவைகளைப் பரிசீலனை செய்யும் சாஸ்திரமாகக் கருதப்பட்ட அறநூல்கள்' (கலைக் களஞ்சியம் தொகுதி ஐ, 1954: 255) மீது ஐயப்பாடுகள் பல மேற்கிளம்பத் தொடங்கியுள்ளன. குறிப்பாக அறநூல்கள் கற்பிக்கும் சரி $X$ பிழை, உயர்வு $X$ தாழ்வு, நன்மை $X$ தீமை, தர்மம் $X$ அதர்மம் போன்ற எதிர்மறைகள் யாரால் தீர்மானிக்கப்பட்டன?, யாருடைய ஒழுக்கம், நடத்தை, வாழ்க்கை நோக்கங்கள் சரியானவையாகவும் உயர்ந்தவையாகவும் தீர்மானிக்கப்பட்டன?, அவை எந்த அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டன எனப் பல வினாக்கள் அறங்கள் மீது தொடுக்கப்படுகின்றன.

'அறக்கருத்துக்கள் அதீத சக்தியிடமிருந்தோ அதியற்புதத்தின் விளைவாகவோவந்தவை அல்ல. தனிமனித மூளையிலிருந்தும் தோன்றியவை அல்ல. ஒரு குறிப்பிட்ட மொழி பேசும் சமுதாயத்தினர் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளை வகுக்கின்ற அறநூல் ஆசிரியரின் கருத்து கலவையானது. முன்னோர் அனுபவங்கள், மரபு வழிபட்ட கருத்துக்கள், பட்டறிவு, சமயத்தின் ஆதிக்கம் போன்றன ஒருங்கிணையும் போது, அறநூல் வடிவெடுக்கிறது' (முருகேசபாண்டியன், ந. 2011: 90) என்பது பொதுவான கருத்தாகும். இங்கு அறநூல் ஆசிரியரின் கருத்து கலவையானதாக அமைந்தாலும் அது முற்றிலும் புற வயமானதல்ல ஆசிரியரின் கருத்துநிலை மற்றும் நோக்குநிலைக்கேற்பப் புனையப்பட்டதாகவே அது அமையும். எனவே, அறநூலாசிரியனின் அகவய கருத்துநிலைகளின் வினைப்புரிதல்கள் அறங்களில் சார்பு நிலைகளைத் தோற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுவிக்கின்றன. இவ்விடத்தில் பேராசிரியர் கா. சிவத் தம்பி, தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் நூற்ப யன் குறித்துக் கூறும் கருத்து நோக்கத்தக்கது:

'நமது பாரம்பரியத்தில் 'அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே' என்ற மிக விழுமிய பெறு மானம் உண்டு. இன்றைய நிலையில் எது சிறந்த அறம் என்பதற்கோ எது சிறந்த வீடு (விமோசன மார்க்கம்) என்பதற்கோ தரப்படும் விடை ஆளுக்கு ஆள், கருத்துநிலைக்குக் கருத்துநிலை வித்தியா சப்படும். ஆகவே, மேற் சொன்ன நான்கு புருடார்த் தங்களையும் பேணிக்கொள்வதில் தமிழ் இலக்கி யம் எத்துணை வெற்றியீட்டியது அன்றேல் எத்துணை வெற்றியீட்டத் தவறியது என்பதையும் அதனிலும் பார்க்க, முக்கியமாக, யாருடைய அறமும் பொரு ளும் இன்பமும் வீடும் சமூகத்தின் அறமும் பொரு ளும் இன்பமும் வீடுமாகக் கருதப்பட்டன என்பதை யும் அறிந்து கொள்வது இலக்கிய வரலாற்றின் பணியாகின்றது' (சிவத்தம்பி, கா. 2007: 198,199)

இங்கு அறம் முதலியன ஆளுக்கு ஆள், கருத் துநிலைக்குக் கருத்துநிலை வேறுபடுவன என்றும் அவ்வேறுபாட்டின் அடிப்படையில் தமிழ் மரபில் கூறப்படும் நூற்பயன் (அறம், பொருள், இன்பம், வீடு அடைதல்) முழுச்சமுதாயத்திற்கும் பொதுவா னது அல்ல என்றும் கூறுவதோடு அவை யாருடை யது என்பதைக் கண்டறிதல் வேண்டும் என்றும் கூறுகின்றார், பேராசிரியர் கா.சிவத்தம்பி. இப்பணி யின் முதற்கட்டத்தை பேராசிரியர் ராஜ்கௌதமன் தனது அறம் / அதிகாரம் என்ற நூலின் மூலம் தொடக்கி வைத்துள்ளார் எனலாம்.

'அறங்கள் வெற்று விதிகள் அல்ல. இவை, மேலா திக்க சமூக ஒழுங்கை அல்லது நடப்பில் நிலவு கின்ற ஆதிக்க-ஆட்பட்ட உறவுகளைச் சாசுவதப்ப டுத்துகின்றன. ஒரு சாராரின் நலனே ஒட்டுமொத் தச் சமூக நலன் என்று அறங்கள் நியாயப்படுத்த வல்லவை. இவ்வாறு இவை, நியாயப்படுத்துவ தின் மூலமாக, நடப்பில் உள்ள சமூக ஒழுங்கும், உறவுகளும் இயல்பானவை, மாறாதவை, மாற்றக் கூடாதவை என்று ஆக்குகின்றன. அறங்கள் இயற்கைச் சட்டம் என்ற அரணைப் பெறுகின் றன. நடப்பவற்றைக் கேள்விக்கு அப்பாற்பட்டவை யாக, இதிலே கேட்பதற்கு என்ன இருக்கிறது என்ப தாக அறங்கள் ஆக்குகின்றன. இதனால் கேள்வி கேட்கவே முடியாத வல்லாண்மையை உண்டாக் குகின்றன. கேட்டே தீரவேண்டியவர்களுக்கு, பாதிக் கப்பட்டவர்களுக்கு அறவகைப்பட்ட அச்சத்தை ஏற் படுத்துகின்றன. ஏதோ தவறு செய்வது போன்ற குற்ற உணர்வை உண்டாக்குகின்றன. கேட்ட வர்களையும், கேட்பவர்களையும் மனநலம் அற்றவர்களாக, சமூக நல்லிணக்கத்துக்குக் குந்தகம் விளைவிப்பவர்களாக, பைத்தியக்கா ரர்களாகத் தீர்ப்பளிக்கின்றன' என்கின்றார், ராஜ்கௌத மன். (ராஜ்கௌதமன், 1997: 07)

அறங்கள் ஒட்டுமொத்த சமூகத்தின் நலன் சார்ந் தவை என்பது மறுதலிக்கப்பட்டு, அவை சார்புநி லைகொண்டவை அதிலும் ஆதிக்க நலனைப் பேணுகின்றவை என இங்கு மறுபொருட்கோடல் செய்யப்பட்டுள்ளதைக் காணலாம். எனினும் எல்லா அறங்களையும் சார்புநிலை கொண்டவை, ஆதிக்க நலனைப் பேணுகின்றவை என்று புற மொதுக்கவும் முடியாது. சில வகையான பொது அறங்கள் மொத்த சமூகத்தின் நலனைக் கருத் தில் கொண்டவையாக அமைவதோடு எல்லாச் சமூ கத்தினரிடமும் மாறா மதிப்பினையும் பெற்றுள் ளன.

சங்க இலக்கியம் முதல் இன்றைய நவீன இலக் கியங்கள் வரை தமிழில் அறக்கருத்துக்கள் இடம் பெற்றுவருகின்றன. அவ் அறக்கருத்துக்கள் காலத் திற்கு காலம் மாற்றமுற்றும் சமூகத்திற்கு சமூகம் வேறுபட்டும் அமைந்துள்ளதோடு அவற்றின் சமூக மதிப்பும் மாற்றத்திற்குள்ளாகியுள்ளன. அதே வேளை சில அறங்கள் பெரிய மாற்றங்கள் ஏது மின்றி தொடர்ந்து இடம் பெற்றுவருவதையும் அவ தானிக்கமுடிகிறது.

தமிழிலக்கிய மரபில் கிடைக்கப்பெற்றுள்ள அறநூல் களும் அவை எடுத்துரைக்கும் அறங்களும் பெரும் பாலும் சமயத் தளத்தில் நின்று உரைக்கப்பட்டவை யாகவே விளங்குகின்றன. இதனால் சில பொதுவான அறங்களைத்தவிர ஏனையவையாவும் அவ்வவ் சமய கொள்கைகளோடு இணைந்ததாகவே அமைந் துள்ளன. இச்சமயச்சார்பு அறங்களிலும் அறங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளின் சமூக மதிப்பிலும் மாற்றங்களை ஏற்படுத்து கின்றன. ஒவ்வொரு சமயத்தவரும் தத்தம் சமய வாழ்வியலுக்கு ஏற்ப அறங்களைப் பின்பற்றுவ தோடு அவற்றைப் பின்பற்றுவதே வாழ்வின் சிறந்த உயர்ந்த இலட்சியமாகக் கருதுகின்றனர்.

அறவியலும் சமயமும் ஒன்றோடொன்று நெருங் கிய தொடர்பினைக் கொண்டவையாகும். உலக வரலாற்றில் பெரிதாகப் பேசப்படும் அறநூல்கள் யாவும் சமயத்தோடு நெருங்கிய பிணைப்பினைக் கொண்டவையாகவே விளங்குகின்றன. இப்பிணைப் பிற்கான காரணங்களாக பின்வருவன கூறப்படுகின் றன:

அறத்தின் அடிப்படைகளாக விளங்கும் செயல்க ளின் பொறுப்பு ஏற்கும் ஆன்மாக்களின் இருப்பு. காலத்தின் கட்டுப்பாட்டுத் தன்மை. தீமையின் இருப்பு ஆகியவை சமயம் அளித்த தத்துவங்களா கும். சமயதத்துவங்கள் அறவொழுக்கத்தை மேலும் சிறப்பானதாக்குகின்றன. இவை இல்லையெனில் அறச்செயல்கள் எப்பொருளையும் பயனையும் தர இயலாது.

அறக்கருத்துக்களான நன்மை. தீமை. அறப்போ ராட்டம். பிரபஞ்ச-மனித உறவுக் கருத்துக்கள் முதலியன பொருளியல் கருத்துக்கள் போன்றே உண்மையான இயற்கை விதிகளே என்பதைச் சமயம் உறுதிப்படுத்துகின்றது.

அறத்தில் காணப்படும் உந்தல் அல்லது உணர்வு. சமயப் பேருண்மை எனக் கருதுகிற இயற்கைக்கு அப்பாற்பட்டு விளங்கும் ஆற்றலே ஆகும். சமய மும் அறமும் சமயப் பேராற்றலை நாடுவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன.

ஒருவன் தன்னிடத்திலே நம்பிக்கை கொள்வதை வலியுறுத்துவது அறம். அறவொழுக்கத்தின் இந்த கடப்பாட்டைச் சமயம். தனி ஒரு பரம்பொருளுக்கு மக்கள் கடமைப்பட்டுள்ளனர்: அதுவே மக்களை அறவொழுக்கத்திற்கு இட்டுச் செல்கின்றது என்று விளக்குகிறது.

அறத்தின் உன்னத நிலைகளான தெய்வீகப் பண்பை அல்லது மாபெரும் மானிடப் பண்புக்கு ரிய உள்ளார்ந்த மதிப்பைச் சமயம் அளிக்கிறது. அறத்தின் நிறைவு நிலையான ஆன்மீக நிலை யைச் சமயம் தெளிவாக்கி அதன் மதிப்பை உயர்த் துகிறது. (வாழ்வியல் களஞ்சியம் தொகுதி ஐஐஇ 1991: 53)

தமிழ்ச் சமூகத்தில் சமண-பௌத்த சமயங்க ளின் பரவலாக்கமும் களப்பிரர்களின் ஆதிக்கமும் ஏற்பட்ட பின்புலத்திலேயே அறம் அழுத்தம் பெற் றது என்பது ஆய்வாளர்களின் முடிவாகும். 'முதன் முதலில் ஒழுக்கத்தைப் பற்றி தனித்தனியாக எழு தப்பட்ட நூல்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்க ளின் தொகுதியில்தான் காணப்படுகின்றன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள பதினெட்டு நூல் களிலே நீதிநூல்கள் பதினொன்று. இச்சமயத்தில் ஒரு உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது. சமண-பௌத்த மதங்கள் தமிழ் நாட்டில் மிகுதி யாகப் பரவிய பிறகுதான் ஒழுக்கத்தைப் பற்றித் தனி யாகத் தமிழ் நூல்கள் எழுதப்பட்டன. சமணமும் பௌத்தமும் ஒழுக்க நெறியை அடிப்படையாகக் கொண்டவைகள். அவைகள் கடவுள் நெறியைப் பற்றியோ பக்தி நெறியைப் பற்றியோ கவலைப்ப டுவதில்லை: ஆதலால் அக்காலத்தில் அறநூல் கள் பல பிறந்தன.' (சிதம்பரனார். சாமி. 1986: ப. 3). ஏறத்தாழ கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரை களப்பிரரின் ஆளுகை. சமண - பௌத்த சமயங்களின் கருத்தியல் மற்றும் சமூக அரசியல் செயற்பாடுகள் தமிழ் நாட் டில் விரிவாக்கம் பெற்றன. கி.பி. ஆறாம் நூற்றாண் டின் பிற்பகுதியில் எழுச்சிபெற்ற பல்லவ. பாண் டியப் பேரரசுகள் களப்பிரர் ஆதிக்கத்தை தமிழ் நாட்டிலிருந்து அப்புறப்படுத்தின. அக்காலத்தில் தோற் றம் பெற்ற சைவ. வைணவ பக்தி இயக்கத்தின் செயற்பாடுகளினால் சமண - பௌத்த சமயங்க ளின் செல்வாக்கு தமிழ் நாட்டில் மங்கத் தொடங்கி யதோடு அற நூலாக்கச் செயற்பாடுகளும் குன்றத் தொடங்கின. என்றாலும் அக்கால அறநூற் கருத் துக்களின் தாக்கம் இற்றைவரை தமிழிலக்கியங் களில் எதிரொலித்த வண்ணமே உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற இலக்கியம் என்ற தனிவகை இலக்கியம் சங்கமருவிய காலத்திலேயே முதன்முதல் தமிழில் தோற்றம் பெற்றாலும் அவ்விலக்கியங்களில் பேசப்படுகின்ற அறங்கள் பல, சங்ககால அக, புறப் பாடல்களிலேயே ஆங்காங்கு இடம் பெறத்தொடங்கி விட்டன. அவ்வறங்களின் தன்மையினை ராஜ்கௌதமனின் பின்வரும் கூற்று தெளிவாக உணர்த்துகிறது:

'ஆதித்தமிழர் பாடல்கள் பெரும்பாலும் காதல் வாழ்க்கையையும், அரசர்கள், வீரர்களின் போராட்டங்களையும் பற்றியதாக இருந்தாலும் இப்பாடல்கள் தோன்றிய காலத்தையடுத்து வந்த நீதிப்பாடல்களின் கருத்துக்களும் குறிப்பிடும்படியாகக் காணப்படுகின்றன. மிகத் தொன்மை யான சமூக நீதிகளோடு சமண, பௌத்த, வைதீக நீதிகளும் காணப்படுகின்றன. இந்த நீதிகளைப் பொதுவாக பெண்ணுக்குரிய அகநீதி என்றும் ஆணுக்குரிய புறநீதி அல்லது சமுதாய நீதி என்றும் பாகுபடுத்தலாம். இவற்றில் பெண் நீதி அல்லது அகநீதி என்பது புறநீதியைவிடவும் பழமையானதாகத் தோன்றுகின்றது. தனியுடைமை பண்பாட்டுக்கு முந்தியகால இனக்குழுச் சமூக நீதியின் சாயலில் காணப்படுகின்றன. புறநீதி என்பது புதிய உடமை, முடியாட்சி, வேளாண் நாகரிகச் சமுதாய நீதியாகத் தென்படுகின்றது. பெண்நீதி அல்லது பெண் அறம் என்பது பாலியலை ஒட்டியதாகவும் ('அருள்', இன்பக் கொள்கை ஆண்நீதி அல்லது ஆண் அறம் என்பது உடமைச் சமூகத்தை ஒட்டியதாகவும் (பொருள், எதார்த்தக் கொள்கை –*(Reality Principle)* அமைந் துள்ளன' (ராஜ்கௌதமன், 1994: 155,156)

தொன்மையான சமூக அறங்களோடு வைதீக, அவைதீக அறங்களும் இணைந்ததாக சங்க இலக்கியத்தில் வெளிப்படும் அறங்கள் விளங்குவதாகவும் அவற்றை பெண் அறம், ஆண் அறம் எனப் பாகுபடுத்தலாம் என்றும் கூறும் ராஜ்கௌதமன், பெண் அறம் இனக்குழுச் சமூக சாயலிலும் ஆண் அறம் உடமைச் சமூகத்தை ஒட்டியதாகவும் விளங்குகின்றன என்கின்றார். இந்நிலைமைக்கு பண்டைய தமிழ்ச் சமூகத்துள் ஏற்பட்ட வைதீக, அவைதீக சமய பண்பாட்டு மரபுகளின் ஊடுருவலும் உடமைச் சமுதாயத்தின் எழுச்சியும் காரணமாக அமைந்தன எனலாம். இவற்றினுடைய நீட்சியாகவே சங்க மருவியகால அறநூல்கள் அமைந்தன.

சங்கமருவிய காலத்தில் பெருகத்தொடங்கிய சமண, பௌத்த, வைதீக சமய பண்பாட்டு மரபுகளின் ஊடுருவலும் அவற்றின் இணைவும் உடமைச் சமூகத்தின் பரவலாக்கமும் பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களின் தன்மைகளைத் தீர்மானித்தன. அந்நூல்களின் 'அறங்களைத் தொகுத்தவர்கள் தமிழ் மரபில் மொழியப்பட்ட அறம், பொருள், இன்பம் எனும் முப்பிரிவுகளையும் முன்மாதிரியாகக் கொண்டார்கள் (ஆசாரக்கோவை விதிவிலக்கான வைதீக ஆசார விதிகளின் தமிழாக்கம்). இவர்கள் தொகுத்து வகுத்த அறங்கள் தமிழ் அறங்களாக மட்டுமன்றி, வடமரபின் வைதீக / ஸ்ரமண சாஸ்த்திரங்களில் வடித்தெடுத்த அறங் களாகவும் இருந்தன. இரு மரபுகளின் அறங்களை அவரவர் சார்பு நிலைகளோடு தொகுத்துப் பனுவலாக்கினார்கள். (ராஜ்கௌதமன், 2006: 254) இதனால் பதினெண் கீழ்க்கணக்கிலுள்ள அறநூல்கள் சமயச்சார்பிற்கேற்ப தம்மளவில் வேறுபட்ட அறங்களை எடுத்துரைத்தன.

பதினெண் கீழ்க்கணக்கிலுள்ள அறநூல்கள் பலவற்றில் அவைதீகத்தின் தாக்கம் வெளிப்படையாகத் தெரிவதோடு சில நூல்களில் வைதீக சார்பும் வெளிப்படையாகவே தெரிகிறது. அந்நூல்களுள் திருக்குறள், நாலடியார், பழமொழிநானூறு, சிறுபஞ்சமூலம், ஏலாதி, ஆகியன அவைதீகம் சார்ந்தவையாகும். இன்னா நாற்பது, இனியவை நாற்பது, ஆசாரக்கோவை நான்மணிக்கடிகை, திரிகடுகம், முதுமொழிக் காஞ்சி ஆகியன வைதீகம் சார்ந்தவையாகும். அவைதீகம் சார்பான அனைத்து நூல்களிலும் சமணத்தின் தாக்கமே மேலோங்கியுள்ளது.

'வைதீக சமயத்தவரைச் சமண பௌத்த ரோடு ஒப்பிடும்போது, வைதீக சமயத்தவர் மன அமைதியோடு வாழ்வதற்குரிய ஒழுக்கத்திற்கு அடிப்படையான பொதுவகையறங்களைப் பெரும்பான்மையளவில் விதந்தெடுத்து வற்புறுத்தாததாலும், பிராமணரின் நன்மையையே ஏற்றமான அளவிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்திற் கொண்டிருந்ததாலும் சங்கமருவிய காலத் தமிழ் மக்களிடையே அதிக அளவிற் செல்வாக்குப் பெற முடியவில்லை. கட்டுப்பாடான வாழ்க்கையை வற்புறுத்துவதிற் பௌத்தரிலும் கூடிய அளவு சமணர் தீவிரவாதிகளாக இருந்தமையாற் போலும், சமணரே தமிழ் மக்களிடம் மிகுமளவிலாகிய செல்வாக்கைப் பெற்றனர். காலத்தின் தேவைக்கேற்ப அந் நூல்கள் மக்களிடம் செல்வாக்குப் பெறுதலைக் கண்ட வைதீக சமயத்தினர், அந்நூல் வழியிற் சென்று, தாமும் அறநூல்கள் இயற்றத் தொடங்கினர் .' (வேலுப்பிள்ளை, ஆ, 1999: 29-36)

வைதீக சமயத்தினர் காலத்தின் போக்கிற் கேற்ப அவைதீகத்தின் வழியிற் சென்று அறநூல்களை இயற்றினாலும் தமது சமயத் தளத்தில் நின்றே அறங்களை எடுத்துரைத்ததோடு தேவைக்கேற்பவே அவைதீக அறங்களில் சிலவற்றை தமக்கானவையாக உள்வாங்கிக் கொண்டனர். இதனால் அவ் அறநூல்கள் தம்மளவில் ஒற்றுமைகளையும் வேறுபாடுகளையும் கொண்டவையாக உருப்பெற்றன.

வைதீக அறங்கள் வேதங்களை தலைமையாக ஏற்கின்றன. 'வேதங்கள் கூறும் 'ரித' என்ற கருத்தில், இந்து சமய அறக்கொள்கையின் *(Ethical Theories)* தொடக்கத்தைக் காணலாம். இச்சொல், பிரபஞ்சத்தைப் பிணைத்திருக்கும் ஒழுங்கமைப்பைக் குறிப்பிடுகிறது. நற் பண்புகள் ரிதத்தோடியைந்தவை. தீய செயல்கள் இதற்கு மாறானவை. அதன்பின்னர் அறநெறிகள் 'தருமம்' என்ற பெயரில் வழங்கப்படுகின்றன. சமயம், சட்டம், நேர்மை, கடமை, ஈகை, அறநெறி என எல்லா ஒழுகலாறுகளையும் உள்ளடக்கியதாகத் 'தருமம்' என்ற கருத்து விளங்குகின்றது.' (வாழ்வியல் களஞ்சியம் தொகுதி ஐஐஇ 1991: 34) இத்தருமம் (அறம்) வருண - ஆசிரம தருமங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். பிறப்பினடிப்படையில் ஒவ்வொரு வருணத்தாரும் (பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர்) சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகள் வருண தருமங்களாகும். 'இவை ஏற்றத் தாழ்வு என்ற உள்ளார்ந்த பண்பில் வகுக்கப் பட்டிருந்தன. பிறப்பாலான இயற்கை சுபாவத்தால் தொழிலும், தொழிலால் பிறப்பும் வரையறுக்கப்பட்டன.' (ராஜ்கௌதமன், 2006: 254) அத்தோடு இந்து ஒருவன் தன் வாழ்வில் வெவ்வேறு நிலைகளில் (பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம்) ஆற்ற வேண்டிய கடமைகள் ஆசிரமதர்மம் எனப்படுகிறது. மனித வாழ்வை மேற்கூறிய நான்கு கட்டங்களுக்குள் கொண்டு வந்த வைதீகம் அவற்றில் சூத்திரரை தள்ளி வைத்து முதல் மூன்று வருணத்தாருக்கே அந் நான்கு கட்டங்களும் உரியது என்றது. மேலும், வேள்விகளில் விலங்குகளைப் பலியிட்டு தேவர்களுக்கு அவிப்பலியூட்டுவதும், வைதீக தருமங்களில் முக்கியமானதாகும். இவ்வாறு வைதீக தருமங்கள் வேதம், வருண – ஆசிரமம், வேள்வி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சமூக அமைப்பை பிறப்பினடிப்படையில் ஏற்றத்தாழ்வாக கட்டமைத்துக்கொண்டதோடு, அவற்றின் தலைமையை பார்ப்பனியம் தம்வசப்படுத்திக்கொண்டது. இவ்வாறு வடக்கே உருக்கொண்ட வைதீக அறங்கள் சங்ககாலத்திலிருந்தே தமிழ் நாட்டில் செல்வாக்குப்பெறத் தொடங்கிற்று.

'சங்ககாலத்தில் வைதீக மதம், சடங்குகள், வழிபாடு, புராண இதிகாசக் கதைகள், கடவுள்கள், ஆட்சிக் கல்வி, அரசியல், அரச நிறுவனங்கள், நிர்வாக முறைகள், ஆதிக்கச் சொல்லாடல்கள் ஆகியவற்றை வடக்கிலிருந்து தமிழகத்துக்குக் கொண்டு வந்தவர்கள் பார்ப்பனர்களாவர். இவர்களுடைய சாதனையில் முக்கியமானது: பசுவைப் போன்ற பார்ப்பனருக்கு இன்னல் செய்யக் கூடாது: செய்வது பாதகம், அவர்கள் பாதுகாக்கத்தக்கவர்கள் என்கிற கருத்தைச் சமூகத்தின் பொதுக்கருத்தாக ஆக்கியதாகும். மேலும், வைதீக வழிபாட்டில் பார்ப்பனருக்கு இருந்த தலைமை, சமூகத்திலும் ஏற்படுத்தியது. அத்தோடு மதம், வழிபாடு, மரபு, சாத்திரம், தருமம், வழக்கு, அரசியல், வருணாசிரம விவகாரங்கள், புராணம், கோவில் காரியம், ஆகம விதிகள் முதலியவற்றில் ஏற்படுகிற சிக்கல், ஐயங்களை அறுதியாகத் தீர்க்கின்ற மேற்கோள் நூல்களைப் போல, சட்டப் புத்தகங்களைப் போல பார்ப்பனர்கள் இருந்தார்கள்' (ராஜ்கௌதமன், 1997: 211) இதனால் வைதீக அறநூல்கள் பார்ப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணர்களின் மேன்மையை நிலைநிறுத்தும் வகையில் அவர்களைப் புனிதர்களாகக் கட்டமைத்து, அவர்களின் அசாதாரண பெறுமதிகளைப் புகழ்ந்ததோடு சமூக நல்வாழ்வில் அவர்களின் பங்களிப்பையும் இன்றியமையாமையும் வலியுறுத்தின. உதாரணமாக ஆசாரக்கோவையில் இடம்பெறும் அந்தணர் பற்றிய குறிப்புக்களை நோக்கலாம்:

வேள்விகளை காலதாமதமின்றிச் செய்தல் வேண்டும் (03) திருமணநாள், தேவர்களுக்கு, பிதிரர்களுக்குச் சிறப்புச் செய்யும் நாள், வேள்விநாள் போன்றனவற்றில் தானமும் விருந்தினருக்கு சோறும் தவறாதிடுக (48) (இவையாவும் அந்தணர்களின் தலைமையில் இடம்பெறுவன என்பது குறிப்பிடத்தக்கது.) ஐம்பூதங்களையும், பார்ப்பனரையும், பசுவையும், திங்களையும், ஞாயிற்றையும் தன் உடம்பு போலக் கருதிப் போற்ற வேண்டும். போற்றாது இகழ்ந்தால் தன் உடம்பிலுள்ள ஐம்பூதங்களையுடைய தெய்வங்கள் அன்றே கெட்டகன்று போய்விடும் (15). இரண்டு தெய்வங்களுக்கு இடையிலும் பார்ப்பனர்களுக்கு இடையிலும் ஊடறுத்துச் செல்லலாகாது (31). தூய ஒழுக்கமும் நான்மறைகளையும் உடைய அந்தணர்களை, மேலான தன்மையுடைய தன் குரவரைப் போல ஒழுகுவதே நூலார் கொள்கை (61). பார்ப்பார், தவசி முதலியவர்களைக் கண்டால் வழிவிட்டு செல்வதே நெறி (64). பிராமணரிடமிருந்து பசுக் கொடை பெறக்கூடாது (90). நல்ல செயல்களைத் தொடங்கும் முன் அந்தணரிடம் நாள் கேட்டுச் செய்வது நன்மை தரும் (92)

இவ்வாறு அந்தணர்களின் சமூக முக்கியத்துவமும் மேலான தன்மையும் பலவாறு கூறப்பட்டுள்ளதோடு அதனையும் தாண்டி அவற்றினை அனுசரித்து வாழாதோர் கீழானோராகவும், தாழ்ந்தோரா கவும் கூறப்பட்டுள்ளது. மேலும், ஆசாரக்கோவையில் 'காலையில் கண் விழித்தது முதல் இரவில் தூங்கச் செல்லும் வரை வைதீகத்தார் பின்பற்ற வேண்டிய நித்திய கருமங்கள் ஆசாரங்களைப் போலக் கூறப்பட்டுள்ளது. நீராடுவது, உண்பது, ஆடை அணிவது, உறங்குவது எல்லாமே பிசகாமல் செய்யக் கூடிய ஆசாரங்களாகச் சொல்லப்படுகின்றன. இந்த ஆசாரங்களை மிகுதியாகப் பின்பற்றும் சாதிகள் உயர்ந்தவை என்று உரிமை பாராட்டுகின்றன. உடல் உழைப்பிலிருந்து விடுபட்ட சாதியார் இப்படிப்பட்ட ஆசாரங்களைப் பின்பற்றுவதற்குச் சாத்தியப்பாடு இருந்தது. ஆனால் உடல் உழைப்பை விட்டால் உயிர்வாழ இயலாத சாதியார்கள் இந்த ஆசாரங்களைப் பின்பற்றச் சாத்தியம் இல்லை' (ராஜ்கௌதமன், 1997: 217) இவ்வகையிலான ஆசாரங்களே வைதீகம் கட்டமைத்துள்ள சுத்தம் $X$ அசுத்தம், தூய்மை $X$ தீட்டு ஆகியவற்றுக்கு வளம் சேர்த்தன எனலாம்.

வைதீகத்தின் சுத்த அசுத்த கோட்பாட்டுக் கற்பிதம் அடிப்படையிலேயே உழைக்கும் அடித்தட்டு மக்களை அடக்கியொடுக்குபவையாக அமைந்தன. இக்கற்பிதத்துக்கு மேலும் வலிமை சேர்க்கும் விதத்தில் அதனை கன்ம-மறுபிறப்புடன் தொடர்புபடுத்தியது வைதீகம். அதாவது 'சுத்தம் என்ற கருத்தியலைப் பிறப்புடனும் ஆன்மாவுடனும் தொடர்புபடுத்தும் வைதீக இந்து சமயம், தாழ்த்தப்பட்டவர்கள் மேலும் பல பிறவிகள் பிறந்து, துயரத்தில் உழன்று, அந்தந்தச் சாதிக்குரிய கடமைகளைச் செவ்வனே செய்து, படிப்படியாகச் சுத்தம் பெற்று, இறுதியில் பார்ப்பன இருநிலைப் பெற்று, முழுமையாகச் சுத்தமடைவார்கள் எனப் போதிக்கின்றது.' (முருகேசபாண்டியன், ந. 2011: 63)

வேதங்களையும் வேள்விகளையும் ஏற்காத அவைதீகம், வருண - ஆசிரம தருமாங்களை முற்றிலும் மறுத்து, எல்லா உயிர்களும் சமம் என ஏற்றத்தாழ்வை நிராகரித்தன. அடிப்படையில் சமணம், பௌத்தம் முதலிய அவைதீக நெறிகள் கி.மு. 6 ஆம் நூற்றாண்டளவில் வடக்கே கங்கைச் சமவெளியில் நிலவிய சமூக, அரசியல், பொருளாதார நடவடிக்கைகளுக்கு எதிரான சமய சீர்திருத்த இயக்கங்களாக உருவெடுத்தமையால் (விரிவுக்கு: சர்மா, ஆர். எஸ், "ஜைனமும் பௌத்தமும்", பண்டைக்கால இந்தியா, 2005: 152-172) அக்காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த வைதீக ஆசாரங்களில் பெரும்பாலானவற்றை நிராகரித்து, 'வினை, பிறவி, அகிம்சை, நிலையாமை, நிர்வாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றை தர்க்க ரீதியாக இணைத்து தமக் கான அறங்களை உருவாக்கிக்கொண்டன. அவை துறவினை பெரிதும் வலியுறுத்துகின்றன.' (ராஜ் கௌதமன், 2006: 254) அத்துறவு வைதீகம் கட்டமைக்கும் துறவிலிருந்து வேறுபட்டதாகும். வைதீகம் வாழ்க்கையின் நான்கு கட்டங்களில் இறு தியானதாகத் துறவினை வகுத்து, பிராமணர், சத்திரியர், வைசியர் ஆகிய மூன்று வருணத்தின தும் ஆண்களுக்குரியதாக அதனை வரையறுத் துள்ளது. இதிலிருந்து வேறுபடும் அவைதீகம் வாழ்க்கையின் எந்த வயதிலும் எவரும் துற வினை மேற்கொள்ளலாம் என துறவில் சமத் துவத்தினை ஏற்படுத்தியுள்ளது.

பதினெண்கீழ்க்கணக்கில் உள்ள அவைதீகம் சார் அறநூல்கள் யாவும் சமண சமயம் சார்ந்தவை யாகும். அவற்றில் எடுத்துரைக்கப்படும் அறங்க ளுள் பெரும்பாலானவை சமண சமயத்தின் அடிப் படைக் கொள்கைகளுக்கு ஏற்ப அமைந்தவையா கும். 'சமணருடைய போதனைகளை. வாழ்க்கை பற்றிய நோக்கு. வாழ வேண்டிய நெறி என இரண் டாக வகுக்கலாம். வாழவேண்டிய நெறியாக அற வாழ்வைச் சிறப்பாக துறவறத்தைப் போதித்த சம ணர், வாழ்க்கை பற்றிய நோக்காக நிலையாமை. வாழ்க்கை வெறுப்பு என்பனவற்றைக் கொண்டி ருந்தனர்.' (ஆ. வேலுப்பிள்ளை, 2011: 86) இவற் றினுடைய வெளிப்பாடுகளாகவே அதிகமான அற நூல்கள் அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக நாலடி யாரின் உள்ளடக்கத்தினை நோக்கலாம்:

'நாலடியாரில் உலகியலின்ப வாழ்க்கை மீது வெறுப்பு முக்கியத்துவம் பெறுகிறது. நாலடியார் முழுவ திலும் நிலையாமைக் கொள்கை ஊடுருவிச் செல் கிறது. நாலடியாரிலே துறவறவியலே முதலிற் காணப் படுகிறது. நிலையாமையின் மூன்று பகுப்புக்களா கிய செல்வ நிலையாமை, இளமை நிலையாமை. யாக்கை நிலையாமை என்பன நூலின் தொடக் கத்திலே தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தொடர்ந்து அறன்வலியுறுத்தல் வருகின்றது. தூயதன்மை என்ற பகுதியில் உடலின் அசுத்தம். சிறப்பாகப் பெண்ணுடலின் அசுத்தம் பேசப்பட்டு உலகிய லின்ப வாழ்க்கை மீதான வெறுப்பே வலியுறுத்தப் பட்டுள்ளது. பெண்களை இழிவாகக் காட்டினால் ஆண்கள் துறவை நாடுவர் என்று எண்ணிப் போலும் இத்தகைய முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பழவினை என்ற பகுதி கர்மத்தையும் ஊழையும் சேர்த்துக் கூறுகிறது. உலக வாழ்க்கையின் வெறுப்பு, நூல் முழுவதும் தொனிக்கிறது.' (வேலுப்பிள்ளை, ஆ, 1999: 51,52)

சமண சமயம் வாழ வேண்டிய நெறியாக துற வறத்தை சிறப்பாகப் போற்றினாலும் துறவிகளுக்கு உரிய அறங்களையும் இல்லறத்தாருக்குரிய அறங் களையும் தனித்தனியே கூறியுள்ளது. (விரிவுக்கு: வேங்கடசாமி. மயிலை சீனி, சமணமும் தமிழும். பார்த்தசாரதி, ஆர், சமணம்) துறவிகளுக்கு உரியன வற்றுள் மாவிரதங்கள் (அகிம்சை, வாய்மை, கள் ளாமை, துறவு, அவாவறுத்தல்) ஐம்பொறி அடக் கம் போன்றனவும் இல்லறத்தார்க்கு உரியனவற் றுள் அணுவிரதங்கள் (கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பிறன்மனை நாடாமை, பொருள் வரைதல்), கள், தேன், ஊன் உண்ணாமை போன் றனவும் மீளமீள வலியுறுத்தப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக நாலடியாரிலிருந்து சில அறங்கள் வருமாறு

*ஐம்பொறி அடக்கம்*

*மெய்வாய்க்கண் மூக்கு செவியெனப் பேர்பெற்ற*
*ஐவாய வேட்கை யவாவினைக் – கைவாய்*
*கலங்காமல் காத்துய்க்கும் ஆற்றல் உடையான்*
*விலங்காது வீடு பெறும் (59)*

*அகிம்சை*

*இரும்பார்க்கும் காலராய் ஏதிலார்க்கு ஆளாய்க்*
*கரும்பார் கழனியுள் சேர்வார் – சுரும்பார்க்கும்*
*காட்டுளாய் வாழும் சிவனும் குறும்பூழும்*
*கூட்டுளாய்க் கொண்டுவைப் பார் (122)*

*நிலையாமை*

*நின்றன நின்றன நில்லா எனவுணர்ந்து*
*ஒன்றின வொன்றின வல்லே செயின் செய்க*
*சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்*
*வந்தது வந்தது கூற்று (04)*

பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்கள் மேற் கூறி யவாறு சமயச்சார்புநிலைக்கேற்ப அறங்களை எடுத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரைத்ததோடு அந்நூல்களில் இடம் பெறும் ஆணுக்கும் பெண்ணுக்குமான அறங்களும் சமத் துவமற்றவையாகவே விளங்குகின்றன. இயற்கை யான உடற்கூற்றியல் அம்சங்களுடன் அவற்றின் மேல் கட்டப்பட்ட பௌதீக பண்பாட்டம்சங்களும் இச்சமத்துவமற்ற அற உரு வாக்கத்திற்கு அடிப்ப டையாக அமைந்தன. 'ஆணுக்குப் பெருமை, வலிமை, அழகு, புகழ், அறிவு, கடமை, உரிமை, ஆள்வினை, செயலூக்கமான பாலியல், அதிகாரம் ஆகியவை வேறாகவும் பெண்ணுக்கு உடல் அழகு, மென்மை, பணிவு, அடங்கிய பாலியல், கற்பு ஒழுக் கம், சேவைச் செயல், மடமை, நாணம் ஆகி யவை வேறாகவும் அறநூல்கள் கூறுவதோடு ஆண்களின் சான்றாண்மை, ஈகை, ஒப்புரவு, வீரம், செல்வமுடைமை, தவம், தானம், ஆளுகை முதலிய உயர் அறங்களுக்கு ஈடாகப் பெண்களுக்கு கற்பு - பதிவிரதா தர்மம் என்ற ஒன்றே கூறப்பட் டுள்ளது.' (ராஜ்கௌதமன், 1997: 156-171) மேலும், அந்நூல்கள் ஆணை விடப் பெண்ணுக்கே கட்டுப்பாடுகளையும் அறிவுரைகளையும் தாராள மாக எடுத்துரைக்கின்றன.

வைதீகம் - அவைதீகம் என்ற பேதமின்றி பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளை வெகு நுட்பமாக அறநூல்கள் மேற்கொண்டுள்ளன என லாம். பெண்கள் சுயமாக இயங்கும் ஆற்றல் அற் றவர்கள் அவர்களது இயக்கம் முற்றிலும் ஆணைச் சார்ந்தே நிகழ்கிறது. அவர்களுடைய வாய்ச்சொல் லுக்கு எவ்விதமான மதிப்பும் கிடையாது. அவர்க ளது உடலின் மீது கூட எவ்விதமான உரிமையும் அற்றவர்கள் என பெண்களின் சுயத்தினை முற்றி லும் அழித்து, அவர்களின் புழங்கு வெளியாக வீட் டினை வரையறுத்து, கற்புடன் வாழ்வதுதான் அவர் களுடைய சிறப்பு என அறநூல்கள் பெண்களை சித்திரித்துள்ளதோடு ஆண்களின் பாலியல் உந் தல்களைத் கட்டுப்படுத்துவதற்கு பெண் உடலை அசுத்தமானதாகவும் அருவருப்பானதாகவும் கூறி யுள்ளன. மேலும், 'ஆணுக்கும் பெண்ணுக்கும் பருவத்தில் ஏற்படும் உடல் ரீதியான பாலியல் இச் சையை ஆணுக்கானதாக மட்டும் குறுக்கிப் பெண் ணுடலை வெறுமனே போகப் பொருளாக மதிப் பிட்டுள்ள அறநூல்கள் ஆண்களின் குணங்களுக் கும் விருப்பங்களுக்கும் ஏற்ற ஒரு பெண்ணின் பிம்பத்தை வடிவமைக்க முயன்றுள்ளதை அறிய முடிகின்றது.' (முருகேசபாண்டியன், ந, 2011: 92-99)

பெண்களை பத்தினிப் பெண் $X$ பரத்தை என எதி ரெதிர் நிலையில் வைத்துப் பேசும் அறநூல்கள், பத்தினிப் பெண்ணை உயர்ந்தவளாகவும் பரத் தையை தாழ்ந்தவளாகவும் சித்திரிப்பதோடு பத்தி னிப் பெண்ணின் பெருமைக்கு அவளது மென்மை, பணிவு, அடங்கிய பாலியல், கற்பு, விருந்தோம் பல், நாணம் போன்றவற்றை காரணமாக்குகின் றன. இதற்கு மாற்றாக நிறுத்தப்பட்டுள்ள பரத்தை, விலைமகள், கணிகையர், வேசையர் என்போர் பதி யிலாப் பெண்களாகவும் மாயம் செய்பவராகவும் பொருளைக் கவருபவராகவும் கூறப்பட்டுள்ளதோடு அவளைச் சேரும் ஆணுக்கும் இழிவு, இழப்பு, அசுத் தம், பழி, பாவம் என்பன சூழும் எனக் கூறப்பட் டுள்ளது.

பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்கள் வைதீக - அவைதீக பேதமின்றி பரத்தையர் பற்றிய ஒரே பார்வையைத் தந்தாலும் பதினெண் கீழ்க்கணக்கு தவிர்ந்த ஏனைய சமண, பௌத்த நூல்கள் வைதீக மரபிலான பதியிலார் பதிவிலி ருந்து வேறுபட்டுநிற்பதைக் காணலாம். 'மணிமேகலை, சிலம்பு, நீலகேசி, குண்டலகேசி முதலாய சமண, பௌத்த மரபிலான நூல்கள் பதியிலாரின் இருப் பிற்கு அனுதாபத்துடன் கூடிய இடமளிக் கின்றன. கணவனுக்குத் துரோகமிழைத்த சாலியின் மகன் ஆபுத்திரனும், கணிகையின் மகள் மணிமேகலை யும் தான் பசிப்பிணி அகற்றும் பேரறத்தை மேற் கொள்ளுகின்றனர். மாதவி, மணிமேகலை முத லான கணிகையர் குலத்தோன்றல்கள் கௌரவ மாகச் சித்திரிக்கப்படுவதும் இம்மரபில்தான். பிக்கு ணிகளாக இவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது நினைக்கத்தக்கது.' (வேல்சாமி, பொ, "தொல்காப் பியம் முதல் இரத்தக் கண்ணீர் வரை : தமிழ் இலக் கிய மரபில் பதியிலார் குறித்த பதிவுகள்", மார்க்ஸ், அ, வேல்சாமி, பொ (தொ.ஆ), 1998: 100) அதே வேளை அவை தீகம் கடுந்துறவினை வற்புறுத் துவதால் வைதீக மரபிற்கு மாறாக பெண் மறுப் பும், பெண் உடல் பழிப்பும் அவைதீக நூல்களில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவலாக இடம் பெறுகின்றன. உதாரணமாக நால டியாரின் தூய்தன்மை என்ற அதிகாரத்தில் பெண் உடலின் அசுத்தங்களையும், உடல் நிலையாமை யையும் முன்வைத்து பெண்வெறுப்பு பேசப்பட் டுள்ளதைக் காணலாம். இவ்வாறு இவ்வற நூல் கள் யாவும் ஆண், பெண்ணுக்கான அறங்களை பாரபட்சமான முறையில் கட்டமைத்து சமூகத்தை அசமத்துவமான நிலையில் இயக்கங்கொள்ளச் செய்துள்ளதோடு அதில் வெற்றியும் கண்டுள்ளன. ஏனெனில் தமிழ்ச் சமூகத்தில் சிறந்த அல்லது நல்ல பெண் என்ற படிம உருவாக்கத்தில் இவ் அறநூற்கருத்துக்களே இற்றைவரை பெரிதும் தாக் கம் செலுத்துகின்றன.

மேற்கூறியவற்றை தொகுத்து நோக்கின் முடிவுக ளாக பின்வருவனவற்றைக் கூறலாம்:

01.அறங்கள் காலத்திற்குக் காலம் மாற்ற மடை யடைக்கூடியதும் ஆளுக்கு ஆள், கருத்து நிலைக் குக் கருத்துநிலை வேறுபடக்கூடியதுமாகும். அத் தோடு அறங்களின் மதிப்பும் ஏற்புடைமையும் சமூகத் திற்கு சமூகம் வேறுபடக்கூடியது.

02.மனித வாழ்வை நெறிப்படுத்துவதற்கும் சமூகக் கட்டுக்கோப்பைப் பேணுவதற்கும் அடிப்படையா னதெனக் கூறப்பட்டுவந்த அறமானது சமூகத்தின் ஒட்டுமொத்த நலன்சார்ந்தது என்பது மறுதலிக் கப்பட்டு அவை ஆதிக்க நலன் சார்ந்தவை என மறுபொருட்கோடல் செய்யப்படுகின்றது.

03.அறவியலும் சமயமும் மிகவும் நெருங்கிய பிணைப்பினைக் கொண்டவையாகும். அறத்தின் உள்ளார்ந்த மதிப்பு சமய தத்துவ சிந்தனைகளா லேயே முழுமைபெறுகின்றது. இதனால் அறங்கள் சமயச்சார்பு மிக்கவையாக விளங்குகின்றன.

04.ஒவ்வொரு சமயமும் தத்தமது கொள்கைக ளுக்கு ஏற்ப தமக்கான அறங்களை எடுத்துரைத் துள்ளன.

05.தமிழ் இலக்கிய மரபில் சமண-பௌத்த மதங் களின் பரவலாக்கத்துடனேயே தனித்த அறநூல்கள் தோற்றம்பெறத் தொடங்கின. அத்தோடு இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள அறநூல்கள் பெரும்பாலும் சமயச்சார்பு மிக்கவையாகவே விளங்குகின்றன.

06.பதினெண்கீழ்க்கணக்கில் உள்ள அற நூல் கள் தமிழ் அறங்களுடன் வைதீக - அவைதீக அறங் களின் சாரமாகவும் விளங்குகின்றன. அந்நூல் கள் தம்மளவில் சார்புநிலைகொண்டவையாக தத்தமது சமய கொள்கைகளுக்கு ஏற்ப அறங்க ளைப் போதிப்பனவாக உள்ளதோடு ஆங்காங்கு பொதுவான அறங்களையும் கொண்டுள்ளன.

07.வைதீக அறங்கள் வேதங்களைத் தலை மையாகக் கொண்டுள்ளதோடு வருண – ஆசிரம தருமங்களை அறங்களாகக் கொண்டு ஏற்றத் தாழ்வான சமூகத்தை சட்டபூர்வமாகவே ஏற்றுக் கொள்கின்றன.

08.வேதங்களையும் வேள்விகளையும் ஏற்காத அவைதீகம், வருண - ஆசிரம தருமங்களை முற்றிலும் மறுத்து, எல்லா உயிர்களும் சமம் என ஏற்றத்தாழ்வை நிராகரிப்பதோடு துறவினை முக் கிய அறமாக வலியுறுத்துகின்றது.

09.அறநூல்கள் கூறுகின்ற ஆண், பெண் அறங் கள் சமத்துவமற்றவையாகும்.

10.வைதீகம் - அவைதீகம் என்ற பேதமின்றி பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளை வெகு நுட்பமாக அறநூல்கள் மேற் கொண்டுள்ளன.

பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்கள் சமயச் சார் பிற்கு ஏற்ப சார்புநிலைகொண்ட அறங்களையும் அக்கால உடமைச்சமூக விரிவாக்கத்திற்கு ஏற்ப அசமத்துவமான அறங்களையும் எடுத்துரைத் தாலும் தமிழ்ச்சமூகத்தில் அவை ஆழவேரூன்றி யுள்ளதோடு பிற்பட்ட காலங்களில் அவையே தமிழ்ச் சமூக அறங்களாக மீள மீள வலியுறுத் தப்பட்டுள்ளன. இவ்வாறு தமிழறங்களாக உரு கொடுக்கப்பட்டுள்ளவை சார்பு நிலைகொண்ட வையாகவும், அசமத்துவமான சமூக அமை-ப்பை அங்கீகரிப்பவையாகவும் இயக்கம்கொண் டாலும் பண்பாட்டுத் தளத்தில் மிகவும் சக்திவாய்ந்த கருத்தியல் கருவியாக விளங்குவதே-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாடு சமூகத்தில் அவற்றின் மதிப்பும் ஏற்புடைமையும் இன்றும் வலிமையானதாகவே விளங்குகின்றன.

**உசாத்துணை நூல்கள்**

சர்மா, ஆர். எஸ். (2005) பண்டைக்கால இந்தியா (3ஆம் அச்சு). சென்னை: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்.

சிதம்பரனார், சாமி. (1986) பதினெண் கீழ்க் கணக்கும் தமிழர் வாழ்வும் (03ஆம் பதிப்பு). சென்னை: சிவகாமி சிதம்பரனார் இலக்கிய நிலையம்.

சிவத்தம்பி, கார்த்திகேசு. (2007) தமிழில் இலக்கிய வரலாறு (புதுக்கிய பதிப்பு). சென்னை. நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்.

பார்த்தசாரதி.ஆர். (2009) சமணம். சென்னை. நியூசெஞ்சுரி புக்ஹவுஸ்

மார்க்ஸ், அ. வேல்சாமி, பொ. (ப.ஆ) (1998) விளிம்புநிலை ஆய்வுகளும் தமிழ்க்கதையாடல்களும், கும்பகோணம்: நிறப்பிரிகை வெளியீடு.

முருகேசபாண்டியன், ந. (2011) மறுவாசிப்பில் மரபிலக்கியம். சென்னை. நற்றிணைப் பதிப்பகம்.

ராஜ்கௌதமன். (1994) தலித் பார்வையில் தமிழ்ப் பண்பாடு. புதுச்சேரி: கௌரிபதிப்பகம்.

(1997) அறம் அதிகாரம். கோவை: விடியல் பதிப்பகம்.

(2006) பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும். சென்னை: தமிழினி.

வேங்கடசாமி. மயிலை. சீனி. (2003) சமணமும் தமிழும். சென்னை வசந்தா பதிப்பகம்

வேலுப்பிள்ளை. ஆ. (1999) தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும். (3ஆம் பதிப்பு) யாழ்ப்பாணம். இலங்கைப் புத்தக நிலையம்

(2011) தமிழர் சமய வரலாறு. கொழும்பு - சென்னை: குமரன் புத்தக இல்லம்

கலைக்களஞ்சியம் : தொகுதி ஒன்று. (1954) சென்னை: தமிழ் வளர்ச்சிக் கழகம்.

பதினெண்கீழ்க்கணக்கு, (1951) சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

வாழ்வியல் களஞ்சியம் : தொகுதி இரண்டு. (1991) தஞ்சாவூர்: தமிழ்ப்பல்கலைக்கழகம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய சாசனப் பயிலரங்கு - 2015 ஓர் அனுபவப் பதிவும், சாசனவியல் தொடர்பான மேலோட்டமான நோக்கும்

கனகரத்தினம் – கனகதுர்க்கா

3ம் வருடம், தமிழ்த்துறை பேராதனைப் பல்கலைக்கழகம்

பௌத்தசாசனம் மற்றும் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கிவரும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வருடாந்த செயற்பாடுகளில் ஒன்றான சாசனப் பயிலரங்கு என்னும் பல்கலைக்கழக மாணவர்க்கான பயிற்சிப் பட்டறை தொடர்ந்து இவ் வருடமும் 17.01.2015 - 26.01.2015 வரை மட்டக்களப்பில் இடம்பெற்றது. இப்பயிற்சிப் பட்டறையானது கலைசார் கற்கைநெறிகளைத் தொடரும் மாணவர்களுக்கு அத்தியவசியமானது என்பதுடன் இந்து சமயம் போன்ற தொன்மையான மதநெறிகளின் மூலங்களைத்தேடி அச்சமயங்களின் ஆரம்ப பண்பாட்டு நிலைமைகளை அறியவும், ஏற்கனவே சமூகத்தில் நிலவிவரும் சமய, வரலாற்று, தொல்லியல், விஞ்ஞான முடிவுகளை மீட்டுருவாக்கம் செய்யவும், துறைசார் கல்வியோடு ஆய்வுமனப்பாங்கை அதிகரிக்கச் செய்யவும் இது களமாக அமைந்தது. அவ்வகையில் தமிழ், வரலாறு, இந்துநாகரிகம் மற்றும் தொல்லியல் துறைகளில் கற்கும் பல்கலைக்கழக மாணவர்க்கு நடாத்தப்பட்ட இப்பயிலரங்கில் கலந்து பயன்பெற்றவள் என்ற வகையிலே இக் கட்டுரையை எழுதத் துணிகிறேன்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இம் முயற்சியானது ஏறத்தாள 10 வருடங்களுக்க மேல் தொடர்ச்சியாக நடைபெறும் ஒரு அரிய முயற்சியாகும். "சமயம் என்பது சமூகத் தொண்டாகி மலர வேண்டும்" என்ற சுவாமி விவேகானந்தரின் கொள்கையை அடியொற்றி இத் திணைக்களம் ஆற்றும் சமூகப் பணிகள் எண்ணிலடங்காதவை. இச் சாசனம் தொடர்பான பயிலரங்கும் அத்தகைய பணிகளில் ஒன்று. வெறுமனே இந்து மதத்தை மட்டும் வளரச் செய்தலை நோக்காகக் கொள்ளாமல் புலமைத்துவம் உடைய மாணவ சமுதாயம் ஒன்றை உருவாக்கி அதன் மூலம் எதிர்காலத்தை நோக்கிய சமூகவளர்ச்சிக்கு உதவுவதில் இத்திணைக்களத்தின் பங்கு அளப்பரியது. எனில் இச் சாசனம் தொடர்பான அறிவு மாணவரிடையே எத்தகைய மீத்திறனை விளைவிக்கும் எனும் வினாவையும் திணைக்களத்தை நோக்கி எழுப்ப முடியும். இனிப்பை உண்டவன் தானாக அச்சுவையை உணர்வது போல் அப் பயிலரங்கில் கலந்து கொள்ளும் ஒவ்வொரு மாணவனும் ஒரு புதுமையான வாழ்வியலனுபவத்தை உணர்வதை இக் கட்டுரை வாயிலாக அறியமுடியும்.

அவ்வகையில் இவ்வாண்டுக்குரிய சாசானப் பயிலமர்வானது உத்தராயணபட்சத் தொடக்க நாளான தைப்பொங்கல், பட்டிப்பொங்கலை அடுத்து தை 3ம் நாள் 17ம் திகதி ஆரம்பமாகியது

**காலம்: 17.01.2015 – 26.01.2015**

**இடம்: மட்டக்களப்பு, நாவற்குடா, இந்து கலாசார மண்டபம்**

இப் பயிலமர்வில் கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 50 மாணவர்கள் கலந்து கொண்டபோது, எமக்கு இச் சாசனம் தொடர்பான அறிவை வழங்குவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காக மூத்த பேராசிரியர் பத்மநாதன் ஐயா அவர்களும் தமிழ் நாட்டைச் சேர்ந்த தொல்லியல் ஆய்வாளர் பேராசிரியர் வேதாசலம் ஐயா அவர்களும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தொல்லியல்த் துறைத் தலைவர் பேராசிரியர் சேனநாயக்கா அவர்களும் வருகை தந்திருந்தனர். இப் பயிலரங்கைச் சிறப்பான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கென இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சின் உத்தியோகத்தர்கள் எமக்கு ஒத்தாசையாகச் செயற்பட்டனர். அவ்வகையில் இச்சாசனம் தொடர்பான பயிற்சிப்பட்டறை வெற்றிகரமாக இடம்பெறுவதற்கு அனைத்து அம்சங்களும் குருயோகமாக அமைந்திருந்தது.

அவ்வகையில் முதல்நாள் பயிலமர்வானது அங்குரார்ப்பண வைபவத்தோடு ஆரம்பமாகியதால் பயிற்சிகள் யாவும் மதிய இடைவேளையின் பின்னரே ஆரம்பமாகின. எனினும் அங்குரார்ப்பண உரையிலேயே அனைத்து விடயங்களும் சாரமாகக் கூறப்பட்டதால் அவை ஈரமாகவே மனத்துள் படிந்து பின் பயிற்சி நாட்களில் விடயங்களை எளிதாகக் கிரகிக்கவும், கிரகித்தவற்றை வியாக்கியானம் செய்யவும், வினா எழுப்பி சந்தேகத்தைத் தெளிவுபடுத்தவும் எளிதாயிருந்தது.

முதல்நாள் பயிலமர்வில் பேராசிரியர். வேதாசலம் அவர்களின் விரிவுரை இடம்பெற்றது. எழுத்துக்களின் தோற்றம் மற்றும் தொன்மையான எழுத்துக்கள், அவற்றின் வளர்ச்சி தொடர்பான இதர அம்சங்களைப் போதிப்பவையாகவும் தமிழ் நாட்டு கல்வெட்டுகள், செப்பு சாசானங்கள் என்பவற்றை விளக்குமுகமாகவும் அவரின் விரிவுரைகள் அமைந்தன. பேராசிரியர் பத்மநாதன் ஐயா அவர்கள் இலங்கைத் தமிழ்ச் சாசனம் அவற்றிலே காணப்படும் எழுத்துப் பாரம்பரியம் மற்றும் செய்திகள் என்பவற்றை விளக்கினார். பேராசிரியர் சேனநாயக்கா அவர்கள் இலங்கைப் பிராகிருதக் கல்வெட்டுகள், இக் கல்வெட்டுகளில் காணக்கூடிய தமிழ்ச்சொற்கள். இச் சொற் கலப்புகளில் காணப்படத்தக்க மறைமுகமான மரபுகள் என்பவற்றை விளக்கினார். இவை சாசனம் தொடர்பான போதிய அறிவைப் பெறுவதற்கு அடிப்படையான அம்சங்களாக அமைந்தன.

10 நாட்களில் 7 நாட்களே விரிவுரைகள் இடம்பெற்றன. இவ் விரிவுரைகளில் கூறப்பட்ட செய்திகள் குருடன் பார்த்த மாடு போல் மாணவர் மனதில் பதிந்து விடக்கூடாது என்பதற்காக 7ம் நாளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த களப்பயணம் அனைத்து மாணவர்களுக்கும் சிறந்த ஓர் உற்சாகமான அனுபவமாகும். மட்டக்களப்பிலுள்ள குசலான் மலை எனப்படும் ஒரு எச்சக்குன்று அல்லது சிறுபாறைக் குன்றுத் திணிவிலுள்ள பாறைக் கல்வெட்டுகளைப் பார்யைிடுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக்களப்பயணம் வெற்றிகரமாக அமைந்தது. கல்வெட்டுக்களை இனங்காணல், அதனைப் படியெடுத்தல் (பிரதி பண்ணுதல்) கல்வெட்டுகளை வாசித்தல், அது கூறும் செய்தியை விரித்துரைத்தல் என்பவற்றினூடு பிற ஆதாரங்களோடு அதனைத் தொடர்புபடுத்தி காலக்கணிப்புச் செய்து அதனைச் சிறந்த வரலாற்று ஆதாரமாகக் கொள்ளும் முறையைப் பேராசிரியர் வேதாசலம் ஐயா அவர்கள் விளக்கினார். களப்பயணத்தன்று மாலையில் இடம்பெற்ற சிறியநேர பயிலமர்வில் அன்றைய அனுபவங்கள் பகிரப்பட்டுப் புகைப்படங்கள் காட்சிப் படுத்தப்பட்டன,

7நாட்கள் பயிலமர்வு, மற்றும் 1 நாள் களப்பயணம் என்பவற்றை அனுபவமாகவும் அறிவாகவும் கொண்டு மாணவர்களின் திறனை அறிவதற்கான பரீட்சை ஒன்று 9ம் நாள் இடம்பெற்றது. இதில் மாணவர்களின் விடாமுயற்சியுடன் கூடிய வினைத்திறனை 10ம் நாள் வெளியிடப்பட்ட பெறுபேற்றில் காணமுடிந்தது. உண்மையிலே ஆசிரியனின் வெற்றி என்பது கற்பிப்பதுடன் முடிந்து விடுவதில்லை. தன்னை விடச் சிறந்த மாணவனை உருவாக்குவதில் தான் ஓர் ஆசிரியன் முழுமையும் வெற்றியும் காண்கிறான். அவ்வகையில் சிறந்த புலமைமிக்க மாணவர்களைப் பத்தே நாட்களில் உருவாக்கிய வகையில் மூன்று பேராசிரியர்களுமே வெற்றிகண்டனர் என்றால் மிகையல்ல. எனவே அச் சாசனப் பயிலரங்கில் கலந்துகொண்ட அனுபவத்தை முதன்மையாகக் கொண்டு சாசனங்கள் பற்றிய மேலோட்டமான பார்வையாக இக்கட்டுரை அமைகிறது. இக்கட்டுரையானது இப்பயிலமர்வின் வெற்றிக்குச் சான்றாக அமையும் அதே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளை, எதிர்காலத்தில் அக் கருத்தமர்வுகளில் கலந்து பயன்பெறும் மாணவர்க்கும் துணையாய் அமையும். மேலும் இந்து தர்மம் என்னும் இவ் இதழ் ஆனது பெரும்பாலும் சமயச் சார்புடைய கட்டுரைகளையே உள்ளடக்கமாகக் கொள்வதால், சாசனங்களில் வெளிப்பட்டு நிற்கும் இந்துமதம் தொடர்பான செய்திகள் என்ற உப தலைப்பையும் மேலதிகமாச் சேர்த்துள்ளேன்.

### சாசனவியல் - ஓர் மேலோட்டமான பார்வை

சாசனவியல் என்பது சாசனம் தொடர்பான விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சியாகும். இது "சாஸ்" என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்டு பிறந்தது. சாஸ் என்றால் ஆடுதல் என்ற பொருளுடையது. இச் சாசனங்கள் வரலாற்று மரபின் மூலாதாரமாகும். வெறுமனே கூறப்படும் கட்டுக்கதையான மரபிலிருந்து ஆதார பூர்வமான தகவலுடன் வரலாற்றைச் செப்பனிட சாசனங்கள் உதவுகின்றன. அவ்வகையில் மொழி வரலாறு, சமய வரலாறு, சமூக வரலாறு, அரசியல் வரலாறு, கலை மரபுகள் என்பவற்றைக் கட்டமைக்கச் சாசனங்கள் துணைபுரிகின்றன. தமிழ்ப் பண்பாண்டைப் பொறுத்தவரை அதன் வரலாற்றுக் காலங்களைக் கட்டமைப்பதிலும் குறிப்பாக மன்னர்களின் ஆட்சி முறை பற்றித் தெரியப்படுத்தும் மிகப்பெரிய சாட்சி இச்சானங்களே. மனித தொடர்பாடலின் உன்னத வளர்ச்சியால் தோன்றிய எழுத்துக்களே இச் சாசனத்தின் ஆதாரமாகும். மானிடம் பேசிய வார்த்தை மானிடத்தோடு மரணித்து விட அம் மானிடரின் உன்னத செயற்பாடுகளை இன்றுவரை மரணிக்கமால் கூறும் ஆதாரங்களே சாசனங்கள். மானிடத்திற்கு மட்டுமே பேசும் ஆற்றலை வழங்கிய இறைவனின் சக்திக்கு எதிரே ஜடமான கல்லையும், மண்ணையும் (களிமண் தகடு), உலோகத்தையும் பேசவைத்து தன் வரலாற்றை வாழ்வித்த பெருமை மானிடனுக்கே சொந்தமானது. ஒப்புயர்வில்லா சிறப்புடைய அப்படைப்புகளிடையே பொறித்து வைத்த தூண் கல்வெட்டுக்களை இடித்துவந்து தம்மனை மேவும் நோக்கில் வரலாற்று மூலாதாரத்தைச் சிதைத்த சிறுமையும் மானிட குலத்திற்கே உரியது. எனவே இச் சாசனப் பயிலமர்வின் நோக்கம்

1.புதிய ஆதாரங்களைக் கண்டுபிடிப்பது.
2.ஏலவே கண்டுபிடித்தவற்றை முறையாக வாசிப்பது
3.பழைய ஆதாரங்களையும், மேலுமுள்ள ஆதாரங்களையும் பாதுகாப்பது. என்பவையே

சாசனவியல் கற்கும் மாணவர்கள் அனைவரும் இம் மூன்று கடப்பாட்டுக்கும் உரித்துடையவர். அவ்வகையில் சிறந்ததொரு வரலாற்றைக் கட்டமைப்பதனூடு சிறந்த சமூகப் பண்பாட்டைக் கட்டியெழுப்ப வேண்டியவர்களும் இவர்களேயாவர். அவ்வகையில் சாசனமென்றால் யாதென்று பார்த்தோம். அதாவது செய்திகளைத் தெரியப்படுத்தும் காலத்தால் அழியாத பொருட்களை சாசனங்கள் என்போம். ஆவணங்களை எழுதப்பயன்படும் அழிவற்ற பொருட்கள். உ-ம் கல்வெட்டு, செப்பேடு

இச் சாசனங்கள் மிகத் தொன்மையான செய்திகளைத் தெரியப்படுத்தும் வகையில் வரலாற்று மூலாதாரங்களாக விளங்குகின்றன என்றும் கண்டோம். இனி இச் சாசனங்கள் கூறும் செய்தி, கூறும் முறை, வரிவடிவம் தொடர்பான செய்திகளை தமிழ்ச் சாசனங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்குவோம். ஏனெனில் இவை வரலாற்று மூலாதாரமாவதற்கு அவை அமைந்துள்ள வரிவடிவம், கூறும் செய்தி என்பன முக்கியமானவை.

## வரி வடிவம்

சாசனங்களின் காலத்தை எளிதில் கணிக்க எமக்குத் துணைசெய்வன அவற்றின் வரிவடிவமே எனலாம். காலத்தால் முற்பட்ட தமிழ்ச் சாசனங்கள் தமிழ் பிராமி எழுத்திலும், இடைப்பட்டவை வட்டெழுத்து மற்றும் கிரந்த எழுத்துகளிலும், அதன் பின்னரானவை தமிழி எழுத்திலும், அதன் பின்னரானவை தமிழியில் இருந்து சற்று நாகரிகம் பெற்ற எழுத்து முறையிலும் அமைந்துள்ளன. முற்பட்ட தமிழ்ச் சாசனங்கள் கி.மு3ம், கி.பி-3ம் நூற்றாண்டுக்குரியவை. இவை பெரும்பாலும் இயற்கை நெறிக்காலம் மற்றும் அறநெறிக் காலத்தின் தொடக்கத்தை உள்ளடக்கியது. ஏனெ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னில் அறநெறிக் காலத்தில் தோற்றம் பெற்ற தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியம் எழுத்து பற்றிக் கூறும் சூத்திரத்தில் எ. ஒ என்பன புள்ளி பெறும் என்கிறது. இம் முறையை நாம் தமிழ் பிராமி எழுத்துக்களில் காணலாம். பிராமி எழுத்துக்களில் எ ஏ. ஒ ஓ என்பவற்றில் குறில் நெடில் வேறுபாட்டை இனங்காண குறிலுக்குப் புள்ளியிட்டெழுதும் முறை காணப்பட்டது. இக்காலத்துக்குரிய கல்வெட்டுகளில் மாங்குளம் கல்வெட்டு. ஜம்பைக் கல்வெட்டு. புகளூர்க் கல்வெட்டு என்பன குறிப்பிடத்தக்கவை.

கி.பி-3ம் நூற்றாண்டு முதல் கி.பி6ம் நூற்றாண்டு வரையில் வட்டெழுத்து செல்வாக்குப் பெற்றிருந்தது. இதன் பின்னரான காலப்பகுதியில் தமிழ் எழுத்துக்கள் செல்வாக்குப் பெற்றிருந்தன. சோழர் காலத்தில் இவ் எழுத்துக்கள் தமிழி என அழைக்கப்பட்டன. எனினும் பல்லவர் காலத்தில் சமஸ்கிருதத்தை எழுத கிரந்த எழுத்தைப் பயன்படுத்தினர். இது பல்லவ கிரந்தம் என அழைக்கப்பட்டது. இவ்வகையில் சமணநூலாகிய "சமவயாங்க சுத்த" என்னும் நூல் குறிப்பிடும் 18 வகையான எழுத்துக்களில் பிராமி. கிரந்தம். தமிழி போன்ற தமிழ் வரிவடிவங்கள் குறிப்பிடப்பட்டுள்ளமை முக்கிய அம்சமாகும். செப்பேடுகளில் தமிழ் எழுத்துக் காணப்படும் முதலாவது செப்பேடாக சிம்மவர்மன் காலத்துக்குரிய பள்ளன் கோயில் செப்பேட்டைக் குறிப்பிடலாம். இவ்வாறு சாசனங்களில் வரிவடிவமும் முக்கியம் பெற்றுள்ளதைக் காணலாம். இவ் வரிவடிவம் காலக்கணிப்பு. மற்றும் மொழியியல் வளர்ச்சி பற்றி அறியவும் உதவுகின்றது.

## சாசனம் கூறும் செய்தி

சாசனவியலைப் பொறுத்தவரை சாசனம் கூறும் செய்தி முக்கியமானது. பொதுவாகச் சாசனங்கள் அரசர்களின் ஆணையாகவோ. பிரகடனமாகவோ. தானம் குறித்த செய்தியாகவோ. தர்மம் பற்றிய செய்தியாகவோ அமைந்திருக்கும். பெரும்பாலான சாசனங்கள் தானம் வழங்கியமை பற்றிய செய்தியைக் கூறுவதாகவே அமைந்துள்ளன. அவ்வகையில் எமக்குக் கிடைக்கம் முதலாவது தமிழ்ச் சாசனமான மாங்குளம் கல்வெட்டு நந்த வம்சத்தைச் சேர்ந்த இகுவன் என்ற சிரமணனுக்கு பாண்டிய நெடுஞ்செழியனின் அரசியல் உறவினனான வழுத்திய் அல்லது வழுதி பள்ளி அமைத்துக் கொடுத்தான் என்னும் தானச் செய்தி சொல்லப் படுகின்றது. மிகவும் பழமையான ஜம்பைக் கல்வெட்டில் அதியமான் நெடுமானஞ்சி என்பான் செய்த தானம் பற்றிக் கூறப்பட்டுள்ளது

*"சதியபுதோ அதியந் நெடுமான் அஞ்சி ஈத்த பாளி"*

பதிற்றுப்பத்தில் சிறப்பிக்கப்படும் 10 சேர மன்னர்களில் 7ம்.8ம்.9ம் பத்திற்குரிய பாட்டுடைத் தலைவர்களாகச் சிறப்பிக்கப்படுபவர்கள் முறையே செல்வக்கடுங்கோ வாழியாதன். பெருங்சேரல் இரும்பொறை. இளங்சேரல் இரும்பொறை என்னும் சேர மன்னர்கள் ஆவர். இவர்கள் பற்றிய செய்தியைக் குறிப்பிடுவதாக புகளூர்க் கல்வெட்டுக் காணப்படுகின்றது. இக் கல்வெட்டுத் தரும் செய்தி பின்வருமாறு

*"மூதா அமண்ணன் யாற்றூர் செங்காயபன் உறை*
*கோஆதன் செல்லிரும்பொறை*
*மகன் பெருங்கடுங்கோ மகன் ளங்கடுங்கோ ளங்கோ*
*வாகி அறுத்த கல்"*

அதாவது செங்காயபன் என்னும் அமணனுக்கு இளஞ்சேரல் இரும்பொறை என்பவன் அரசனாக முடிசூடியபின் அளித்த தானம் பற்றியும். அவனுக்கு முன்னர் ஆட்சிசெய்த அவன் வம்சத்தினர் பற்றிய செய்தியும் காணப்படுகின்றது. இவ்வாறு கல்வெட்டுகள் அரசர். மற்றும் தானம் பற்றிய செய்தியைக் குறிப்பிடுபவையாக அமைகின்றன. செப்பேடுகளிலும் இத்தன்மையே மேலோங்கி நிற்கக் காணலாம். சின்னமனூர் பெரியசெப்பேடு. தளவாய்புரம் மற்றும் சிவகாசிச் செப்பேடு. வேள்விக்குடிச் செப்பேடு என்பன இத்தகையன. வேள்விக்குடிச் செப்பேடானது கி.பி8ம் நூற்றாண்டுக் குரியது. பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி எனும் சங்ககாலப் பாண்டிய மன்னன். கொற்கைக்கிழான் நற்கொற்றன் என்னும் பிராமணருக்கு தானமாகக் கொடுத்த நிலங்களை. கலியரசன் எனும் களப்பிர மன்னன் பிடுங்கிவிட்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி.768 ஆம் ஆண்டு. பாண்டிய மன்னனிடம் ஒரு பிராமணன். இதைச் சொல்லி அழுகிறான். அப் பாண்டியன் மீண்டும் நிலங்களை பிராம ணனுக்கு தானமாக அளித்தான்' என்பதே வேள் விக்குடிச் செப்பேடு உரைக்கும் சேதியின் சாரம். இச் சாரத்தினூடு பாண்டியர் கால அரச, சமூக, பொருளாதார அம்சங்களை அறியமுடிவதோடு இச் செப்பேட்டின் துணையுடன் பண்டைய தமிழக வரலாற்றின் சிறுபகுதியினை விளங்கிக் கொள்ள முடிகின்றது.

எனினும் பிற்காலச் சாசனங்கள் பொதுவாகக் கலைமரபு பற்றிய செய்தியைப் புலப்படுத்துபவை. தானம், மற்றும் அரசவம்சம் பற்றிய செய்திக ளோடு பல்லவ சோழ மன்னர்களின் பிரமாண் டமான கலைப்படைப்புகள் பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளன. பல்வர்களின் மண்டகப்பட்டு, மாமண் டூர், வல்லம், தளவானூர், திருச்சிராப்பள்ளிக் கல் வெட்டுகள் பல்லவ கலைப்பாணியான குடைவ ரைக் கோயில்கள் பற்றிய செய்தியைக் கூறுகின் றன. சோழர்காலச் செப்பேடுகளும் கலைப்படைப் புகள் பற்றிக் கூறுகின்றமை சிறப்புக்குரிய அம் சமாகும். எனினும் நிர்வாக அலுவல்கள் மற்றும் தேர்தல் முறையான செய்திகளும் கல்வெட்டுக ளில் காணப்படுகின்றன. இதற்குச் சான்றாக உருத் திரமேரூர்க் குடவோலைக் கல்வெட்டைக் குறிப்பி டலாம். இவ்வாறு சாசனங்கள் கூறும் செய்தியா னது பொதுவாக தானம் பற்றியதே எனினும் வேறு பல செய்திகளும் உள்ளடங்கியிருக்கக் காணலாம். அசோக பிராமிச் சாசனங்களில் அனேகமானவை தர்மம் பற்றிய செய்தியைக் கூறுபவையாக அமைந் துள்ளன.

## சாசனங்களில் செய்தி கூறப்படும்முறை

கல்வெட்டுக்கள், செப்பேடுகள், பொற்சாசனம் என் பவற்றில் அரசர்களின் ஆணைகள் அல்லது பிற செய்திகள் கூறப்படும்போது அவை ஓர் ஒழுங் குமுறையிலே கூறப்படுகின்றன. அஃது பின்வரு மாறு.

1. மங்கலச்சொல்
2. மெய்க்கீர்த்தி
3. காலக்குறிப்பு
4. நோக்கம் அல்லது செய்தி
5. ஓம்படைக்கிளவி/முடிவுச்சொல்

பொதுவாகச் சாசனங்கள் இவ் அமைப்பு முறை யிலேயே காணப்படும். எனினும் செப்புச் சாசனங் களில் சமஸ்கிருதப்பகுதி, தமிழ்ப்பகுதி என இரு பகுதிகள் காணப்படும். மங்கலச்சொல் என்னும் போது இது இறை ஸ்துதியாகவே காணப்படும். ஸ்வஸ்திஸ்ரீ, சுபமஸ்து, நமமோஸ்து, ஹரி சுப மஸ்து, சிவமயம், நமசிவாய, ஓம் நமோ நாரா யணா, கணபதி நம போன்ற தொடக்கச் சொற்க ளைக் கொண்டு அமைந்திருக்கும். இத் தொடக்கச் சொல் மன்னனின் மதப்பற்றை விளக்குவதாக. அல் லது மன்னன் எச்சமயம் சார்ந்தவன் என்பதை விளக்குவதாக அமையும்.

மெய்க்கீர்த்தி. இது அரசரின் புகழ் பாடுவதாக அமைந்திருக்கும். முதன் முதலில் கல்வெட்டுக ளில் மெய்க்கீர்த்தி எழுதும் வழக்கைக் கொண்டி ருந்தவன் இராஜராஜனே. இவனைத் தொடர்ந்து இராஜேந்திரன், ஸ்ரீவல்லபன், பராக்கிரம பாண்டி யன், சுந்தர பாண்டியன் முதலானோர் தம் வீர தீர பராக்கிரமங்களை மெய்க் கீர்த்திகளாக எழு தும் வழக்கைக் கொண்டிருந்தனர். அடுத்து இடம் பெறும் காலக்குறிப்பானது ஆண்டு, யாண்டு என இரு வகைப்படும். ஆண்டு என்பது கலியாண்டு, சக ஆண்டு, கொல்லமாண்டு, வியாழவட்டம் போன்ற ஆண்டுக் கணிப்பைக் கொண்டது. யாண்டு என்பது மன்னனின் ஆட்சியாண்டைக் குறிப்பது. ஆண்டிலிருந்து மன்னரின் ஆட்சி யாண்டைக் கிறிஸ்து ஆண்டில் கணிப்பதற்கு கலியாண்டு ஆயின் கழித்தும், சக மற்றும் கொல்லமாண்டாயின் அவ்வாண்டு பிறந்த ஆண் டைக் கூட்டவும் வேண்டும். இக் காலக் குறிப்பில் வருடம், மாதம், கிழமை, நாள், நாழிகை, நட்சத் திரம் போன்ற பஞ்சாங்கக் குறிப் புகளும் இடம் பெறும்.

## நோக்கம்

சாசனங்களின் நோக்கம் செய்தியைத் தெரிவித் தலே. இவ்வகையில் நாம் முன்னர் நோக்கிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறு அரசசெய்தி. தானம், கலைகள், நிர்வாக நடவடிக்கைகள், அரசரால் வழங்கப்பட்ட தண்டனைகள், தர்மம் பற்றிய கருத்துகள் என்பன இடம் பெறும். சாசனம் ஒன்றின் உயிர் அல்லது கருவாக விளங்கும் பகுதி இதுவே ஆகும்.

### ஓம்படைக்கிளவி

ஓம்படைக்கிளவி என்பது தர்மம் குறித்து வரும் சொல்லாடலாகும். இந் நிலவுலகில் சூரிய சந்திரர் நிலைத்திருக்கும் வரை தர்மம் நிலைத்திருக்க வேண்டும் என்ற கருத்துப்பட இது அமையும். நன்மை புரிபவரை வாழ்த்துவதாகவும் தீமை புரிவோரை சபிப்பதாகவும் இவ் ஓம்படைக்கிளவி அமையும்

உ-ம் - வாழ்த்தல் - இது காத்தார் அடி என் சென்னி மேலின.

சபித்தல் - இதற்கு அகிதம் செய்தார் கங்கையிடைக் குமரியிடையுளோர் செய்த பாவத்தில் போகக் கடவது.

இவ்வாறு சாசனங்களானவை அவை கொண்டுள்ள செய்தி, அமைந்துள்ள வரிவடிவம், செய்தி கூறும் முறை என்பவற்றின் அடிப்படையில் வரலாற்று மூலாதாரங்களாக அமைகின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டே வரலாற்றுக் காலங்கள் வரையறை செய்யப்பட்டுள்ளன. அன்றியும் சாசனங்களானவை இலக்கியப் பனுவல்களிற்கு ஆதாரமாகவும் அமைந்துள்ளன. வெறுமனே எழுத்து வரிகளாக மட்டும் அமையாமல் சிறந்த கவித்துவம் உடைய பாடல்களைக் கொண்டும் இக் கல்வெட்டுகள் அமைந்துள்ளமை சிறப்பக்குரிய அம்சமாகும்.

### இந்துமதம் தொடர்பான செய்திகளை வெளிப்படுத்தும் வகையில் சாசனங்கள்.

தமிழில் காணப்படும் சாசனங்களில் மிக மிக அதிகமானவை இந்து சமயச் சார்புடையவை என்பது மேற்கூறிவாற்றால் தெளிவாகும். அவ்வகையில் தமிழகம் மற்றும் ஈழத்தில் காணப்படும் சாசனங்கள் பெரும்பாலும் கோயிற் கல்வெட்டுக்களாகவே காணப்படுகின்றன. கோயிற் கலைமரபுக்குரியவையாகவும், பிராமணர்க்கு அளிக்கப்பட்ட தானங்கள் பற்றிக் கூறுவதாகவுமே அதிகமான கல்வெட்டுகள் மற்றும் செப்புப் பட்டயங்கள் காணப்படுகின்றன. கல்வெட்டுகள் மற்றும் செப்பேடுகள் என்பவற்றுக்கு முற்பட்ட காலத்ததெனக் கருதப்படும் தொல்லியல் சான்றுகள், முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளான சிவனை முழுமுதலாகக் கொண்ட மக்களின் வழிபாட்டு நெறிபற்றி அறியக் கிடைக்கும் மூல ஆதாரங்கள் ஆகும். அவ்வகையில் எங்கும் எதிலும் பரந்துள்ள இறைவனை உருவ, அருவ, அருஉருவத் திருமேனிகளில் வழிபடும் இந்து வழிபாட்டியலின் தொன்மையைத் தொல்லியல் ஆய்வாளர்களும் துல்லியமாகக் கூறமுடியவில்லை என்பதே உண்மை. எனினும் இத்தொல்பொருட் சான்றுகள் இந்து மதத் தொன்மையை வெளிப்படுத்தும் ஆட்சி, சாட்சி, ஆவணமாக விளங்கும்போது கல்வெட்டு, செப்புப் பட்டயம் போன்ற சாசனங்கள் இந்துமதச் செய்திகளை வெளிப்படுத்துமாற்றைச் சுருக்கமாக நோக்குவோம்.

மங்கலச்சொல் இந்துமதக் கடவுளரை முதன்மைப்படுத்தல். சிவஸ்துதியோடு தொடங்குதல் - வேள்விக்குடிச் செப்பேடு சமஸ்கிருதப்பகுதி. ஏனையவற்றில் விஸ்ணு, கணபதி போன்ற தெய்வங்களின் ஸ்துதி காணப்படல்.

பிராமணர்க்கு அளித்த தானம் பற்றிய செய்திகள். இத் தானம் பிரம்மதேயம், சதுர்வேதி மங்கலம், அக்ரகாரம், எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளது. வேள்விக்குடிச் செப்பேடு, கந்தளாய்க் கல்வெட்டு, பூலங்குறிச்சிக் கல்வெட்டு

இந்துக் கோயில்களுக்குரிய கிரியை மரபுகள். அவற்றுக்குரிய மானியங்கள் நிவந்தங்களைக் குறிப்பிடல் - ஆனைமங்கலம் செப்பேடு, திருவாலங்காடு செப்பேடு மாந்தைக் கல்வெட்டு இச் சாசனங்களில் ஆலயத் திருப்பணிக்கு மன்னர்கள் அளித்த நன்கொடைகள், விளக்குத் திருப்பணிக்குச் செய்யப்பட்ட ஏற்பாடுகள் பற்றிய செய்திகள் காணப்படல். மாந்தைக் கல்வெட்டில் கூறப்படும் சாவா மூவாப் பேராடு பற்றிய செய்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறையாக இருந்த கோயிலை நிறைவாக்கி யமை – யானை மலைக் கல்வெட்டு வரகுண பாண்டியன் காலத்திலே அவன் மந்திரியான மாறன் காரி என்பவன் குடைவரைக்கோயில் ஒன்றை அமைத்தான். அவன் அதைப் பூர்த்திசெய்யாது இறந்துவிட அவனின் தம்பி மாறன் எயினன் என் பவன் முகமண்டபம் அமைத்து அக்கோயிலைப் பூர்த்தி செய்தான்.

இந்துக் கட்டடக் கலைமரபை வெளிப்படுத்து வதாக அமைந்திருத்தல் - மண்டகப்பட்டு, மாமண் டூர், தளவானூர், பல்லாவரம் கல்வெட்டுகள் - மண், மரம், சுதை, செங்கல் போன்ற அழியக் கூடிய பொருட்களைத் தவிர்த்து பிரம்மா, விஸ்ணு, சிவன் என்கின்ற மும்மூர்த்திகளுக்கும் விசித்திர-சித்தன் என்னும் மன்னன் ஒப்புயர்வற்ற வகை யில் கற்றளிக் கோயிலை நிறுவினான் என்று மண்டகப்பட்டு சாசனம் குறிப்பிடுகின்றது.

சாத்தன் கணபதி என்பவன் சிவனுக்கு நிறுவிய குடைவரைக்கோயில் - திருப்பரங்குன்ற கல்வெட்டு

ஓம்படைக்கிளவி வெளிப்படுத்தும் தர்மம் பற்றிய சிந்தனை. - இந்துமத மரபில் கங்கை, யமுனை, குமரி, காரம்பசு, மாதா, பிதா, குரு, போன்ற சிந்தனைகள் உயர் தர்மத்துக்குரியவை. அவ் வகையில் ஓம்படைக்கிளவியானது தர்மத்திற்கு அகிதம் செய்தவர்கள் பாவமாகிய நரகத்தில் அழுந் துவர் என்னும் சிந்தனை இந்துதர்ம சிந்தனையை அடியொற்றியதே.

தொன்மையான பெண்தெய்வ வழிபாடு பற்றிக் குறிப்பிடல், பெண்தெய்வங்களுக்கான கோயில்கள் பற்றிய குறிப்பு – திருப்பரங்குன்றக் கல்வெட்டு – துர்க்கை, ஜேஸ்டாதேவி ( மூத்ததேவி ) க்கான கோயில்களை எடுத்தமை தொடர்பான செய்திக ளைக் குறிப்பிடுகின்றது.

கோயில்களுக்கான தீர்த்தம் அமைத்தல் - திருப் பரங்குன்றக் கல்வெட்டு – சாத்தன் கணபதி என்பான் ஸ்ரீதடாகம் என்ற லக்ஸ்மி தீர்த்தத்தைச் செய்தான் என்ற குறிப்பு

இவை தவிர அரசர்கள் தம் பிறந்ததினம் போன்ற நாட்களில் கோயில்களுக்கு வழங்கிய தானங்கள், ஆலயங்களுக்கு அளித்த நிலமானியங்கள், கோயில்களில் ஓதுவார், நிருத்த மகளிரை நியமித் தமை தொடர்பான செய்திகள் என்பனவும் சோழர் காலச் சாசனங்களினூடு கிடைக்கும். ஆராய்ந்து நோக்குங்கால் எமக்குக் கிடைக்கும் பெரும்பாலான பழமையான சாசனங்கள் காலனித்துவ ஆட்சிக்கு முந்தியவையே. எனில் அக்காலத்தே நிலவிய தமிழர் மதம் என்பது வைதீகச் செந்நெறி தழுவி யதே. ஆகவே பெரும்பாலான தமிழ் சாசனங்கள் இந்து மதம்சார் செய்திகளை வெளிப்படுத்துபவை-வயா கவே அமைந்தன எனலாம்.

இவற்றோடு சிந்துவெளி காலத்துக்குரிய தொல்பொ ருட்கள் இந்துசமயம் தொடர்பான தொன்மை யான செய்திகளை வெளிப்படுத்தும் சான்றுகளாக விளங்குகின்றன. நாணயங்கள், சுடுமண் உருவங் கள், தாயத்துக்கள், அகழ்வாய்வுகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட உடைந்த சிற்பங்கள், கட்டட இடிபாடுகள் என்பன சிவ வழிபாடு, இலிங்க வழி பாடு, தாய்த்தெய்வ வழிபாடு, சூரியவழிபாடு, இயற்கை வழிபாடு (மரம், நீர், தேவதைகளை வழிபடுதல்), என்பவை நிலவியதற்கான ஆதாரங்களான தொல் பொருட் சான்றுகளாக அமைகின்றன.

இவ்வாறு சாசனங்களானவை வெறுமனே செய்தி யைக் கூறுபவையாக மட்டும் அமையாமல் அவை பண்டைய மனிதனின் நாகரிகத்தைப் பறைசாற்றும் மூல ஏடுகளாகவும் பண்பாட்டுக் கருவூலங்களா கவும் அமைந்துள்ளன எனலாம். அவ்வகையில் வரலாற்றைக் கட்டமைத்தல், மீட்டுருவாக்கம் செய் தல் என்ற இருதள நோக்கிலும் சாசனங்களின் பங்கு உன்னதமானது என்பதில் ஐயமில்லை. சாசனங் களைக் கற்பது, அல்லது அது தொடர்பான ஆய்வு களை மேற்கொள்வது என்பது சாதாரண விடய மல்ல. அது ஓர் விஞ்ஞான கண்டுபிடிப்புக்கு நிகரா னது. புதிய விஞ்ஞான கண்டுபிடிப்பு ஒன்று எத்தகு வியத்தற்குரியதோ அது போல புதிய கல்வெட்டு, அல்லது செப்புப்பட்டயம் என்பவற்றைக் கண்டறியும் போது அது தரும் செய்தியும் அத்துணை வியப்புக்கு ரியது. எனவே சாசனம் பற்றிய அறிவானது மனிதநா கரிகத்தின் தொன்மையைப் பாதுகாக்கும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நவீன இந்து சமய ஞானி

பிரணவன்

முதலாம் வருடம், பொறியியற் பீடம்

சமயம் என்பது பேசுவதற்குரியதோ, அல்லது படித்துப் பட்டம் எடுப்பதற்குரியதோ அல்லது தத்துவங்களைக் குருட்டுத்தனமாகப் புரிந்துகொண்டு அதன் வழி வாழ்க்யை வாழ்வதற்குரியதோ எனக் கொள்ளாமல் "சமயம்" என்பதைப் பாமரனும் இலகுவாகப் புரிந்து கொண்டு எந்தக் கடினமும் இல்லாமல் தனது வாழ்வை ஆன்மீகத்தின் பால் ஈடுபடுத்தி அதன் வழி தனது வாழ்க் கையை வாழும் முறைமைக்குள் கொண்டுவருவதாக இருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியவர் சுவாமி விவேகானந்தர் ஆவார்.

சமயம் என்பது உணர்ந்து கொள்ளுதலே என்பதை அவர் முன் வைக்கின்றார். சாதாரணமாகப் பாவஞ்செய்யக் கூடாது, உயிர்களைக் கொல்லுதலும் கூடாது என எமது சமயத்தில் இறுக்கமான கொள்கையொன்று இருக்கின்றது. ஒரு முறை பாமரன் ஒருவன் சுவாமியிடம் "நான் மீன் சாப்பிடலாமா?" "அதனைச் சாப்பிட்டால் எனக்குப் பாவம் கிடைக்குமா" எனவும் கேட்டான். அதற்குச் சுவாமியவர்கள் "நீ தாராளமாக மீனைச் சாப்பிடலாம்" அதனைச் சாப்பிட்டுக் கொண்டு வருங்காலங்களில் அது பெரும் பாவம் என எப்போது உணர்கிறாயோ அப்போதே அதனைச் சாப்பிடாமல் விட்டு விடு எனவும் கூறினார். அவனுடைய வாழ்க்கை யுடன் அவனுக்குப்பிரச்சினையாக இருக்கும் கருத் தையும் நகர்த்தி அக்கருத்ததை அவனாகவே உணரும் பக்குவ நிலைக்கு கொண்டு வந்து அதற்கான தீர்வையும் அவனிடம் விட்டு விடுகின்றார்.

எமது இந்து சமயம் தொன்மைமிக்கது. ரிஷிகளும் ஞானிகளும் தவமிருந்து கண்ட மெய்ப்பொருளின் தத்துவம் சார்ந்த நிலைகளையெல்லாம் உலகமெங்கும் பரவலாக்க வேண்டுமெனப் பெரு விருப்பங்கொண்டார். குறிப்பிட்டதொரு வட்டத்துக்குள், குறிப்பிட்ட தொகையினராலேயே உணர்ந்தும் புரிந்தும் கொண்ட தத்துவத்தைப் பாமரனுக்கும் எளிமையாகப் புரியவைப்பதுடன் மட்டும் நின்று விடாமல் அவனுடைய சாதாரணவாழ்விலும் அவை "ஊடுகடத்தப்பட வேண்டும்" என்ற அசைக்கமுடியாத கொள்கை கொண்டவராகவும் இருந்தார்.

1893 இல் அமெரிக்காவில் சிக்காக்கோ நகரில் நடைபெற்ற அகில உலக இந்து சமய மாநாட்டில் பலமதங்களைச் சேர்ந்த அறிஞர்கள் பலர் பங்குபற்றித் தத்தமது மதங்களின் உயர் தத்துவங்களையும், கருத்தக்களையும் முன்வைத்தனர். இந்து சமயத்தின் சார்பில் பேசிய சுவாமிகளின் உரையும் அவர் உரையாற்றும் போது ஆரம்பித்த முறையும் அமெரிக்கர்கள் எல்லோரையும் பெரிதும் கவர்ந்ததுடன் சைவ சித்தாந்தக் கருத்துக்களையெல்லாம் அறிய வேண்டுமென்ற ஆவல் நிலைக்குள்ளும் அவர்கள் தள்ளப்பட்டனர். சில அமெரிக்கர்கள் சுவாமியின் சீடர்களும் ஆகினர்.

நீ எதை நினைக்கின்றாயோ அதுவாக ஆகிவிடுகிறாய் என்பது சுவாமிகள் கூறும் தத்துவமாகும். வலிமை உள்ளவனாக வேண்டும் என்று நினைத்தால் வலிமையும், வலிமையற்றவன் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்தால் வலிமையற்றும் அந்தந்த நிலைகளுக் குற்றவாறு ஆகிறாய். ஒவ்வொருமனித னிடமும் அளப்பரிய சக்தியொன்று மறைந்து இருக் கிறத அது வெளிக்கொணரப்பட வேண்டியதுடன் அதுவே உலகத்தை இயக்கவல்லதாகவும் இருக் கும். ஒரு விடயத்தில் ஏகாக்கிரகசிந்தையைச் செலுத் தும் போது அந்த விடயத்தில் அசாதாரண வெற்றி களையெல்லாம் ஈட்டமுடியும். எவன் ஏழைகளின் பால் ஒரு சொட்டுக் கண்ணீரைச் சிந்துகிறானோ அவனே மகாத்மா ஆகிறான்.

இந்து சமயத்தை நவீனமாக்கிய ஞானியென அவரைக் குறிப்பிட்டால் அது பிழையாகாது. இந்து சமயத்தின் இறுக்கங்களை உடைத்து அதனை வாழ்வியலுடன் சேர்த்தவர். சமயம் வேறு வாழ்வு வேறு என இருப்பதனாலேயே சமயமானது உறு தியற்றுப் போய்விடுகிறது என்பதுடன் அது இரண் டறக்கலந்து இருப்பதே வாழ்வியலை உறுதியும் ஆக்குகிறது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்பக் கொள்கை

சிவலிங்கம் துஷரன்

இறுதி ஆண்டு, பொறியியல் பீடம்

உலகில் பிறந்த ஒவ்வொரு உயிரும் இன்பத்துக்காய் ஏங்குகின்றன. இன்பத்தை தேடி ஓடி வாழ்க்கையை பிறப்பிற்கும் இறப்பிற்குமிடையில் ஊசலாட வைக்கின்றன. இன்பம் ஏங்குவதால் கிடைப்பதோ தேடுவதால் பெறப்படுவதோ இல்லை. யப்பட வேண்டிய விடயமே அல்ல. இயல்பாய் இருப்பதே இன்பமாகின்றது. சந்தோசமாக இருப்பது உன்னுடைய வாழ்க்கை முறையில் ஓர் தடாலடி மாற்றம் ஒரு திருப்பம் ஏனென்றால் இழப்பதற்கு நேரம் இல்லை. ஒரு திடீர் மாற்றம் ஒரு திடீர் இடி முழக்கம் ஒரு தொடர் பற்றிருந்த நிலை..... நீ திரும்பவும் பிறந்திருக்கிறாய். நீ திரும்பவும் வாழ்க்கையை உன்னுடைய பெற்றோர் பழக்கவழக்கத்தை உன்னுடைய சமுதாயம் உன்னுடைய நாடு திணிக்காமல் இருந்திருந்தால் எப்படி இருந்திருக்குமோ அப்போது எப்படி வாழ்ந்திருப்பாயோ உன்னை தொந்தரவு செய்ய யாரும் இல்லாவிட்டால் எப்படி இருந்திருப்பாயோ அப்படி வாழ தொடங்குகிறாய். ஆனால் நீ தொந்தரவு செய்யப்பட்டு விட்டாய்.

உன்மேல் திணிக்கப்பட்ட அத்தனை பழக்கவழக்கங்களையும் நீ உதறி எறிய வேண்டும். மேலும் நீ உன்னுடைய சொந்த ஒளியை கண்டறிய வேண்டும். இதற்கிடையில் பணம் நிச்சயம் ஆஜராகும். பணம் "ஓர் அதிகரிக்கும் கருவி" அது உன் பழக்கவழக்கத்தை அதிகப்படுத்தும் நீ சந்தோசமாய் இருந்தால். துக்கமாய் இருந்தால் அந் நிலையை அது மேலும் அதிகப்படுத்தும். எனவே இப்போது புரிந்திருக்கும் பணத்திற்கான மதிப்பும் அதற்கு கொடுக்க வேண்டிய இடத்தையும் பற்றி. இவ் உலகில் இன்பம் என்று நோக்குகின்ற போது அது உடலைச் சார்ந்தது மற்றும் உயிரைச் சார்ந்தது (Soul) என வேறுபடுத்தி பார்க்கமுடியும். அதாவது உடலைச் சார்ந்தது கீழ் மட்ட இன்பம் மற்றும் உயிரைச் சார்ந்தது மேல்மட்ட இன்பம். இன்பமே பிரதானம் (Hedonism) என்பதில் உண், குடி, கூத்தாடு என்பதை மேற்குறிப்பிட்ட கொள்கை எடுத்துக்காட்டுகின்றது. அதாவது வாழ்வின் ஒரே தத்துவத்தையே இரண்டும் எடுத்துக் கூறி நிலை நாட்டுகின்றன. "இந்த கணத்தில் வாழ் நாளையைப் பற்றி சிந்திக்காதே" என அவை இரண்டுமே கடந்த காலம் குறித்து அக்கறை கொள்ளத் தேவை இல்லை இந்தக் கணம் மட்டுமே போதுமானது என்கிறது. இவற்றை தனித்தனியே நோக்குகின்றபோது முதலாவது இன்பக் கொள்கை இந்தியாவின் "சார்வாக" தத்துவமும் கிரீஸின் "எபிகுருஸ்" கொள்கையையும் சேர்த்த பொருளாதாரஇஸ்தூல வெளி இன்பத்தை குறிப்பதாகும். இரண்டாவது ஆன்மிக இன்பக் கொள்கை. புத்தர். கிருஸ்ணர், கிறிஸ்து, ஜோராட்சா போன்ற எல்லா குருமாரையும் சார்ந்தது.

உடல் அளவில் மாத்திரம் வாழ்கின்றபோது உடலைக் கடந்த கனபரிமாணம் உன்னை தொடர்ச்சியாக ஊடுருவிக் கொண்டிருப்பதை பற்றி அறியாமலே இருப்பாய். அப்போது கண்ணிற்குப் புலனாவதைப் பற்றி மட்டும் அறிந்து கொள்வாய் கண்ணிற்கு புலப்படாதது உனக்கு தெரியாமலே இருக்கும். கண்ணிற்குப் புலனாகாதது மிகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியது மிகவும் அவசியமானது. கண்ணுக்குப் புலனாவது ஒரு போர்வை போன்றதே. கண்ணிற்கு புலப்படும் அது புலப்படாததை சுற்றியுள்ள ஒரு கூடுதான். அது புலப்படாததை காப்பதற்காகவே அமைந்துள்ளது. ஆன்மா இருப்பதற்கான புனித இடமே உடல். உடலில் மட்டுமே வாழ்ந்தால் உடலை மட்டுமே பாதுகாக்க முயற்சிப்பாய் உடல் உணர்வுகள் உன்மீது ஆதிக்கம் செலுத்தும். உடலிற்கு அப்பாற்பட்ட கணபரிமாணத்தை தெய்வீக கனபரிமாணத்தை பற்றி ஒரு போதும் அறிந்து கொள்ளமாட்டாய். "உண், குடி, கூத்தாடு" என்பதே இலக்கு என நினைத்து உடல் நிலையிலேயே உன்னை இழந்து விட்டால் அப்போது மிகவும் மேலெழுந்தவாரியாக வாழ்வாய்.

உடல் ஓர் உறை மட்டுமே. இது அழகான, விலை மதிப்பற்றது. ஆனால் மிக மிக உயர்ந்த ஒன்றை அது தன்னுள் சுமந்து கொண்டு இருக்கின்றது. "உண், குடி, கூத்தாடு" என நினைப்போன் கடிதம் ஒன்றை பெற்றுக்கொண்டவன், உள் இருக்கும் செய்தியை மறந்து அதனை வணங்குகின்றவனைப்போல ஸ்தூல மனநிலையுடையவனாவான் செய்தி மிக முக்கியமானது. உன்னுள் நீ சுமந்து கொண்டிருக்கும் செய்தி என்ன? எந்த விதியை நீ உன்னுள் வைத்துக் கொண்டிருக்கிறாய்?

இரண்டாம் நிலை இன்பியல் உடலிற்கு எதிரிடையானது. அது ஆன்மாவிற்கு உரியது. அந்தக் கணத்தில் வாழ்வது இது. முதலாம் நிலை இன்பியல்வாதி உணவு உண்ணும் போது சாப்பாட்டைப் பற்றி மட்டுமே அக்கறை கொள்வான். இரண்டாம் நிலை இன்பியல் வாதியோ உணவின் ருசியைக் குறித்த விழிப்புணர்வு நிலையில் இருப்பான். இங்குதான் நாம் அவர்களை வேறுபடுத்தி முடிகின்றது. உதாரணமாக முதல் நிலையோன் உலவச் சென்றால் சுற்றி இருக்கும் மரங்கள், பறவைகள், பனித்துளிகள் காலைச் சூரியன் இவற்றை மட்டுமே நோக்குவானேயல்லாமல் இவை அனைத்தையும் கவனித்துக் கொள்பவன் யார் எனப்பார்க்க மாட்டான். இரண்டாம் நிலைக்காரனோ உலாவச் செல்கையில் பறவைகள். மரங்கள், ஆதவனையும் ரசிப்பதோடு இவை அனைத்தையும் ரசிக்கின்றவனையும் ரசித்துக் கொண்டிருப்பான். அவன் விழிப்போடு இருப்பவன். விழிப்போடு இருக்கும் மனிதன் சுதந்திரமானவன், அவன் செய்ய நினைக்கும் போது அவன் செய்கிறான். அப்போது அவன் அதை அனுபவித்துச் செய்கிறான். ஏனென்றால் அது அவனுடைய இயல்பிலிருந்து தானாகவே வருகிறது. விழிப்போடு உள்ள மனிதனிற்கு பொறுப்புக்களோ, கடமைகளோ, தேர்ந்தெடுப்பதோ தேவையில்லை. அப்போது தான் சரியான சமயத்தில் சரியான செயலைச் செய்ய அவன் திறமையுள்ளவனாக இருப்பான்.

உண்மையாகவே வாழ்வை அனுபவிக்க விரும்பினால் நீ இரண்டாம் வகை இன்பியலை ஆன்மீக இன்பியலை இறைத்தன்மையான இன்பியலைத் தேடு. ஒரு படிக்கட்டைப் போல் உடலை பயன்படுத்த வேண்டும். உடல் ஒரு ஏணியாக வேண்டும் இக்கரைக்கு இட்டுச் செல்லும் படகாக அதுமாற வேண்டும். உடலைப் பயன்படுத்திக் கொள் இதுவே ரகசியம், நிகழ் காலத்தில் இரு, கணத்திற்கு கணம் வாழ்ந்து வா. கடந்த காலம் குறுக்கிடுவதை அனுமதிக்காதேஎதிர்காலம் உன் பார்வையை மறைப்பதற்கு விடாதே நிகழ்காலம் இக்கணம் பளிங்கு போல் தெளிவாக இருக்கட்டும் அதனுள் உடலோடும், ஆன்மாவோடும் நுழை உடலும் ஆன்மாவின் ஒன்றாக இணைந்து நுழையட்டும். உடலாகவோ அல்லது ஆன்மாவாகவோ அல்லாமல் ஒட்டு மொத்தமாக அதனுள் நுழை. வாழ்க்கை அழகானது. அதன் ஒவ்வொரு துணிக்கையையும் அசைவையும் ரசிக்கின்ற மனிதனாய் இரு. இன்பம் உனக்குரியதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மெய்ஞ்ஞானத்தில் விஞ்ஞானம்

பிரசாந்த்
முதலாம் வருடம், பொறியியற் பீடம்

அதீத வளர்ச்சி கண்டுள்ள தற்கால விஞ்ஞான உலகில் ஆன்மீக வழியில் செல்பவர் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து வருகின்றது. குறிப்பாக இளைய தலைமுறைகள் இடையே மெய்ஞ்ஞானத்தை பின்பற்றும் தன்மை இல்லாமையே இன்றைய சமுதாயச் சீர்கேடுகளுக்கு காரணமாக அமைகின்றது. ஏனவே இவர்களிடையே விஞ்ஞான அறிவியல் தர்க்கரீதியாக மெஞ்ஞான அறிவைப் புகுத்தும் போது ஓரளவு வெற்றி பெற முடியும்.

மதங்களிடையே மிகப்பழமையான இந்து மதத்திலுள்ள ஒவ்வொரு அறிவிலும் அதிநுட்பமான விஞ்ஞானக் காரணங்கள் நிறைந்துள்ளன. அன்றாட வாழ்வின் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் விஞ்ஞான அடிப்படையிலான மெய்ஞ்ஞானக் கருத்துக்களே பின்பற்றப்படுகின்றன. இவ்வாறான சில விடயங்கள் பற்றி ஆராய்வோம்.

காலையில் சூரிய உதயத்திற்கு முன் எழுந்திருக்க வேண்டும் என்பது எமது முன்னோர்கள் வலியுறுத்திய ஒன்று. ஏனெனில் அதிகாலையிலேயே எமது சுவாசத்திற்கு தேவையான தூய $O_2$ போதியளவு கிடைக்கின்றது காலையில் எழுந்ததும் தங்கம் பச்சைத்தாவரம் என்பவற்றில் விழிக்க வேண்டும் என்பர். தங்கத்திலிருந்து வரும் கதிர் வீச்சு சில நோய்கள் வராது தடுப்பதுடன் உடல் வெப்பத்தைகக் குறைக்கக் கூடியது பச்சைத் தாவரங்கள் கண்ணிற்குக் குளிர்மையைத் தருவதால் அன்றைய காரியங்களை உற்சாகத்துடன் செய்ய முடியும்.

காலையில் எழுந்தவுடன் பல்துலக்கி வாயைச் சுத்தம் செய்வது வழமை ஆகும். ஏனெனில் இரவு முழுவதும் சுரக்கப்படுகின்ற உமிழ்நீர் வாயிலேயே இருந்து கெட்டுவிடுகிறது. இது வயிற்றினுள் செல்வதால் நோய்களை ஏற்படுத்தக்கூடும். “ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி” என்பது பழமொழி ஆலமரக்குச்சி, வேப்பங்குச்சி என்பவற்றால் பல் துலக்கும் போது பல்சொத்தை, பயோரியா போன்ற நோய்களை ஏற்படுத்தும் கிருமிகள் அழிக்கப்படுகின்றன

நம் முன்னோர் காலையில் குளித்த பின் நெற்றியில் விபூதி பூசி, சந்தனம் வைத்து இறைவனை வழிபடுவர் காலையில் குளிப்பதால் எமது உடலில் இரத்த ஓட்டம் சீரடைவதுடன் வியர்வை துவாரங்கள் சுத்தமாக்கப்படும். விபூதி பூசுவதன் காரணம் குளிக்கும் போது உடலினுள் சென்ற நீரை விபூதி உறிஞ்சி எடுப்பதால் சளி, ஆஸ்துமா, காய்ச்சல் போன்ற நோய்கள் ஏற்படாது புருவமையத்தில் நரம்புகள் எல்லாம் குவிந்து அப்பகுதியை குளிர்மை ஆக்குவதற்காக சந்தனம் இடப்படுகின்றது.

தரையில் சம்மணம் போட்டு இருந்து வாழை இலையில் சாப்பிடுவது இந்துக்களின் வழக்கமாகும் இவ்வாறு இருக்கும் போது வயிற்றிற்கு எதுவித அழுத்தமோ தடையோ இருக்காது. குனிந்து நிமிர்ந்து உண்ணுவதால் உணவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகுவில் வயிற்றினுள் செல்லும். "நொருங்க தின்றால் நூறு வயது" என்பார்கள். அதாவது உணவை நன்கு மென்று உண்ணும் போது சமிபாடு எளிதாகிறது. வாழையிலையிலுள்ள குளொ ரபில் எமது உணவுடன் சேர்வதால் உடலில் தோல் வியாதிகள் ஏற்படாது.

"வாழ்ந்தாலும் வடக்கே தலை வைக்காதே. கெட்டாலும் கிழக்கே தலைவைக்காதே" என்பார் கள் பூமியில் தென்துருவத்திலிருந்து வட துருவத் திற்கு நிரந்தர காந்தப்புலம் உள்ளது வடக்கில் தலை வைத்தால் நம்மூளையில் உள்ள மின்கா ந்த அலைகளை இக்காந்தப்புலம் ஈர்ப்பதன் மூலம் ஞாபகசக்தி, மூளையின் வளர்ச்சி என்பன பாதிக்கப்படுகின்றன. கிழக்கில் தலை வைப்ப தால் சலனமற்று தூங்கிக்கொண்டிருக்கும் நம் மூளை சூரிய வெப்பத்தால் சூடடைந்து நாளடை வில் சில நோய்கள் ஏற்படும்.

இரவில் வேம்பு, புளி ஆகிய மரங்களிற்குக் கீழே உறங்கக் கூடாது என்பதற்காக அவ்றிற்கு கீழே உறங்கினால் பேய் பிடிக்கும் என்பார்கள். இதற்கு காரணம் அவை மற்றைய மரங்களை விட இரவில் அதிகளவு $CO_2$ வாயுவை வெளிவிடுவ தால் எமது சுவாசத்திற்கு தேவையான $O_2$ வாயு பற்றாக்குறை ஏற்பட்டு மயக்கம் ஏற்படுவதனால் ஆகும்.

ஆண்கள் மேலாடை அணியாது ஆலயத்தினுள் செல்லவேண்டும் என்பது இந்து மதத்தின் சமயக் கட்டுப்பாடாகும். ஏனெனில் சிலைகளை ஆக்கிய கருங்கற்களிலிருந்து வரும் கதிர் வீச்சுக்கள் உடலில் படும் போது புற்றுநோய் ஏற்படுவதைத் தடுக்குமென மருத்துவ ஆய்வாளர்கள் கூறுகின் றனர். பெண்கள் அதிகநகைகள் அணிவதன் காரணம் உடலில் தங்கத்தின் கதிர்வீச்சு அதிகம் படுவதனால் மார்புபுற்றுநோய், தைரொயிட் சுரப்பி வீக்கம் போன்ற நோய்கள் ஏற்படாமல் தடுக்கப் படுகின்றன.

கோயிலில் தோப்புக்கரணம் போடுவது, தலையில் குட்டிக் கொள்வது, கீழே விழுந்து வணங்குவது போன்ற அனைத்தும் உடற்பயிற்சிகளே ஆகும். தலையில் குட்டிக் கும்பிடும் போது மூளைக்கு இரத்த ஓட்டம் அதிகமாகி மூளை தொடர்பான நோய்கள் வராமல் தடுக்கப்பட முடியும். தோப்புக் கரணம் போடுவதால் உள்ளங்கால் வரை உள்ளந்தலைவரை இரத்த ஓட்டம் சீராகப் பாய்வ தால் இதயம் போன்ற உறுப்புக்கள் நல்லமுறை யில் இயங்கும். அத்துடன் தோப்புக்கரணம் போடு வதால் ஞாபகசக்தி அதிகமாகும் என விஞ்ஞானி கள் ஆய்வின் மூலம் தெரிவித்துள்ளனர்.

யோகாசனம் செய்வதால் வரப்போகின்ற நோய் களையும், உடலில் ஏற்கனவே உள்ள நோய்க ளையும் இலகுவாக மாத்திரைகள் இன்றி குணப் படுத்தலாம். யோகாசனத்தில் சூரியபகவானிற்கு செய்யும் சூரியநமஷ்காரம் ஒன்றின் மூலமே பல நன்மைகளை நாம் பெறமுடியும்.

உடல், உள ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு சமயவிழுமியங்களை கடைப்பிடித்து நல்லதொரு நிலையை அடைய வேண்டும். முன்னோர்க ளின் கருத்துக்களையும் ஏற்று இளைஞர்களாகிய நாம் விஞ்ஞான ரீதியாக நிரூ பிக்கப்படக்கூடிய மெய்ஞ்ஞான வழிகளைப் பின்பற்றி நல்ல ஒரு சமுதாயத்தை உருவாக்க முயற்சிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாயிற்கடையாய் கிடந்த அடியேன்

சி.ரமேஸ்

பொறியியற் பீடம்

"திருவாசகத்துக்கு உருகார் ஒருவாசகத்திற்கும் உருகார்"

உயிர் இறைவனோடு கொண்ட உறவில் ஓர் இடையூறு ஏற்பட்டால் அவ்வுயிர் பிரிவுத்துயர் தாங்காமல் இறைவனது பேரன்பை வேண்டிப் புலம்பும் அவ்வாறு மாணிக்கவாசகரும் இறைவனது அன்பிலே நனைந்து உருகிப்பாடிய பாடல்களை கொண்டதே திருவாசகம்.

ஏனைய அருளாளர்களைப் போல குறிப்பாக தேவார முதலிகள் மூவரைப்போல் புராணச் செய்திகளை அதிகம் பயன்படுத்தாதவர் மணிவாசகர். இவரது பாடல்கள் ஆன்மா இறைவனிடத்தில் வைக்கும் பற்றை உணர்ந்து பாடப்பட்டவை. இவை கனிவும் கசிவும் மிக்க உருக்கத் தன்மையுடைய பாடல்களாகும். மாணிக்கவாசகர் தன்னுடைய வாழ்வியல் அனுபவத்தின் மூலமாக அறிந்த மனிதவாழ்வை நெறிப்படுத்தும் வழிகளை தனது பாடல்களில் காட்டியுள்ளார். எனவேதான் திருவாசகம் இந்துசமயத்தின் கொள்கைகளின் உச்ச வெளிப்பாடு. ஆகவே திருவாசகம் பற்றி இடம்பெறாமல் ஓர் இந்துசமயம் சார்ந்த மலரும் முற்றுப் பெறாதது போல இருந்தது.

மாணிக்கவாசகர் போன்ற பாவலர்களின் பாட்டுக்களில் உயிரோட்டம் உண்டு. கருங்கல் மனதையும் கனிவிக்கும் தன்மையுண்டு அருள்நெறி வாழ அதிலே வழியுண்டு. இத்தகைய திருவாசகம் பரந்த பரப்பை கொண்டிருப்பதுடன் அதனை பொருளுணர்ந்து அறிவது கடினமானது. எனவே இத்தகைய திருவாசகத்தில் ஓர் சிறிய இடத்தை தொடலாம் என நினைக்கின்றேன். கல்லைப் பிசைந்து கனியாக்குவது போல ஆன்மாவைப் பக்குவப்படுத்தி இறையருளை பெறத்துணை செய்வது திருவாசகம் எனவே பக்குவப்பட்ட ஆன்மாவின் நிலையினை குறிப்பிடுவதற்கு மாணிக்கவாசகர் தன்னை தாழ்த்திக் கொள்ள விரும்புகின்றார். இதனால் இவர் தனது அனேக பாடல்களில் அந்நிலையினை நாய் என தம்மை பாடி வெளிப்படுத்துகின்றார். அத்தகைய சில பாடல்களை அவதானிப்பின்.

*"நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்கு*
*தாயிற் சிறந்த தயாவான தத்துவனே."*

நாயினும் கடையனாய்க் கிடந்த அடியேனுக்கு அருள்வடிவான உண்மைப் பொருளே என இவ் அடிகள் பொருள்படுகின்றது.

*"நாட்கொண்ட நாண்மலர் பாதங்காட்டி*
*நாயிற் கடைப்பட்ட நம்மை"*

அன்று மலர்ந்த மலர்கள் சூடப்பட்ட இறைவனது திருவடிகளை காட்டி நாயிலும் கீழ்ப்பட்ட நம்மை இறைவன் ஆட்கொண்டார் என அப்பாடல் வரிகளின் தொடர்ச்சி அமையும்.

இவ்வாறு மாணிக்கவாசகர் திருவாசகத்தில் 65 இடங்களில் தம்மை நாய் எனப்பாடி தனது பக்குவ நிலையினை பாடல்களில் வெளிப்படுத்துகின்றார். அப்பாடல் வரிகளையும் இக்கட்டுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் சேர்த்துள்ளேன். மேலும் திருவாசகச் சிறப்பினை ஒரே கட்டுரையில் சொல்லிட முடியாது. இவ்வாறு கிடைக்கும் சந்தர்ப்பங்களில் திருவாசகச் சிறப்புக்களை இயன்றவரை குறிப்பிடுவோம்.

கீழ்வரும் அட்டவணை மணிவாசகர் சபை பவள விழா மலரில் இருந்து எடுக்கப்பட்டது. இக்கட்டுரையின் தேவை கருதி இதனுடன் சேர்க்கப்படுகிறது.

## ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கச் செய்யும் திருவாசகம் தந்த மணிவாசகப் பெருமான் தம்மை நாய் எனப் பாடிய பாடல் அடிகள்

| இல | திருப்பதிகம் | பாடல் எண் | பாடல் அடிகள் |
|---|---|---|---|
| 1. | சிவபுராணம் | 60அடி | நாயிற்கடையாய் கிடந்த அடியேற்கு |
| 2. | கீர்த்தித் திருவகவல் | 127அடி | நாயினேனை நலம்மலித் தில்லையுள் |
| 3. | திருவண்டப் பகுதி | 164அடி | தரியேன் நாயேன் நான் எனை |
| 4. | திருவண்டப்பகுதி | 172அடி | குரம்பை தோறும் நாயுடல் அகத்தே |
| 5. | போற்றித் திருவகவல் | 144அடி | நனவிலும் நாயேற்கு அருளினை |
| 6. | போற்றித் திருவகவல் | 185அடி | அலந்தேன் நாயேன் அடியேன் போற்றி |
| 7. | போற்றித் திருவகவல் | 219அடி | பிழைப்பு வாய்ப்பு ஒன்று அறியா நாயேன் |
| 8. | திருச்சதகம் | 13 பாடல் | அவை காண்பான் நாயடியேன் |
| 9. | திருச்சதகம் | 16 பாடல் | தாரோயை நாயடியேன் பாழ்த்த பிறப்பு |
| 10. | திருச்சதகம் | 23 பாடல் | நாயடியேன் ஆதலையும் நோக்கிக்கண்டு |
| 11. | திருச்சதகம் | 26பாடல் | நாயினேன் தன் கண்ணினை நின் |
| 12. | திருச்சதகம் | 28பாடல் | நாயினுக்குத் தவிசு இட்டு நாயினேற்கே.. |
| 13. | திருச்சதகம் | 34பாடல் | யான் அடி நாயேனை விற்றெலாம் |
| 14. | திருச்சதகம் | 37பாடல் | யான் அடிநாயேனைத் தினையின் |
| 15. | திருச்சதகம் | 39பாடல் | நாயில் ஆகிய குலத்தினுங் கடைப்படும்.. |
| 16. | திருச்சதகம் | 50பாடல் | அடி நாயினேன் அறிவனாக் கொண்டு.. |
| 17. | திருச்சதகம் | 51பாடல் | பொல்லா நாய் ஆன நீசனேனை... |
| 18. | திருச்சதகம் | 52பாடல் | செய்வதறியாச் சிறு நாயேன் |
| 19. | திருச்சதகம் | 56பாடல் | ஊர்நாயிற் கடையான் |
| 20. | திருச்சதகம் | 59பாடல் | பொல்லா நாய் ஆன புன்மையேனை.. |
| 21. | திருச்சதகம் | 60பாடல் | நாணம் இல்லா நாயினேன் |
| 22. | திருச்சதகம் | 69பாடல் | நின் பாதம் நாயேற்கு அருளிட வேண்டும் |
| 23. | திருச்சதகம் | 74பாடல் | ஆண்டு கொண்டு நாயினேனை |
| 24. | திருச்சதகம் | 84பாடல் | நான் இல்லா நாயினேன் |
| 25. | திருச்சதகம் | 91பாடல் | கீறு இல்லாத கடையன் நாயினேன் .... |
| 26. | திருச்சதகம் | 100பாடல் | அம்பலத்து ஆடும் நிர்கழல் போது நாயி.. |
| 27. | நீத்தல் விண்ணப்பம் | 06 | சிறு நாய்கள் தம் பொய்யினையே |
| 28. | நீத்தல் விண்ணப்பம் | 13 | கடலினுள் நாய் நக்கியாங்கு உன் ... |
| 29. | திருவம்மானை | 04 | தான் வந்து நாயேனைத் தாய்போல்... |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 30. | திருவம்மானை | 05 பாடல் | கல்லா மனத்து கடைப்பட்ட நாயேனை |
| 31. | திருவம்மானை | 07 " | நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாய்களை |
| 32. | திருவம்மானை | 10 " | கண்ணார் கழல் காட்டி நாயேனை.... |
| 33. | திருப்பொற்சுண்ணம் | 08 " | நாயிற் கடைப்பட்ட நம்மை |
| 34. | திருக்கோத்தும்பி | 08 " | நன்றாக வைத்தென்னை நாய்சிவிகை... |
| 35. | திருக்கோத்தும்பி | 10 " | இங்கிருந்து நாயுற்ற செல்வம் நயத்தறி... |
| 36. | திருக்கோத்தும்பி | 12 " | நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நா... |
| 37. | திருக்கோத்தும்பி | 20 " | நாய்மேல் தவிசிட்டு நன்றாய் பொருட்... |
| 38. | திருச்சாழல் | 10 " | தான் அந்தம் இல்லான் தனையடைந்த.. |
| 39. | திருப்பூவல்லி | 03 " | நாயிற் கடைப்பட்ட நம்மையும் ஓர்... |
| 40. | திருப் பொன்னூஞ்சல் | 01 " | நாராயணன் அறியா நாண் மலர்த்தான்.. |
| 41. | திருப்பொன்னூஞ்சல் | 06 " | அடியாருன்கோதாட்டி நாயேனை .... |
| 42. | திருத்தசாங்கம் | 09 " | தீயவினை நாளும் அனுகா வண்ணம் .... |
| 43. | கோயில் மூத்த திருப்.. | 09 " | அவர்முன்னே நரிப்பாய் நாயேன் இரு... |
| 44. | செத்திலாப் பத்து | 07 " | நாயினேன் உன்னை நினையவும் மாட்... |
| 45. | ஆசைப்பத்து | 06 " | எய்தேன் நாயேன் இங்கு இருக்க .... |
| 46. | ஆசைப்பத்து | 10 " | நைஞ்சேன் நாயேன் ஞானச்சுடரே ..... |
| 47. | புணர்ச்சிப்பத்து | 09 " | தாதாய் மூவேழுலகுக்கும் தாயே நாயே.. |
| 48. | வாழாப்பத்து | 06 " | அஞ்சினேன் நாயேன் ஆண்டு நீ அளி.... |
| 49. | திருக்கழுக்குன்றப் பதி | 02 " | சிறுநாயினுங் கடையாய் வெங்கட்ட.... |
| 50. | கண்டபத்து | 03 " | அருந்தியினாய் நாயடியேன் அணி.... |
| 51. | கண்டபத்து | 04 " | கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயே |
| 52. | கண்டபத்து | 05 " | ஆதமிலி நாயேனை அல்லல் அறுத்து... |
| 53. | கண்டபத்து | 09 " | பாங்கினொடு பரிசு ஒன்றும் அறி.... |
| 54. | பிராத்தனைப் பத்து | 06 " | புறமே கிடந்து புலைநாயேன் புலம்பு.... |
| 55. | பிராத்தனைப் பத்து | 07 " | ஏசற்று இங்கு இருத்தல் அழகோ அடி.... |
| 56. | குழைத்த பத்து | 03 " | ஒன்றும் போதா நாயேனை உய்யக் .... |
| 57. | குழைத்த பத்து | 08 " | நாயிற் கடையாம் நாயேனை நயந்து ... |
| 58. | குழைத்த பத்து | 10 " | அழகே புரிந்திட்டு அடிநாயேன் அர.... |
| 59. | உயிருண்ணிப்பத்து | 02 " | ஒருநாய்க்குத் தவிசு இட்டிங்(கு) ஊண்... |
| 60. | திருவேசறவு | 05 " | அடியேற்குப் பொற் தவிசு நாய்க்.... |
| 61. | அற்புதப்பத்து | 09 " | புழுத்தலை நாய்போல் இச்சை யாயி.... |
| 62. | எண்ணப் பதிகம் | 02 " | இங்கொரு பொழுதுந் தரியன் நாயே.... |
| 63. | யாத்திரைப் பத்து | 02 " | ஞாலத்துள் புகுந்து நாயே அனைய .... |
| 64. | ஆனந்த மாலை | 05 " | சவலையாய் நாயேன் கழித்து போவே... |
| 65. | அச்சோப்பதிகம் | 09 " | நாயேன் அடிமை உடனாக ஆண்டாய்... |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பசுவை ரக்ஷித்தல்

க.கீர்த்தனா

முதலாம் வருடம், பொறியியற் பீடம்

மாதா, பிதா, பத்தினி, குழந்தை முதலிய சகல உயிரினங்களுக்கும் உயிரில்லாத அவேதங்கள் அத்தனைக்கும் கூட மூலகாரணமாயிருக்கின்ற தாயான பராசக்தியே ஸ்ரீமாதா அவளிடமிருந்து சுரக்கின்ற அருட்பாலால்தான் நம்முடைய ஜனக மாதாவுக்கும், கோ மாதாவுக்கும் பால் சுரப்பது குழந்தைப் பருவத்தோடு பெற்ற தாய், பால் கொடுப் பது முடிந்துவிடும் ஆனால் பசு தான் உயிர் வாழும் காலம்வரை பால் தருவதோடு அப்பாலா னது தயிர், மோர், நெய் ஆகியவையும் நமது ஆகாரத்தில் தொடர்ந்து இடம்பெறுகின்றன. நம் முடைய ஆயுள் காலம் பூராவும் பால் தரும் பசுவை கோமாதா என்று அழைப்பதில் தவறில்லை.

அன்பும் சாந்தமும் நிறைந்த தோற்றத்தில் நிற் கும் பசுவைப்பாத்தாலே ஒரு தாயைப் பார்க்கின்ற ஓர் உணர்வு தோன்றும். இப்பசுவை கோமாதா என்றும் பூமாதா என்றும் முன்னோர்கள் கூறியி ருக்கிறார்கள். ஞானப்பாலூட்டும் குருமூர்த்தியா கவும், அருட்பாலூட்டும் குணநிதியாகவும் அம்பா ளுக்குப் பெயர்கள் சொன்னதோடு "கோமாதா" என்று சொல்லியிருப்பது விசேஷம்.

பசுவின் கழிவுப் பொருட்கள் கூட மிகவும் புனி தமான பொருட்களாகக் கருதப்படுகின்றன. அதா வது கோமயம், கோசலம் என்பன ஏனைய அசுத் தங்களையும் போக்குவதோடு நோய்க்கிருமிகளை அழிப்பதாகவும் இருக்கின்றது. லக்ஷ்மி தேவியை நம் வீடுகளில் குடிகொள்ளப்பண்ணுவதற்காகவே வாசலில் கோலம் போடும் இடத்தில் சாணம் தெளிப்பதும், வீட்டைச் சாணியால் மெழுகுவதும் செய்கின்றோம்.

அடுத்து "பஞ்ச கவ்வியம்" என்பதைப் பற்றி ஆராய்வோமேயானால் பசுவிலிருந்து பெறப்படும் பால், தயிர், நெய், கோமயம், கோசலம் என்ற ஐந்தையும் சேர்த்தே பஞ்ச கவ்வியம் என்று அழைக்கப்படுகின்றது. சரீர சுத்தியோடேயே சித்தத்துக்கு பரம சுத்தியை உண்டாக்கும் பாபமா கிற அசுத்தத்தையும் நிவர்த்தி செய்வதாக பஞ்ச கவ்வியம் உதவுகிறது. இப்பஞ்ச கவ்வியத்தால் இறைவனுக்கு அபிஷேகம் செய்வது விசேஷம் அப்படி ஈஷ்வரார்ப்பணமாவது தான் பசுக்குலத் துக்கே பெருமை சேர்ப்பது என்று அப்பர் சுவாமி கள் "ஆவினுக்கருங்கலம் அரன் அஞ்சாடுதல் என்று பாடியிருக்கிறார். "ஆ" என்றால் பசு. "அஞ்சா டுதல்" என்பது பஞ்ச கவ்வியத்தால் நீராடுவது அதாவது அபிஷேகம் பெறுவது.

பசுவின் சாணத்தை சுட்டெரித்தே திருநீறு தயா ரிக்கப்படுகிறது விபூதியை விடப் பவித்ரமானது வேறொன்றும் இல்லை. இவ்விபூதியின் பெரு மையை திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் "மந்திரமாவது நீறு" என்ற திருநீற்றுப் பதிகத்தில் கூறியிருக்கின்றார்.

பசுவிடமிருந்து பெறும் நெய்யே யாகங்களில் கோஷ்ரம் கோமம் செய்யப்படுகின்றது. தயிரும் ஹோமத் திரவியமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமூலநாயனார் தனது திருமந்திரத்தில் மனிதன் செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்றாக "கோத்ராசம்" பற்றி "யாவர்க்குமாம் பசுவுக் கொரு வாயுறை" என்ற வரியின் மூலம் குறிப்பிடுகின்றார்.

பசுவை வதைப்பது தாயைக் கொல்வது போன்றது. இத்தகைய நன்மை தரும் விளைவுகளை வழங்கும் பசுவை நம் மக்கள் போல பாவித்து அவற்றை ரக்ஷிக்க வேண்டும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருச்சுனன் தவம் : இதிகாசத்திலிருந்து நாட்டார் களங்களை நோக்கிய நகர்வு சடங்காசாரம் - நிகழ்த்துகலை - கதைப்பாடல்

பா.சுமன்

உதவி விரிவுரையாளர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

## 01. தமிழில் பாரதம் : விரிவடையும் அர்த்தக்களங்கள்

தமிழ்ச் சூழலில் பாரதத்தின் நிலைப்பானது இதிகாசப் பனுவல், நிகழ்த்து கலைகள் (பிரசங்கம் நிகழ்த்துதல், கூத்துக்கள்), நாட்டார் வழிபாடு, நாட்டார் இலக்கியங்கள், தமிழ் இலக்கியங்களில் பாரதக் கதைக்கூறுகள் இணைதல் (பழந்தமிழ் இலக்கியம், நவீன இலக்கியம்) எனப் பல நிலைகளில் தமிழ்ச் சூழலில், தமிழ்ப் பண்பாட்டுடன் கலந்துவிட்டது. இவ்வகைப்படுத்தலானது மகாபாரதம் தமிழ்ச் சூழலில் வேரூன்றுவதற்கு அக்கதைமரபு வழிபாடு, நிகழ்த்துகலை, நாட்டார் இலக்கியம் என வெகுசன பண்பாட்டுக் கதை மரபாக மாறியமையே காரணம் என்பதனையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

வெகுசனப் பண்பாட்டுத் தளத்தில் பாரதக் கதைக் கூறுகள் பல, நாட்டார் கதைப்பாடல்களாகவும், நிகழ்த்து கலையாகவும், வழிபாட்டு மரபுகளாகவும் நிலைபேறாக்கம் பெற்றுள்ளன. திரௌபதையம்மன், பஞ்ச பாண்டவர்கள், அரவான், துரியோதனன், அபிமன்னன், கமலகன்னி, குந்தியம்மன் வழிபாடு என வழிபாட்டுத் தளத்திலும், பவளக்கொடி மாலை, அல்லி அரசாணி மாலை, பாரத அம்மானை, அரவான் அம்மானை, பொன்னுருவி மசக்கை, ஏணி ஏற்றம், அபிமன்னன் சுந்தரி மாலை எனக் கதைப்பாடல் என்ற தளத்திலும், அருச்சுனன் தபசு, அரிச்சந்திர விலாசம், அரக்கு மாளிகை நாடகம், தரும புத்திரன் நாடகம் முதலானவை நிகழ்த்துகலை என்ற தளத்திலும் நிலைபேறாக்கம் பெற்றுள்ளன.

ஈழத்திலும் பாரதக் கதைமரபு மேற்கூறிய மூன்று தளங்களிலும் நிலைபேறாக்கம் பெற்றுள்ளது. திரௌபதையம்மன் (ஈழத்தில் எட்டு இடங்களில் திரௌபதை வழிபாடு இடம்பெறுகிறது), குந்தியம்மன், கமலகன்னி (பாண்டிருப்புத் திரௌபதையம்மன் ஆலயத்தில் இவ்விருவரும் திரௌபதை வழிபாட்டோடு இணைந்த வகையில் வழிபடப்படுகின்றனர்), துஷ்த்துய்மன் (மட்டிக்கழி திரௌபதையம்மன் ஆலயத்தில் உப தெய்வமாக வழிபடப்படுகிறார்) வழிபாடு என்பனவும் சித்திரன் சேனன் சண்டை, வைகுந்தம், நச்சுப் பொய்கை, பதினேழாம் போர், பதினெட்டாம் போர், குருஷேத்திரப் போர், புலேந்திரன் களவு மாலை முதலான மட்டக்களப்பில் வழங்கும் வடமோடி, தென்மோடி கூத்துக்களும் மலையகத்தில் ஆடப்படும் அருச்சுனன் தபசு கூத்தும் கிழக்கிலங்கையில் பயில் நிலையில் காணப்படுகின்ற மகாபாரத அம்மானை எனும் கதைப்பாடலும் இதற்கு எடுத்துக்காட்டுக்களாகும்.

இந்நிலையில் மகாபாரதக் கதைக் கூறுகளில் ஒன்றான 'அருச்சுனன் தவம்' மேற்குறித்த மூன்று தளங்களிலும் ஈழத்தில் நிலைபெற்றுள்ள விதம் குறித்து இக்கட்டுரை ஆராய முனைகிறது. நாட்டாரியல் தளத்தில் அக்கதை மரபின் இயங்கு தன்மையைப் புரிந்துகொள்ள வியாச பாரதக் கதைமரபை தமிழில் தோன்றிய பாரத நூல்கள் எவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்வாங்கிக் கொண்டன என்பதும் அவை அருச்சுனன் தவநிலையை எவ்வாறு சித்திரிக்கின்றன என்ற தெளிவும் வேண்டப்படுகிறது. அந்நோக்கம் கருதி, வியாச பாரதம் சித்திரிக்கும் அருச்சுனன் தவநிலைச் செய்திகளும் அம்மரபில் நின்று தமிழ்ப் பாரத நூல்கள் உள்வாங்கிய சேர்க்கைகளும் சுருக்கச் செய்திகளாக முன்வைக்கப்படுகின்றன.

இலக்கியச் சான்றுவழி நோக்குகையில் முதலில் சங்க இலக்கியங்களே ஆங்காங்கு மகாபாரத நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுகின்றன. இதனை அடுத்த காலப்பகுதியிலேயே பாரதக் கதையை தமிழில் காப்பிய வடிவமாக்கும் முயற்சிகள் இடம்பெற்றுள்ளன. அவ்வாறு இடம்பெற்றபோது பல மாற்றங்களையும் சேர்க்கைகளையும் தமிழ்ப் பாரத நூல்கள் பெற்றுக்கொண்டன. இதற்கான அடிப்படை பாரத வெண்பாவிலேயே ஏற்படுத்தப்படுகிறது எனலாம்.

"கி.பி 850 க்கும் 859 க்கும் இடைப்பட்ட காலத்தில் பெருந்தேவனார் என்னும் புலவரால் பாரத வெண்பா என்னும் நூல் இயற்றப்பட்டதாக அறிகிறோம். இவர் தெள்ளாறு எறிந்த பல்லவ மன்னனாகிய மூன்றாம் நந்திவர்மனின் ஆதரவு பெற்றவர். எனவே சங்ககாலத்தை அடுத்து வாழ்ந்த பெருந்தேவனாருக்குப் பிற்பட்டவர். நமக்குக் கிடைத்துள்ள பாரத நூல்களுள் பாரத வெண்பா தான் பழமையானது. ஆனால் இந்நூலும் முழுமையாகக் கிடைக்கவில்லை. உத்தியோக பருவத்திலிருந்து பதின்மூன்றாம் நாட்போர் வரையுள்ளன. இந்நூலில் 830 வெண்பாக்கள் உள்ளன." (மணவாளன், அ.அ. : 2011: ப.30)

மேற்படிகண்டவாறு குறிப்பிட்ட அவர், அக்கட்டுரையிலேயே வியாச பாரதத்தில் இருந்து பெருந்தேவனார் செய்த மாற்றங்களை எடுத்துக்காட்டி, "பெருந்தேவனார் படைத்த பல புதுமைகளையும் மாற்றங்களையும் பல்வேறு தென்னக மொழிப் பாரத நூல்கள் பின்பற்றியுள்ளன எனக் காணுமிடத்து பாரதக் காப்பிய மரபிற்கு அல்லது புதுமரபின் தோற்றத்திற்குத் தமிழ்ப் பாரதமாகிய பாரத வெண்பா அளித்த நன்கொடை தெற்றெனப் புலனாகிறது" என்ற முடிவினைப் பெறுகிறார். (பக். 33,34.)

பெருந்தேவனாரின் பாரதவெண்பாவில் காணப்படும் மாற்றங்களும் சேர்க்கைகளும் வில்லிபாரதத்தில் நிலைத்தன. அவற்றைத் தவிர, வில்லிபுத்தூரரே சில மாற்றங்களையும் புதுமைகளையும் செய்திருக்கக் காண்கின்றோம். அவ்வகையில், அருச்சுனன் தபசு குறித்த செய்தியிலும் தமிழ்ப் பாரத நூல்கள் வேறுபட்டுள்ளன. முதலில் வியாச பாரதம் குறிக்கும் செய்தியும் அதிலிருந்து தமிழ்ப்பாரத நூல்கள் வேறுபடும் விதமும் இங்கு சுட்டப்படுகிறது.

வியாச பாரதப்படி, சூதில் தோற்ற பாண்டவர்கள் வனத்தில் வசித்து வரும்போது வியாச முனிவர் அவர்களைக் காணவருகிறார். பாண்டவர்கள் அவரிடம் தமது நிலையினைக் கூற, அவர் தருமரை அழைத்து தவமந்திரத்தினை உபதேசித்து அருச்சுனனிடம் இதை உபதேசம் செய்து அவனை சிவனிடம் பாசுபதம் பெற்றுவர அனுப்பும்படி கூறுகிறார். அவரும் அப்படியே செய்கிறார். அருச்சுனன் முதலில் இந்திரனை நோக்கித் தவம் செய்கிறான். இந்திரன் இவனது தவவலிமையை அறிந்து சிவனை நோக்கித் தவம் செய்யுமாறு கூறுகிறார். அருச்சுனன் இந்திரனை நோக்கிக் கடுந்தவம் புரிகின்றான். அருச்சுனனது தவத்தை அறிந்த சிவன் உமையுடன் வேடுவர் வேடம் பூண்டு அருச்சுனனது இருப்பிடம் வருகின்றார். அப்போது காட்டுப்பன்றி ஒன்று அருச்சுனனைக் கொல்ல வர அருச்சுனனும் வேடன் வடிவில் வந்த சிவனும் ஒரே நேரத்தில் அம்பெய்கின்றனர். அருச்சுனன் தான் அம்பு எய்த பன்றியின் மீது நீயும் அம்பெய்தது வேட்டை அறமோ என்கிறார். சிவன் தான் எய்த அம்பினாலேயே பன்றி இறந்தது என வாதிடுகிறார். இதனால் கோபமுற்ற அருச்சுனன் வேடனாகிய சிவனை பாணத்தால் அடித்தார். பாணங்களை அவர் மீது தொடுத்தான். சிவனை அவை ஒன்றும் செய்யவில்லை. அருச்சுனன் காண்டீபத்தால் அடிக்கப்போக சிவன் காண்டீபத்தைப் பறித்தார். பின்னர் இருவருக்கும் இடையே மற்போர் நிகழ்கிறது. இறுதியில் வந்திருப்பவர் சிவனே என்பதை உணர்ந்து சிவனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்குகிறார். சிவன் பாசுபதாஸ்திரத்தைக் கொடுத்து அதனைத் தொடுப்பதற்கும் திருப்பிப் பெறுவதற்குமான மந்திரத்தை உபதேசிக்கிறார்.

பின்னர், இந்திரன் விருப்புக்கிணங்கி தேவலோகம் செல்கிறார். தேவலோகத்தில் ஓரிரவு ஊர்வசி இவன்மேல் விருப்புக் கொண்டு வருகிறாள். இவன் அவளை குருபத்தினி போன்றவளாகிய நீ என்மேல் ஆசைப்படலாமா என்று கூறிவிடுகிறான். கோபமடைந்த ஊர்வசி அருச்சுனனைப் பேடியாகத் திரியுமாறு சபிக்கிறாள். இச்சம்பவங்களை அறிந்த இந்திரன் ஊர்வசியின் சாபம் உனக்கு நன்மையளிக்கும். நீ மறைவாக வாழும் காலத்தில் இந்த சாபத்தை நீக்கிக் கொள்ளுமாறு கூறுகிறார். அருச்சுனன் பூவுலகம் திரும்புகிறான்.

இவையே வியாச பாரதம் சித்திரிக்கும் அருச்சுனன் தவநிலைச் சருக்கச் செய்திகள் ஆகும். மேற்படி கதையாடலில் இருந்து சில விடயங்களில் தமிழில் தோன்றிய பாரத நூல்கள் வேறுபட்டுள்ளன. இனிவரும் பகுதியில் தமிழ்ப் பாரத நூல்கள் மேற்படிச் சம்பவச் சித்திரிப்பில் வேறுபடும் முக்கிய இடங்கள் குறிக்கப்படுகின்றன.

வில்லிபாரதம் மேற்கூறிய கதையாடலில் நின்று வேறுபடும் விதத்தினை அம்பிகை வேல்முருகு கீழ்வருமாறு அட்டவணைப்படுத்திக் காட்டுகிறார்

## வியாச பாரதம்

வியாசர் முதலில் உதிஷ்டிரனுக்கு மந்திரத்தை உபதேசிக்கப் பின்னர் அவர் அருச்சுனனுக்கு மந்திரத்தை உபதேசிப்பதாகக் கூறுப்பட்டுள்ளது.

வியாச முனிவர் இந்திரனை நோக்கித் தவம் புரியுமாறு கூறுவதாகக் கதை அமைந்துள்ளது.

முதலில் வியாசரின் வேண்டுகோளுக்கிணங்க இந்திரகீல மலையை அடைந்து இந்திரனை நோக்கித் தவம் செய்கிறான். இவனது தவத்தை அறிந்த இந்திரன் தவசி வேடம் கொண்டு வந்து தன்னுருக்காட்டி சிவனை நோக்கித் தவம் செய்யுமாறு கூறுகிறார். பின்னர் சிவனை நோக்கித் தவம் செய்கிறான்.

அருச்சுனனது தவவலிமையை அறிய இந்திரன் தேவமாதர்களையும் மன்மதனையும் அனுப்பியதாகக் குறிப்புகள் இல்லை.

சாதாரண பன்றி ஒன்று அருச்சுனனைத் தாக்க வருவதாகக் கூறப்பட்டுள்ளது.

பன்றிக்கு அம்பெய்தமை தொடர்பில் அருச்சுனனுக்கும் வேடர் வடிவில் வந்த சிவனுக்கும் ஏற்பட்ட முரண்பாட்டின் போது அருச்சுனன் சிவனுக்குப் பாணத்தால் அடித்தபோது அவர் சிரித்துக்கொண்டு இருந்ததாக கூறப்பட்டுள்ளது.

அருச்சுனன் ஊர்வசியின் அன்பு வார்த்தைகளை மறுத்துப் பேசிய வேளையிலேயே அவள் கோபம் கொண்டு பேடியாகும்படி சபித்ததாகக் கூறப்பட்டுள்ளது.

## வில்லி பாரதம்

பஞ்சபாண்டவர்களைக் காணவந்த வியாசர் நேரடியாக அருச்சுனனுக்கே மந்திரத்தை உபதேசித்ததாகக் கூறப்பட்டுள்ளது.

வியாச முனிவர் சிவனை நோக்கித் தவம் புரியுமாறு கூறுவதாகக் கதை அமைந்துள்ளது.

வில்லி பாரதத்தில் அருச்சுனன் இந்திரனை நோக்கித் தவம் செய்ததான கதை இல்லை. அவன் முதலிலேயே சிவனை நோக்கியே தவம் செய்கிறான்.

கைலை மலையை அடைந்து தவம் புரியும் அருச்சுனனது தவவலிமையை அறிய இந்திரன் தேவ மாதர்களையும் (ஊர்வசி, ரம்பை, மேனகை, திலோத்தமை) அனுப்பியதாகக் கூறப்பட்டுள்ளது.

முகாசுரன் என்ற அரக்கன் துரியோதனனின் ஏவலால் பன்றி வடிவில் அருச்சுனனைத் தாக்க வருவதாகக் கூறப்பட்டுள்ளது.

அருச்சுனன் பாணத்தால் அடித்தபோது அவ்வ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியை உலகிலுள்ள சகல பொருட்களும் ஏற்றுக் கொண்டதாகக் கூறப்பட்டுள்ளது.

ஊர்வசி அருச்சுனன் மேல் மையல் கொண்டு அவனது இருப்பிடம் சென்றபோது தாயாருக்குரிய வரவேற்பை அருச்சுனன் செய்தமையால் கோபம் கொண்டு சபித்ததாகக் கூறப்பட்டுள்ளது.

பின்வந்த தமிழ்ப் பாரத நூல்களும் ஆங்காங்கே சில மாறுதல்களையும் சேர்க்கைகளையும் பெற்றுக்கொண்டன. இவ்வாறு அருச்சுனன் தபசுச் செய்திகள் தமிழ்ப் பாரத நூல்களில் பல மாற்றங்களையும் சேர்க்கைகளையும் பெற்றுக்கொண்டது போலவே நாட்டாரியல் தளத்திலும் பல சேர்க்கைகளையும் மாற்றங்களையும் கொண்டுள்ளன.

## 02. தமிழகத்தில் அருச்சுனன் தபசு : இயங்குதளம்

அருச்சுனன் தவம் செவ்வியல் தளத்திற்கு அப்பால் தமிழகத்தில் சடங்கு, நிகழ்த்துகலை, கதைப்பாடல் என்ற அடிப்படைகளில் இயங்குதளம் கொண்டுள்ளது. தமிழகத்தில் அருச்சு னன் தபசு நிகழ்கலையானது பெரிதும் பயில் நிலையில் காணப்படுகிறது. தருமபுரி மாவட்டத்தில் அருச்சுனன் தபசு நிகழ்த்தப்படுவது குறித்து கள ஆய்வின் மூலமான தரவுகளை விரிவாக ஆராய்ந்த இராசரத்தினம் அப்பிராந்தியத்தில் அருச்சுனன் தபசு நிகழ்த்தப்படும் சமூகச் சூழல்களைக் குறிப்பிடுகின்றார்:

"அருச்சனன் தபசு நாடகம் ஒரு சிறப்பு வாய்ந்த கூத்தாக இப்பகுதியில் நடத்தப்படுகிறது. பாரதக் கோயில்களில் பாரத விழா நடத்தும் போது 'கம்பம் ஏறுதல்' என்ற நிகழ்த்துதலுடன் இந்நாடகம் சிறப்புடன் நடிக்கப்படுகிறது. மக்கள் ஆர்வத்துடன் அதனைப் பார்க்கிறார்கள். பாரத விழா தவிர பிற கோயில் விழாக்களிலும், சமூக சடங்கான காரியங்கள் செய்கின்ற சடங்கிலும் சமுதாய விழாக்களான இரு ஊர் வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்கிய பின் இரு ஊர் மக்களும் இணைந்து 'ஆட்டம் விடும்' போதும் இந்நாடகம் நடத்தப்படுகிறது. இப்பகுதியில் இடி விழுந்த மரங்களுக்கான சடங்காக இந்நாடகத்தையே ஆடுகின்றனர். கொட்டான் உட்கார்ந்த வீட்டைப் புனிதப்படுத்துவதற்கும் இந்நாடகம் நடத்தப்படுகிறது" (இராசரத்தினம், சு. : 2007 : பக்.90).

மேற்குறித்த சூழல்களில் நிகழ்த்தப்படும் அருச்சுனன் தபசின் கதைப்போக்குக்கும் செவ்வியல் இலக்கியம் குறிக்கும் கதைப்போக்குக்கும் இடையே பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன.

தமிழகத்தில் அருச்சுனன் தபசு நிகழ்த்துகலைக்கு மேலாக விசயன் தவநிலை, பாண்டவர் வனவாசம் ஆகியன கதைப்பாடல்களாகவும் உள்ளன. இவைதவிர்த்து இராமச்சந்திர கவிராயர் என்பாரால் 1875 இல் எழுதப்பட்ட அருச்சுனன் தபசு நாடகமும் வழக்கில் உண்டு. இக்கதைப்பாடல்களும், அருச்சுனன் தபசு நாடகப் பிரதியும் செவ்வியல் கதைமரபில் நின்று வேறுபட்டு நிற்கின்றன. குறிப்பாக இவை குறிக்கும் ஏலகன்னி, பேரண்டன் - பேரண்டிச்சி மறிப்பு முதலான அம்சங்கள் செவ்வியல் மரபினின்றும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இவை நாட்டார் இயங்குதளத்தில் அருச்சுனன் தவம் வழங்கிவந்த சூழலில் ஏற்பட்ட சேர்க்கைகளாகும்.

மேற்குறித்த கதைப்பாடல்களில் பாண்டவர் வனவாசம் எனும் கதைப்பாடல் ஏலகன்னி, பேரண்டன் - பேரண்டிச்சி மறிப்பு ஆகியவற்றைக் கூற, விசயன் தவநிலை கதைப்பாடல் பேரண்டிச்சி கதையை மாத்திரம் உள்வாங்கியுள்ளது. பாண்டவர் வனவாசம் எனும் கதைப்பாடல் 13 - 15 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் தோன்றியிருக்கலாம் என ம.அருணாச்சலம் குறிப்பிடுகின்றார். (பார்க்க: இராசரத்தினம், சு. : 2007 : ப. 96). இவற்றின் அடிப்படையில் நோக்குகையில் மேற்குறித்த கதைமரபுகள் நாட்டார்தளத்திலேயே உருப்பெற்றன என்பது புலனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. இராமச்சந்திரக் கவிராயர் எழுதிய நாடகப் பிரதியை அடிப்படையாகக் கொண்டே தமிழகத் தில் பல்வேறு சமூகச் சூழல்களின் போதும் அருச்சுனன் தபசு ஆடப்படுகின்றது என இராசரத் தினம் குறிப்பிடுவதும் நோக்கத்தக்கது. ஆயினும், நிகழ்த்துகலையாக விளங்கிவந்த சூழலில் இரா மச்சந்திர கவிராயர் அதனை எழுத்துருவாக்கியி ருக்க முடியும் எனவும் கொள்ளலாம்.

## 03.அருச்சுனன் தவம் : சடங்காசார நிகழ்த்துதல்

இனி, ஈழத்தில் சடங்காசார தளத்தில் அருச் சுனன் தவம் குறித்த கருத்தாடல்களை நோக் கலாம். ஈழத்தில் திரௌபதை வழிபாடானது கிழக்கிலங்கை, புத்தளம் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்றது. மேற்குறித்த பகுதிக ளில் நிலைபெற்றுள்ள எட்டு திரௌபதையம்மன் ஆலயங்களிலும் திரௌதையம்மன் வழிபாடா னது மகாபாரத கதைக்கூறுகளை சடங்காசார நிகழ்த்துதல்களாக மேற்கொள்வதாகவே அமை கிறது. பொதுவாக இவ்வாலயங்களில் திரௌபதி திருக்கல்யாணம், வனவாசம், அருச்சுனன் தபசு, அரவான் களப்பலி, துரியோதனன் படுகளம், திரௌபதையின் வாது முடிப்பு, பட்டாபிஷேகம் முதலான நிகழ்த்துதல்கள் மேற்கொள்ளப்படு கின்றன (சில ஆலயங்களில் இவற்றில் சில நிகழ்த்துதல்கள் இடம்பெறுவதில்லை). அந்நி கழ்த்துதல்களில் ஒன்றாகவே அருச்சுனன் தவநி லைச் சடங்கும் காணப்படுகிறது.

கிழக்கிலங்கையில் திருப்பழுகாமம், புதுநகர், கற்குடா (மகிழவெட்டுவான்), கல்லடித்தெரு (பாஞ் சாலிபுரம்), மட்டிக்கழி, பாண்டிருப்பு ஆகிய இடங் களில் திரௌபதையம்மன் ஆலயங்கள் நிலை பெற்றுள்ளன. இவ்வாலயங்களில் இடம்பெறும் அருச்சுனன் தவநிலைச் சடங்கு சிற்சில அம் சங்களில் வேறுபட்டுக் காணப்படுகின்றது. கிழக் கிலங்கையில் உள்ள திரௌபதையம்மன் ஆல யங்களில் மகாபாரதக் கதைக்கூறுகளை மிக விரி வாக சடங்காசார நிகழ்த்துதல்களாக மேற்கொள் ளும் ஆலயமமாக பாண்டிருப்புத் திரௌபதையம் மன் ஆலயம் விளங்குவதால் இங்கு பாண்டி ருப்புத் திரௌபதையம்மன் ஆலய தவநிலைச் சடங்கு விரிவான விளக்கத்தைப் பெறுகிறது.

இவ்வாலயத்தில் திரௌபதையம்மன் சடங்கு பதினெட்டு நாட்கள் இடம்பெறுகின்றது. அச்ச டங்கு காலத்தில் திருக்கல்யாணச் சடங்கு, வனவா சச் சடங்கு, அருச்சுனன் தவநிலைச் சடங்கு, அரவான் களப்பலிச் சடங்கு, பட்டாபிஷேகச் சடங்கு என்பன நிகழ்கின்றன. இச்சடங்குகள் யாவும் மகாபாரதக் கதையை சடங்குத் தன்மை யுடன் நிகழ்த்திக் காட்டுவதாவே அமைகின்றன. அச்சடங்கினை நிகழ்த்திக் காட்டுவதற்கேற்ப பஞ் சபாண்டவர், திரௌதை, கிருஷ்ணர் எனத் தம்மைப் பாவனை செய்யும் கொலு ஒன்று இங்கு காணப்படுகிறது. பதினெட்டு நாட்களும் வில்லி பாரதப் படிப்பு மேற்குறித்த கதை நிகழ்வுகளுக்கு ஏற்ப பகுக்கப்பட்டு படிக்கப்படுகின்றது.

வருடாந்த சடங்கின் பதினேழாம் நாள் நள்ளிரவு வேளையில் 'அருச்சுனன் தவநிலைச் சடங்கு' நடைபெறுகின்றது. அருச்சுனன் தவ நிலையை நிகழ்த்திக் காட்டுவதற்காக ஆலய வளவிற்குள் நிலையான கம்பம் ஒன்று நிர் மாணிக்கப்பட்டுள்ளது. அருச்சுனன் அக்கம்பத் தில் ஏறித் தவம் மேற்கொள்வதாக நிகழ்த்திக் காட்டுவார். அதனை நிகழ்த்திக் காட்டும் பாங் கில், அருச்சுனன் காவி வேட்டி தரித்து, உட லெல்லாம் முத்து வெள்ளை பூசிக்கொண்டு, அம்பு, வில் முதலானவற்றுடன் ஒரு காவிநிற சீலைப் பையினுள் பூ, பழம் முதலானவற்றை எடுத்துக்கொண்டு தவக்கோலத்துடன் காணப் படுகிறார்.

தவநிலைச் சடங்கை நிகழ்த்துவதற்குத் தயாராகிய அருச்சுனன், தருமரை வணங்கி தவ த்துக்கு செல்ல அனுமதி வேண்டுகிறார். அவ் வேளை அருச்சுனனுக்கு அருகிலுள்ள ஒருவர்,

*"ஆண்டி வடிவெடுத்து*
*சன்னியாசி ஆகி நான்*
*அரியதவம் போறன் அண்ணை"*

என அருச்சுனன் பாடுவதாகப் பாடுகிறார். அவ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளை தருமரும் சம்மதம் வழங்குகிறார்.

தருமரை வணங்கி தவநிலைக் கம்பத்தை நோக்கி அருச்சுனன் செல்கையில் 'ஏலகன்னி மறித்தல்', 'பன்றி மறித்தல்' ஆகிய இரு நிகழ்வுகள் நிகழ்த்திக் காட்டப்படுகின்றன. அருச்சுனன் தவநிலைக் கம்பத்தை நோக்கிச் செல்கையில் ஒருவர் பெண் போன்று வேடம் பூண்டு அருச்சுனனுக்கு முன்னால் வந்து, அவரை தவநிலைக் கம்பத்தை நோக்கிச் செல்லாது தடுக்கிறார். அவர் கீழ்வருமாறு பாடுகிறார் :

*"மார்பைப் பார் தோளைப் பார்*
*சன்னாசி சந்நாசி — என்*
*வண்ண முகம் நீர் பாரும்*
*தோளோடு தோளணைத்து*
*சன்னாசி சந்நாசி*
*சுகமுத்தம் தாருமய்யா*
*ஐயா நீ*
*ஓரிரவு நீயிருந்து*
*சன்னாசி சந்நாசி*
*உறங்கியிருந்து போங்காணும்*
*கட்டிலுண்டு மெத்தையுண்டு*
*சன்னாசி சன்னாசி*
*கால்பிடிக்கத் தாதியுண்டு*
*இதனை மறுத்து அருச்சுனன்,*
*என்னதான் சொன்னாலும்*
*சண்டாளி சண்டாளி*
*ஏறெடுத்துப் பாரண்டி*
*அடி நான்*
*ஆதி கைலாசம்*
*சன்னாசி சன்னாசி*
*அரன்பதிக்குப் போறனடி*
*போற வழி தனிலே*
*சண்டாளி சண்டாளி*
*பிழைகேடு செய்யாதடி"*

எனப் பாடுகிறார். இறுதியில் அருச்சுனன் ஏலகன்னியை நோக்கி அம்புவிடுவதாகப் பாவனை செய்கிறார். ஏலகன்னி ஓடி விடுகிறாள்.

ஏலகன்னி மறித்தல் நிகழ்வு முடிவுற்றதும் அருச்சுனன் தவக்கம்பத்தை முன்னோக்கிச் செல்கிறார். சிறிது தூரம் சென்றதும் பன்றியாக வேடம் பூண்ட ஒருவர் அருச்சுனனை தவநிலைக்குச் செல்லவிடாது மறிக்கிறார். அவ்வேளை அருச்சுனனைப் பின்தொடர்ந்து வருபவர்கள் கீழ்வருமாறு பாடுகிறார் :

*முன்னழகு கண்டாலோ*
*அருச்சுனப் பெருமாள்*
*முன் தொடர்வார் ஆயிரம்பேர்*
*பின்னழகு கண்டாலோ*
*அருச்சுனப் பெருமாள்*
*பின் தொடர்வார் ஆயிரம்பேர்*

மேற்படி இரு நிகழ்வுகளும் நிறைவுற்றதும் அருச்சுனன் தவநிலைக்கம்பத்தில் ஏறும் நிகழ்வு இடம்பெறுகிறது. கம்பத்தில் ஏறிய அருச்சுனன் அக்கம்பத்தில் அமர்ந்திருந்து பாடல்களைப் பாடி பாசுபதம் தந்தருளுமாறு மன்றாடுகிறார்:

பாடல்களை முழுமையாகப் பாடி முடித்தவுடன் சங்கினை எடுத்து ஊதி, மணியினை அடித்து விட்டு, தான் கொண்டுசென்ற பூ, பழம் முதலானவற்றை எடுத்து அடியவர் கூட்டத்தை நோக்கி வீசியபின் கீழிறங்கி சந்தன மண்டபத்தில் இருக்கும் அண்ணனிடம் (தருமரிடம்) சென்று நடந்த விடயத்தைக் கூறுகிறார். அதன் பின்னர் தருமர் தாம் இருந்த இடத்தை விட்டு மகிழ்ச்சியுடன் எழும்புகிறார். இத்துடன் அருச்சுனன் தவநிலைச் சடங்கு நிறைவுறுகின்றது. இங்கு சிவன் வேடுவர் வேடம் பூண்டு வருதல், மற்போர் புரிதல், பாசுபதாஸ்திரம் கொடுத்தல் முதலான நிகழ்வுகள் எதுவும் அபிநயிக்கப்படுவதில்லை. பாசுபதாஸ்திரம் கிடைத்ததற்கு அறிகுறியாக சங்கினை ஒலிக்கின்றார்.

கிழக்கிலங்கையில் நிலைபெற்றுள்ள ஏனைய ஆலயங்களில் பெரும்பாலும் இதனையொத்த முறையிலேயே அருச்சுனன் தபசு நிகழ்த்தப் படுகிறது. சில ஆலயங்களில் அருச்சுனன் தவம் மேற்கொள்ளச் செல்கையில் பேரண்டன். பேரண்டிச்சி என்போர் மறிப்பு நிகழ்வும் நிகழ்த்திக் காட்டப்படுகின்றது. (மட்டிக்கழி - பேரண்டன் - பேரண்டிச்சி மறிப்பு, மகிழவெட்டுவான் - ஏலகன்னி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரண்டிச்சி மறித்தல். கல்லடித்தெரு - ஏலகன்னி, பேரண்டிச்சி மறிப்பு)

மேற்கூறிய விபரணத்தில் அவதானிக்கத்தக்க விடயம் வில்லி, வியாச பாரதங்கள் சித்திரிக்காத ஏலகன்னி, பேரண்டன் - பேரண்டிச்சி ஆகியோர் அருச்சுனன் தவநிலையினைக் குலைப்பதற்கு முயன்றதான கதைமரபு சில ஆலயங்களில் நிகழ்த்திக் காட்டப்படுவதாகும். செவ்வியல் இலக்கிய மரபில் அருச்சுனன் தவம் மேற்கொள்கையில் அல்லது மேற்கொள்ளச் செல்கையில் அவனுக்கு ஏற்பட்ட சோதனைகளில் அல்லது தடங்கல்களில் இரு சம்பவங்களே நிகழ்ந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒன்று, இந்திரன் அருச்சுனனின் தவ வலிமையை பரிசோதிக்க எண்ணி அரம்பை, ஊர்வசி, திலோத்தமை ஆகிய தேவமாதர்களை அனுப்பிச் சோதித்தல். மற்றையது, அவர்கள் அருச்சுனனின் தவ வலிமையை இந்திரனிடம் எடுத்துக்கூற, இந்திரன் முதிர்ந்த முனிவர் வேடம் கொண்டு அருச்சுனனின் தவவலிமையை சோதித்தல். இவை தவிர்த்து அருச்சுனனின் தவத்தினைக் குலைக்க இடம்பெற்ற நிகழ்வாக துரியோதனன் 'மூகன்' என்னும் அசுரனை ஏவிவிட்டமை பதிவாகியுள்ளது. எனவே, இவை அருச்சுனன் தவம் நாட்டாரியல் தளத்தில் பெற்றுக்கொண்ட சேர்க்கைகளே ஆகும்.

கிழக்கிலங்கையில் மேற்குறித்த இடங்களில் திரௌபதையம்மன் வழிபடப்படுவதனைப் போன்று இலங்கையின் புத்தளம் மாவட்டத்தில் உடப்பு, முந்தல் ஆகிய இரு கிராமங்களிலும் திரௌபதையம்மனுக்கு சடங்கு நிகழ்த்துகின்றனர். அவ்வகையில், திருக்கல்யாண உற்சவம், வனவாசம், அருச்சுனன் தவநிலை, தேத்தரசன் கோட்டை பிடித்தல், துரியோதனன் படுகளம், திரௌபதி சபதம் முடித்தல் (வாது முடித்தல்), தர்மர் பட்டாபிஷேகம் முதலான நிகழ்வுகள் நிகழ்த்திக் காட்டப்படுகின்றன. இவற்றில் பல நிகழ்வுகள் கூத்துக்களுக்கான தன்மையைப் பெற்றுள்ளன. ஆயினும், அவை திரௌபதைக்கான சடங்காசாரத்தோடு பிணைந்துள்ளன என்பது நோக்கத்தக்கது.

இவ்விரு கிராமங்களிலும் அமைந்துள்ள திரௌபதையம்மன் ஆலய சடங்கின் பதினாறாவது நாள் அருச்சுனன் தவநிலைச் சடங்கு நிகழ்த்திக் காட்டப்படுகிறது. இந்நிகழ்வை நிகழ்த்திக் காட்டும் முகமாக முதலில் தவசிக் கம்பம் (தவக் கம்பம்) நாட்டப்படுகிறது. பின்னர் மாலை வேளை யில் அருச்சுனராக பாவனை செய்ப வரை மால்தோல் உடுத்தி முதுகில் வில் அம்புகள் அணிவித்து விபூதி பூசிவித்து அலங்காரம் செய்து காளியம்மன் கோயிலில் இருந்து திரௌபதையம்மன் கோயிலுக்கு அழைத்து வருகின்றனர். பின்னர் திரௌபதையம்மன் ஆலய முன்றலில் நடப்பட்டிருக்கும் தவக்கம்பத்தின் முன்பாக அருச்சுனனின் தவத்தைக் குலைக்க மூகன் என்ற அசுரன் பன்றி உருவில் வந்த காட்சிகள் அபிநயிக்கப்படுகின்றன. அதன் பின் அருச்சுனராக வேடம் பூண்டவர் கீழ்வருமாறு பாடிக்கொண்டு தவக் கம்பத்தில் ஏறுகிறார் :

*வானோர் புகழும் கைலையிலே வடிவா யெழுந்து தனுவாசி*

*சீராய் வளர்ந்து தெளிவாகி தில்லை மன்றுள் நின்றாடும்*
*பாரோர் புகழும் ஒவருக்காய் பாசுபதத்தையே வேண்ட*
*ஓராம் படியிற் திருக்காலை உன்னி வைத்துக் கடப்பேனோ*
*இரண்டாம் படியை மிகவேண்டி எனது பாதம் தலை ஊன்றி*
*மண்டே நடனம் புரியவரும் வானோர்க்கரசே வல்லவனே*
*இன்றே பாசுபதம் வேண்ட இரண்டாம் படியிற் திருக்காலை*
*கண்டே காட்சி பெறவந்தேன் கர்த்தா வரந்தருள்வாயே*

அதன்பின் தவம்மேற்கொள்வதாக அபிந யிக்கின்றார். அவ்வேளை சிவன், உமை ஆகியோர் வேடர்களாக உருத்தாங்கி வந்து அருச்சுனனுக்கு பாசுபதம் அளிக்கும் நிகழ்வும் மிகவுத் தத்ரூபமான வகையில் அபிநயிக்கப்படுகிறது. இறுதியில் அருச்சுனராக பாவனை செய்பவர் ஆலயத்தை வலம்வந்து பிரசாதங்கள் வழங்குவதுடன் அருச்சுனன் தவநிலைச் சடங்கு நிறைவடைகிறது. இங்கு நிகழ்த்தப்படும் அருச்சுனன் தவநிலை முற்றிலுமாக வில்லிபாரதக் கதைமரபைப் பின்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது இவ்வாறிருக்க, மலையகப் பகுதியில் திரௌபதை வழிபாட்டுடன் கூடியவகையில் அருச்சுனன் தபசு சடங்காக நிலைபெறாமை அவதானிப்புக்குரியது. இலங்கையின் பெருந்தோட்டப் பகுதிகளில் வதியும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் தமிழகத்திலிருந்து பெருந்தோட்டத் துறையில் தொழில்புரிய வரவழைக்கப்பட்டவர்கள். அம்மக்கள் தமது சடங்கு முறைகளையும், கலைகளையும், வழிபாட்டு மரபுகளையும், நம்பிக்கைகளையும் தொடர்ந்தும் தாம் வாழும் மலையகப் பகுதிகளிலும் பின்பற்றலாயினர். அம்மக்களிடத்தே வழங்கிவரும் கலைகளில் காமன் கூத்து, பொன்னர் - சங்கர் கூத்து, அருச்சுனன் தபசு என்பன இன்றளவும் அதிகம் பயிலப்பட்டு வரும் கலைகளாகும்.

இவற்றுள் அருச்சுனன் தபசானது, தமிழகத்தில் திரௌபதையம்மன் ஆலயச் சடங்குகளிலும், அது தவிர்த்து பிற கோயில் விழாக்களிலும், சமுதாய விழாக்களிலும் நிகழ்த்தப்படுகின்றது. இப்பின்னணியில் நிகழ்த்தப்படுகின்ற அருச்சுனன் தபசு, தமிழகத்திலிருந்து வருகை தந்த இலங்கை வாழ் மலையகத் தமிழர்களிடத்தே இன்றளவும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த கலையாக வழக்கில் உள்ளது. தமிழகத்திலோ திரௌபதையம்மன் ஆலய சடங்கோடு தொடர்புபட்ட வகையில் பெரும்பாலும் நிகழ்த்தப்பெறுகின்ற அருச்சுனன் தபசு மலையகத் தமிழரிடத்தில் நிலைபெற, அதனோடு இணைந்திருந்த திரௌபதை அம்மன் வழிபாட்டு மரபு மலையகத்தில் நிலைபெறாமைக்கான காரணங்கள் ஆராயப்பட வேண்டியவை.

## 04. நிகழ்த்து கலை

ஈழத்தில் மலையகத்தில் ஆடப்படும் அருச்சுனன் தபசு நிகழ்த்துகலை குறித்து ஆய்வு செய்த அம்பிகை வேல்முருகு, மலையகத்தில் ஆடப்படும் அருச்சுனன் தபசு கூத்தின் பிரதியைத் தொகுத்துத் தந்த மீரா ஹரிஸ் ஆகியோரின் ஆக்கங்களின் வழி மலையகத்தில் அருச்சுனன் தவத்தின் நாட்டாரியல் இயங்குதளத்தை அறியமுடிகிறது.

கதைப்போக்கின் அடிப்படையில் நோக்குகையில் கூத்தின் பெரும்பகுதியை அருச்சுனன் எட்டு வனாங்களைக் கடந்து (சில சோதனைகளை அங்கு எதிர்கொண்டு) செல்வதே பெற்றுள்ளது. அதாவது, சிவனை நோக்கித் தவம் செய்யச் செல்லும் அருச்சுனன் பல்வேறு இடர்களையும் கடந்து சென்றே தவம்முடித்தான் என்பதனை 'வனாங்கடத்தல்' என்ற அம்சத்தினூடு நிகழ்த்துகலை சித்திரிக்கிறது.

முதலாவது வனம் : அரச்சுனனின் தவ வலிமையைச் சோதிக்க கிருஷ்ணர் மோகினி வடிவில் வந்து மறிக்கிறார்.

இரண்டாவது வனம் : கிருஷ்ணர் இராட்சதனாக வேடம் தாங்கி வந்து மறிக்கிறார்

மூன்றாவது வனம்: கிருஷ்ணர் பிராமணர் வடிவம் தாங்கி வந்து மறிக்கிறார்

நான்காவது வனம் : கிருஷ்ணர் சுய வடிவில் வந்து முன்னர் நடந்தவற்றைக் கூறிச் செல்லல்.

ஐந்தாம் வனம் : வேங்கை வடிவம் பெற்றிருந்த பெண்ணொருத்தி அருச்சுனனைக் கண்டவுடன் சுயவடிவம் பெறலும், தன் கதையைக் கூறலும்

ஆறாம் வனம் : மலைப்பாம்பு வடிவம் பெற்றிருந்த வேடன் தனது சுயவடிவம் பெற்று தன் வரலாற்றைக் கூறல்

ஏழாவது வனம் : ஏலகன்னி என்பவள் மறித்தல்

எட்டாம் வனம் : பேரண்டன் - பேரண்டிச்சி மறித்தல்

இந்நிகழ்த்துகலையிலும் ஏலகன்னி, பேரண்டன், பேரண்டிச்சி மறித்தல் ஆகிய நிகழ்வுகள் பதிவாகியுள்ளன. அதற்கும் மேலதிகமாக, வேங்கை வடிவம் பெற்றிருந்த பெண்ணொருத்தி அருச்சுனனைக் கண்டவுடன் சுயவடிவம் பெற்று தன் கதையைக் கூறல், மலைப்பாம்பு வடிவம் பெற்றிருந்த வேடன் தனது சுயவடிவம் பெற்று தன்வரலாற்றைக் கூறல் ஆகிய கதைமரபுகள் நாட்டாரியல் தளத்தில் வந்துசேர்ந்துள்ளன. மேற்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைமரபுகள் தமழகத்தில் ஆடப்படும் அருச்சு னன் தபசிலும் காணப்படுவதனை இராசரத்தினம் குறிப்பிடுகின்றார்.

மேலும், தமிழகத்தில அருச்சுனன் தபசு சடங் காசாரமாகவும் முற்றிலும் அதிலிருந்து விடுபட்ட தெருக்கூத்தாகவும் விளங்குகிறது. ஈழத்தைப் பொறுத்தவரை அருச்சுனன் தபசு சடங்குத் தன் மையில் இருந்து முற்றிலும் விடுபடாத நிலையி-லேயே காணப்படுகிறது.

## 05. கதைப்பாடல்

கிழக்கிலங்கையில் மகாபாரதக் கதை நாட்டா ரியல் தளத்தில் கதைப்பாடலாகவும் இயங்கி வந் துள்ளது. கிழக்கிலங்கையின் பல்வேறு பாகங்க ளிலும் இருந்து கிடைக்கப்பெற்ற பாரத அம்மானை ஏட்டுச் சுவடிகளைச் சேகரித்து, ஒப்புநோக்கி, பாரத அம்மானை என வித்துவான் சா.இ.கமலநாதன் பதிப்பித்துள்ளார். மகாபாரதக் கதையானது நாட் டாரியல் தளத்தில் பயிலப்பட்டவந்தமையை அப்பா ரத அம்மானை ஏட்டுச்சுவடிகள் புலப்படுத்தி நிற் கின்றன.

இந்நிலையில் ஈழத்தில் மேற்படி பிராந்தியத்தில் மகாபாரத அம்மானையில் பயில்நிலைக்கு இப்பிர ாந்தியத்தில் நிலைபெற்றுள்ள திரௌபதையம் மன் ஆலயங்களா காரணமாக அமைந்தது என்ற வினா எழுவதும் இயல்பே. ஆயின், மேற்படி பிராந்தியத்தில் பழுகாமம் திரௌபதையம்மன் ஆலயம் மாத்திரமே மகாபாரத அம்மானைப் படிப்பு இடம்பெறும் ஆலயமாக அமைவதால் மகாபாரத அம்மானையின் பயில்நிலைக்கு இப்பிர ாந்தியத்தில் நிலைபெற்றுள்ள திரௌபதை யம்மன் ஆலயமே காரணம் என்று முழுவது மாகக் கூறமுடியாதுள்ளது. எனினும் திரௌபதை யம்மன் ஆலய வழிபாட்டு நிகழ்த்துதல்களில் செவ்வியல் இலக்கியம் சித்திரிக்காத - மேற்சொன்ன கதைப்பாடல்கள் சித்திரிக்கும் - மகாபாரத அம் மானை சித்திரிக்கும் கதைமரபுகள் பல இணைந் துள்ளன (ஏலகன்னி மறிப்பு முதலானவை). இவ் விணைவு தமிழகத்திலிருந்து இவ்வழிபாடு கடத் தப்பட்டபோது உடன் வந்துசேர்ந்தவையா அல் லது பாரத அம்மானையில் செல்வாக்கால் ஏற்பட் டவையா என்பது ஆய்வுக்குரியது. திரௌபதை வழிபாட்டு மரபுகளை தமிழ்நாட்டு வழிபாட்டு மர புகளுடன் ஒப்புநோக்கி ஆய்வு செய்யும் போது இது புலப்படும்.

இங்கு பாரத அம்மானை கதைப்பாடல் எடுத் தியம்பும் அருச்சுனன் தவநிலைச் செய்திகளிலும் செவ்வியல் கதைமரபில் நின்று வேறுபடும் இடங் களும் அடையாளப்படுத்தப்படுகின்றன. பாரத அம் மானை கதைப்பாடல், மலையகத்தில் ஆடப்படும் அருச்சுனன் தபசு நிகழ்த்துகலை முதலான வற்றுக்கு இடையிலான உறவுகள் குறித்தும் ஆங் காங்கே பேசப்படுகிறது.

வியாசரின் வேண்டுகோளுக்கிணங்க தவ மந் திரத்தை ஓதி பாசுபதம் பெற்றவருமாறு தருமர் கூறுகிறார். அருச்சுனனும் தருமரிடம் விடை பெற்று தவம் முடிக்கச் செல்கையில் சில வனங் களைக் கடக்கிறார். இதனைக் கீழ்வரும் பாடல் வரிகள் சுட்டுகின்றன :

*தன்ம ரிருக்குந் தவவனத்தை விட்டகன்று*
*மான்கள் புலிகரடி வாழும் வனங்கடந்து*
*விந்தை பயிலும் விசையன் தவசியென்ன*
*திங்கள் புனையரனைச் சிந்தைதனி லேநினைந்து*
*சிங்க மியாளி திரியும் வனங்கடந்து*
*விந்தை பயிலும் விசையன் மிகநடந்து*
*அந்த வனங்கடந்து அப்பாலே போகையிலே*

வனங்களைக் கடத்தல் என்ற அம்சம் விசயன் தவநிலை தவிர்த்து, பாண்டவர் வனவாசம், அருச்சுனன் தபசு (ஈழம், தமிழகம்) முதலான நாட்டாரியல் வடிவங்களில் இடம்பெறுகின்றது. ஆகவே, அருச்சுனன் தபசு நாட்டாரியல் தளத்தில் இயக்கம்பெற்ற போது வனங்களைக் கடத்தல் என்ற அம்சம் கதைமரபில் இணைவுபெற் றுள்ளது என்பதனைப் புரிந்துகொள்ள முடிகிறது. பின்வந்த நாட்டாரியல் வடிவங்களும் அதனைப் பேணலாயிற்று. அடுத்து, மேற்குறித்தவாறு பல வனங்களைக் கடந்து செல்லும் அருச்சுனனை பேரணடிச்சி மறித்த செய்தி குறிப்பிடப்படுகிறது. அச்செய்தி வருமாறு :


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனங்களைக் கடந்து செல்லும்போது பேரிண்டி என்பவள் பசியின் காரணமாக கணவனான பேரண்டினிடம் அருச்சுனனின் உடலை உண்ணத் தருமாறு கேட்கிறாள். அவன் அச்சுனனோடு போரிடுகிறான். அருச்சுனன் அவனைத் தாக்க பேரண்டன் இறந்துவிடுகிறான். பேரண்டிச்சி தனக்குத் தாலி தருமாறு அழுது புலம்புகிறாள். அவனும் சிவனிடம் வேண்டி உயிரை மீட்டுக் கொடுக்கின்றார்.

மேற்படி தடங்களைக் கடந்து சென்ற அருச்சனன் சிவனை நோக்கித் தவம் செய்கிறான். இவனது தவத்தைக் குலைக்க சிவன் காற்று, வருணன், மன்மதன், வண்டு முதலானவற்றை அடுத்தடுத்து அனுப்புகிறார். எவற்றாலும் அவனது தவத்தைக் குலைக்க முடியவில்லை. பின் வேடர் வடிவு தாங்கி வருகிறார். பின் வில்லிபாரதம் சித்திரிக்கும் மூகன் பன்றி வேடம் கொண்டு வந்த செய்தியும் அதனைத் தாக்கியதில் ஏற்பட்ட விவாதங்களும் இடம்பெறுகின்றன. இறுதியில் சிவன் பாசுபதத்தை வழங்குகிறார்.

இதில் அவதானிக்கத்தக்க விடயம் சிவனை நோக்கி அருச்சுனன் தவம் செய்கையில் ஏற்பட்ட சோதனைகளைப் பதிவுசெய்வதில் செவ்வியல் இலக்கியத் தளத்தில் நின்றும் நாட்டாரியல் இயங்குதளம் பெரிதும் மாறுபடுகிறது.

வியாசபாரதத்தைப் பொறுத்தவரையில் இந்திரனை நோக்கி முதலில் அருச்சுனன் தவம் செய்தபோது இந்திரன்கிழவேடத்தில் தோன்றி தவத்தைச் சோதித்து சிவனை நோக்கித் தவம் செய்யுமாறு கூறிவிடுமாறு கதைமரபு அமைந்துள்ளது. இந்திரன் கிழ வேடத்தில் தோன்றி அருச்சுனனை சோதித்தார் என்ற செய்தியை - 'தவம் சோதித்தல்' என்ற விடயத்தைத் தமிழ் மரபு கச்சிதமாய் பற்றிக் கொண்டது - தவம் சோதிப்பதைக் குறித்துப் பல்வேறு செய்திகளை தமதாக்கிக் கொண்டது. வில்லிபாரதம் தவம் சோதித்தலை சற்று விரிவாக்கியது. இவனது தவத்தின் வலிமையை உணர தெய்வமாதர்களான ரம்பை, ஊர்வசி, திலோத்தமை, மேனகை ஆகியோரையும் மன்மதனையும் அனுப்பியதாக விரிவாக்கிக் கொண்டது. (விரிவுக்குப் பார்க்க : வில்லிபாரதம், ஆரணிய பருவம், அ.த.ச : 46 – 54)

நாட்டாரியல் தளத்தில் தெய்வமாதர்கள், மன்மதன், சூரியன் வருணன், காற்று, இடியேந்திரன், கறையான்கள், குருவிக் கூட்டம் என்பனவற்றை அனுப்பி தவம் குலைக்க முயன்றதாக விரிவாக்கம் பெற்றுள்ளது.

அருச்சுனன் தபசு (தமிழகம்) : ஊர்வசி, மேனகை, திலோத்தமை போன்ற தெய்வலோகப் பெண்களை அனுப்பி வைக்கிறார். பின்னர் சூரியனையும் வருணனையும் இடியேந்திரனையும் வாயுவையும் அனுப்பி வைக்கிறார்.

அருச்சுனன் தபசு (ஈழம்) : வருணன், வண்டுகள், இடியேந்திரனை அனுப்புகிறார்.

பாண்டவர் வனவாசம் : முதலில் வாயுவை அனுப்பி தவம் செய்யும் கம்பத்தைப் பிடுங்கச் செய்கிறார். பின் வருணனை அனுப்பி மழை ஏற்படுத்தி தவம் குலைக்க முயற்சிக்கிறார். பின் இடியேந்திரனை அனுப்பி ஏழு இடியையும் ஓர் இடியாக இடித்து தவம் குலைக்க முயற்சி செய்கிறார் பின்னர் கறையான்கள், குருவிக் கூட்டம், குளவிக் கூட்டத்தை அனுப்பி முயற்சிக்கிறார்.

விசயன் தவநிலை : வாயு, வருணன், சூரியன், தெய்வமாதர், மன்மதன் ஆகியோரை அனுப்பல்.

பாரத அம்மானை : வருணன், இடி, வண்டு, வாயு, மன்மதனை அனுப்புதல்

மேற்குறித்த தகவல்களை ஒட்டுமொத்தமாக நோக்கும்போது செவ்வியல் மரபில் பயிலப்பட்ட கதைமரபு நாட்டாரியல் தளத்தில் இயக்கம் பெறுகின்றநிலையில் பல்வேறு மாற்றங்களையும் சேர்க்கைகளையும் உள்வாங்கிக் கொள்கிறது என்பது புலனாகிறது. அந்த உள்வாங்கள்களுடனேயே அவை எல்லை கடந்தும் பரவுகின்றது. இது அருச்சுனன் தவம் குறித்த கருத்தாடல்களுக்கு மாத்திரம் பொருத்திப் பார்க்கக் கூடியதன்று. இதிகாச, புராண கதைகள் நாட்டாரியல் வடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்களாக நிலைகொள்கையில் இத்தகைய தன்மைகளை அவை பெற்றுக்கொண்டுள்ளமையை நாட்டாரியல் தளத்தில் அவதானிக்க முடிகிறது. இக்கருத்துநிலை நின்று இதிகாச, புராண கதைகளை அடிப்படையாகக் கொண்ட நாட்டார் நிகழ்த்துகலைகளையும் சடங்காசாரங்களையும் இலக்கிய வடிவங்களையும் அணுக முடியும்.

**உசாத்துணை நூல்கள்**


அம்பிகை வேல்முருகு. (1998) அருச்சுனன் தபசு. சென்னை : குமரன் பப்ளிகூஷர்கூஷ்.

இராசரத்தினம், சு. (2007) தெருக்கூத்து. காவ்யா வெளியிடு : சென்னை.

ஐராவதி கார்வே (தமிழில் அழகிய சங்கர்) (1994) யுகந்தா ஒரு யுகத்தின் முடிவு. சென்னை :

ஓரியன் லாங்மன் லிட்.

கமலநாதன்,சா.இ (ப.ஆ) (2002) பாரத அம்மானை. கொழும்பு : இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

கந்தையா. வீ.சி. (1964) மட்டக்களப்புச் சைவக் கோயில்கள், கொழும்பு: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்.

கோபாலக்ருக்ஷ்ணமாசார்யர் (உ.ஆ) (1939) மகாபாரதம் (வில்லிபுத்துரார் இயற்றியது) ஆரணிய பருவம். ஆர்.ஜீ. அச்சுக்கூடம் : சென்னை.

சிவலோகதாசன். வ. (இ.ஆ) (1997) உடப்பூர் வரலாறும் மரபுகளும், உடப்பு திரௌபதையம்மன் ஆலய இந்து பரிபாலன சபையின் வெளியீடு.

மௌனகுரு. சி (1998) மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள், மட்டக்களப்பு : விபுலம் வெளியீடு.

............... (ப.ஆ) (2003) மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப் பண்பாடு, இரண்டாம் உலக இந்து மாநாட்டு மட்டக்களப்புக் கிளையின் வெளியீடு.

மாத்தளை வடிவேலன் (1992) மலையக பாரம்பரியக் கலைகள், கொழும்பு : குறிஞ்சிப் பதிப்பக வெளியீடு.

வீரசொக்கன். ( ) உடப்பு ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலய வரலாற்று நூல். உடப்பு : இளம் தாரகை வட்டம்.

ஹரிஸ், மீரா.எஸ். (2014) இலங்கையின் இந்திய வம்சாவழி மக்களின் பாரம்பரிய கூத்துக்கள். கண்டி : நிரத்ய கலாலயம்.

மணவாளன். அ.அ. (2011) "மகாபாரதக் காப்பிய மரபிற்குத் தமிழிலக்கியத்தின் நன்கொடை", தமிழகத்தில் பாரதம் : வரலாறு - கதையாடல் (ப.ஆ : சீனிவாசன். இரா.) சென்னை : மாற்று வெளியீடு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை இயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நியாயப்படுத்தப்பட்ட நியாயங்கள்

வி.ஆர்த்திகா
இரண்டாம் வருடம், பொறியியற் பீடம்

தோற்றவன் அல்ல தோற்கடிக்கப்பட்டவன்
வீழ்ந்தவன் அல்ல வீழவைக்கப்பட்டவன்
ஆதவனால் உதித்தாலோ என்னவோ
அவன் புகழும் கதிரோன் கதிராய்
பாரெங்கும் பரவியது

கொடையாய் பேர் பெற்றவன்
ஓர் தங்க மலை தந்து
கொடையளிக்க கூறினால்
மற்றோரெல்லாம் அதிலே கிள்ளிக் கொடுக்க
அம்மலையையே அள்ளிக் கொடுத்தவன்

அர்தரதன் என பிதாமகரால்
அவமதிக்கபட்டாலும்
அர்த்தமுள்ள வாழ்வு வாழ்ந்தவன்

குலத்தை மறைத்து - குரு
குலக் கல்வி பயின்றான்
பரசுராமரிடம் - மறைத்தன
வெளிப்பட - மறக்கும்
என் பாடங்கள் என
மறவாமல் தன் பங்கு
சாபத்தையும் அளித்தார் - குரு

தாழும் கை மேலிருக்க
தாங்கும் கை கீழிருக்க
குடம் குடமாய்
புண்ணியத்தை
தானமாய் பெற்றவன்

சகஸ்ர கவசனாய்
இருந்து எஞ்சிய
ஒரு கவசத்துடன்
பிறந்து அதையும்
தனை விஞ்சிய
இந்திரனுக்கே
தானமாய் அளித்தான்

எண்ணிலாதோர் பெற்ற தானம் பெரிதல்ல
பெற்ற தாயும் அதற்கு விதிவிலக்கல்ல
எண்ணிப் பெற்ற ஐவருக்காய்
ஏதும் எண்ணமின்றி
உயிர் பிச்சை கேட்டு
கர்ணன் உயிர் பிரிய தன்
பங்கு பணியையும்
அறியாமல் செய்தார் - அப்
பாவி- ஆனால்
அப்பாவி அல்ல அவன்

பேசவல்லான் - மாய
சூழ்ச்சி வல்லான் - கண்ணன்
சொடுக்கில் சுழன்ற
கதாபாத்திரங்கள் தான்- இக் காவியம்

கண்ணன் மொழி கேட்டு
அர்சுனனைக் காக்க
நாகாஸ்திரம் மறுமுறை எய்யேன்
எனும் உறுதி வாங்கி செல்கிறாள்
தன் தனயனிடம்
தன் தனயனுக்காய் - உயிர்ப்பிச்சை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் முறை எய்த அஸ்த்திரத்தையும்
தேரை புவியில் அழுத்தி
குறி தவறச் செய்தான்

இக்காவிய சூதாட்டதின்
காய் நகர்த்தல் வீரன் - கண்ணன்

தேர் புதைந்த வேளையிலும்
கண்ணன் சொல் கேட்டு
போர் விதி மீறி
விற்போர் புரிந்தான் - கர்ணனுடன்
வில்விஜயன்

போரில் அம்பு துளைத்த
மார்புடன் இருந்தும் உயிர்
பிரியாது காத்தன - அவனது கொடைகள்
விட்டானா கண்ணன்?
அதையும் பறித்தானே
அவன் உயிரை பிரித்தானே

வீழ்த்த முடியா வில்லாளனை
விழுந்த பின் எழ இடம் கொடாமல்
வீழ்த்தியதால் மார் தட்ட
முடியாது - அர்சுனனால்

வீழ்ந்தது கர்ணனுமல்ல
வீழ்த்தியது அர்ச்சுனுமல்ல
எல்லாமறிந்த ஒரு ராஜதந்திரியின்
வெற்றியே - இக்காவியம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காணாமல் இருப்பது ஏன்?

சிவகாமி,

தமிழ்த்துறை, 3ஆம்வருடம்

அம்மையும் அப்பனும் அண்ணனோ டயலார்
அந்தியும் சந்தியும் உனைத்தொழக் கண்டு
அட்சரம் அறியா அச்சிறு வயதில்
அழகனே நின்னடி தொழுதுயான் நின்றேன்

அட்சரம் அறிந்திட ஏகிடுங் காலை
அறுமுகன் என்றுனை ஆசானும் மொழிய
அழகனே உன்னுடை இன்னொரு பெயரை
அப்பொழுதே எந்தன் மனத்திடை வைத்தேன்

பின்னைநாட் செலச்செல உலகியல் அறிவை
பிள்ளைநான் கற்றிடும், பெற்றிடும் வேளை
உன்னையே தினந்தினம் மனத்திடை வைத்து
உன்நாமம் பலபல தேடிஉச் சரிப்பேன்

என்னவன் முருகன், என்பிரான் குமரன்,
எழிலுடை வேலவன், என்மனக் கள்வன்
என்றெலாம் பலபடி நயந்துனை அழைத்தே
என்சிறு இதயத்தில் சிறையுனை வைத்தேன்.

எத்தனை நாமங்கள் உனக்குள்ள போதும்
என்னவன் என்றுனை அழைப்பதில் மகிழ்ச்சி
பித்தெனக் கென்றுஎன் தோழியர் சொன்னார்
பித்தெனக் காதலை மொழிபவர் பித்தர்

பெற்றிடும் கல்வியில் மகத்துவம் தனினால்
பேராவில் உயர்கல்வி கற்றிடும் வேளை
உற்றவர் ஈங்கிலை கூடவென் றெண்ணக்
கொற்றவன் நீயிங் குற்றனை பாரேன்.
எத்தனை ஆயிரம் ஆனந்தம் பெற்றேன்
அத்தனை கூறிடப் போதுமோ பிறவி
மொத்தமாய் இருதயம் கவர்ந்தநீ பின்னும்
பித்தனாய்க் குறிஞ்சியில் அமர்வது மேனோ?

குறிஞ்சியில் அப்படி என்னதான் மையல்
குறமகள் வள்ளிமேல் இன்னுமா காதல்
உறவினைத் தேடியும் வீடுசெல் லாதுநான்
உன்திருக் குறிஞ்சியை நாடுதல் அறிவாய்

எத்தனை முறைகள்தான் குறிஞ்சி மீதேறி
என்னவன் உனைத்தினம் தேடியே வாறேன்
மெத்தனம் காட்டிறாய் உன்னுடை நெஞ்சம்
மென்மையிற் கல்லென்று கண்டுநான் கொண்டேன்

கல்லிலே யாயினும் கண்ணீரா றுடையாய்
காணாமல் இருப்பதன் காரணம் என்ன?
எல்லையே இல்லா உன்னிட மார்பில்
எனக்கென ஓரிடம் இல்லையா முருகா?

கோதையில் காதலால் கண்ணனும் குளிர்ந்தான்
கோலமாய் அவனிட மார்பிலே வைத்தான்
பேதைநான் உன்மீது வைத்திட்ட காதல்
பொய்யாகிப் போவது ஏனடா முருகா?

கண்களை மூடியே இருண்டதாய் எண்ணிக்
கள்ளமாய்ப் பாலைப் பருகிடும் பூனைபோல்
கல்லதாய் மாறிநீ உன்குணம் மறைத்து
காதலைக் கள்ளமாய்ப் பருகுதல் முறையோ?

கடவுளாய் இருப்பதன் தார்ப்பர்யம் மறந்தாய்
காட்சிக் கெளியரென் றெண்ணினாய் போலும்
காணாமல் இருப்பது கடவுளுக் கழகோ?
கண்திறந் தொருமுறை என்னைநீ
பா(ராய்)ரேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதைகேளாய்!!

பா.நிர்விகலா

நான்காம் வருடம், பொறியியற் பீடம்

கதை கேளாய் பெண்ணே
கதைகேளாய்
கண்டித் திருமகனின் கதை கேளாய்!
குறிஞ்சியிலே இருப்பவனாம்
குறிஞ்சிக் குமரன் என்று அழைக்கப்படுவானாம்
குன்றிலே குடியிருப்பவனாம் குமரியர்
மனம் கொள்ளை கொண்டவனாம்
கதைகேளாய் பெண்ணே!
குறிஞ்சிக்குமரனவன் கதைகேளாய்!
பண்பையும் பாட்டையும் அள்ளித்தந்து
பண்ணிசை பல செய்ய வைப்பான்
பரீட்சையின் பயம் போக்கியெம்மை
பண்படுத்திப் புடம் போட்டு வைப்பான்
கதை கேளாய் பெண்ணே!
குறவஞ்சிக் கணவனின் கதைகேளாய்!
வந்ததுமே நவராத்தியாம் - பல்கலை
வந்ததுமே விழா எடுக்க வைப்பான்
வஞ்சிக்க வந்த சூரனோடு
வாளேந்திப் போர் புரிவான்
கதைகேளாய் பெண்ணே!
வேல் விழியானின் கதை கேளாய்!
தைத்திங்கள் தனில் பொங்கலாம் - உள்ளமெங்கும்
தண்ணொளி வீச வைப்பான்
தனிமையைப் போக்கி எங்கும்
தன்னம்பிக்கை தந்திடுவான்
கதை கேளாய் பெண்ணே!
தெய்வானை மணாளன் கதைகேளாய்!
அடுத்து அவனின் அலங்காரத் திருவிழாவாம்
அருள்தந்து இரட்சித்து அருள்புரிவான்
அதைத்தொடர்ந்து தைப்பூசம் அவனுக்கு சிறப்பாம்
அலங்காரக் கந்தனவன் அருள்புரிவானாம்
கதைகேளாய் பெண்ணே
அங்கயற்கண்ணி மைந்தன் கதை கேளாய்!
மாசியிலே மகா சிவராத்திரியாம்
மாணவர்க்கு கொண்டாட்டமாம்
மாணவர் கலை நிகழ்ச்சிகளாம் - அன்று
மறை வேதமும் சேர்ந்து ஒலித்திடுமாம்
கதைகேளாய் பெண்ணே.
மாங்கனிக் கள்வனின் கதைகேளாய்
மாசிமகம் என்றும் விஷேசமாம்
மனம் மகிழ்ந்து அருள் புரிவானாம்
மாலைகட்டி தொண்டு செய்யும் மாணவர் தம்
மனக்கவலை போற்றி மகிழ்வானாம்
கதை கேளாய் பெண்ணே.
மனச் சாந்தி தருபவனின் கதைகேளாய்!
மணவாளக் கோலம் அவனியிலே
மங்கையருக்கு கொண்டாட்டம் மகிழ்ச்சியிலே
சங்காபிஷேகத்தோடு திருக் கல்யாணமாம்
சகலசித்தி அருள்பவனின் மணக்கோலமாம்
கதைகேளாய் பெண்ணே!
சகலகலா வல்லவனின் கதைகேளாய்
வருடந்தோறும் நடேசரபிஷேகமும்
கார்த்திகையும் கை கோர்த்திடுமாம்
கந்தன் மாமனுக்கு ஒருநாள் - அதுவே
கண்ணனின் ஜெயந்தியாம்
திருவம்பாவையோடு திருப்பள்ளி எழுச்சியாம்
தினந்தோறும் திருவிழாவாம்
வெள்ளிதனில் விஷேச பூசையாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பி வருவோர்க்கு வித்தையருள்வானாம்
அன்பொடு அவன் தரும் அன்னதானம்
அனைவருக்கும் அருளும் பஞ்சாமிர்தம்
கதை கேளாய் பெண்ணே!
வித்தாரக்கள்வனவன் கதைகேளாய்!
கதை சொல்ல வந்த - என்
கண்கள் கண்ணீரிலே
நான்கு வருடம் அவன் கழல் கண்டு
நடுவில் கழன்று விட ஆசையில்லை
நன்றிசொல்லிச் சென்று விட்டால் - அதைவிட
நன்றிகெட்டத்தனம் ஏதுமில்லை
நாளை செல்லுமிடம் வேறென்றாலும்
நாள்தோறும் உன்னைமறவேன்
நன்றியோடு வருடம் தோறும்
நலம் நாடி வருவேன் - உன்
நிழல் தேடி வருவேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கந்தன் காதல்

ஸ்ரீ.சரத்பவன்
இரண்டாம் வருடம், பொறியியற் பீடம்

முகிலாய் மேகமாய்
எம் வாழ்விலே
உன் எண்ணம்
தெளிவாய் தேனதாய்
தெளித்ததே – எம்
நெஞ்சம்

கண்களால் காயத்தால்
காணவேண்டும்
உன் வண்ணம்
வாழ்வதே வானமாய் - மாறுமே
அது திண்ணம்

அழகனே முருகனே கந்தனே
வெற்றிவேலா
வேலதால் பெற்ற – வெற்றிகள்
சொல்லவே
வருடம் போதாதே

அழகினால் உனை
மிஞ்சிட பஞ்சமே
பாரில் பூக்கள்
பூவதே மேனியாய்
கொண்டதால்
பூக்கும் பூக்கள்

அழிவதை ஆக்கமாய்
மாற்றிடும் உன் - நெஞ்சம்
தெளிவதே தேனதாய்
திகட்டுமா உன்
எண்ணம்

வள்ளியை மணந்ததை
வானமே போற்றிப்பாட
தெய்வானையை மணந்து – பார்
நிலை மாற்றினாய்
மயில் வேலா

வேலுண்டு மயிலுண்டு
வினை தீர்க்க மருந்துண்டு
மறந்தும் மறந்திடா
மனமுண்டு உன்
எண்ணமே வாழ்க்கையாய்
வாழ்ந்துண்டு போவனே – குமரா

இறந்தும் மறந்திடா
உயிர் நிலை கொண்டு
உன் அடி கண்டு
ஆவனே முத்திப் பேறன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2014 - 2015 ஆம் ஆண்டு இந்து மாணவர் சங்கம்

# 57 வது செயற்குழுவின் ஆண்டறிக்கை

எமது செயற்குழுவானது எம்மால் இயன்றளவு பங்களிப்புக்களை குறிஞ்சிக்குமரன் ஆலயததில் வழங்கி உள்ளதுடன் இடர்பாடுகள் காரணமாக சில வருடாங்கள் தடைப்பட்டிருந்த நிகழ்வுகளான தயாத்திரை திரைப்பட விழா என்பவற்றை வெற்றிகரமாக நடாத்தி முடித்துள்ளது. அவ்வகையில் இவ்வாண்டறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்வு அடைகின்றோம்.

03.01.2014 57 வது செயற்குழு எமது பணிகளை குறிஞ்சிக் குமரன் நல்ஆசியுடன் பொறுப்பேற்றுக் கொண்டது.

08.01.2014 முதல் அலங்கார உற்சவம் தினமும் மாலை அபிஷேக பூஜையும்

17.01.2014 வரை வசந்த மண்டபப் பூசையும் இடம்பெற்று எம்பெருமான் திருவீதி உலா வலம் வந்தார்.

14.01.2014 தைப் பொங்கல் அனைத்துப் பீட மாணவர்களாலும் அவர்களின் பீடத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் முகமாக சூரிய பகவானின் முன் பொங்கல் நிகழ்வு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

17.01.2014 தைப்பூசத்திருவிழா காலை அஸ்டோத்திர சதசங்காபிஷகம் சிறப்பாக நடைபெற்று எம்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராக விநாயகப் பெருமான் அம்பாள் சகிதம் அழகிய பூந்தண்டிகையில் வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருளாசி வழங்கினார்.

27.02.2014 மஹாசிவராத்திரி நான்கு ஜாம விஷேட பூஜைகள் இடம்பெற்றன மாணவர்களின் சிறப்பு பட்டிமன்றம். வில்லிசை. பக்திப்பாடல்கள் போன்ற கலை நிகழ்வுகளுடன் 2013-2014 ம் ஆண்டிற்குரிய இந்து தருமம் வெளியிடப்பட்டது.

30.03.2014 முதல் 01.04.2014 வரை இந்து மாணவர் சங்கத்திற்கு நிதிதிரட்டும் பொருட்டு திரைப் படவிழா 3 நாட்கள் 6 திரைப்படங்களுடன் சிறப்பாக நடைபெற்றது.

14.04.2014 வருடப் பிறப்பு விஷேஷ அபிஷேக பூசைகள் நடைபெற்று ஆண்டிற்கான விஞ்ஞாபன மும் வெளியிடப்பட்டது.

14.05.2014 சித்திரா பூரணை விஷேஷ அபிஷேக பூஜைகள் இடம்பெற்றதோடு பக்தர்களுக்கு சித்திரைக் கஞ்சியும் வழங்கப்பட்டது.

26.07.2014 ஆடிஅமாவாசை விஷேஷ அபிஷேக பூஜையைத் தொடர்ந்து விரதம் அனுஷ்டித்தோருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30.07.2014 ஆடிப்பூர உற்சவம் விஷேஷ அபிஷேக பூஜைகள் தொடர்ந்து அம்பாள் திருவீதியுலா வும் இடம்பெற்றது.

10.08.2014 ஆலயத்திற்கான சிரமதான நிகழ்வும் புதுமுக மாணவர்களின் வரவேற்பும் மதிய போசனமும் வழங்கப்பட்டது.

29.08.2014 விநாயகர் சதுர்த்தி விநாயகப் பெருமானுக்கு விஷேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் பொருட்டு விநாயகப் பெருமான் வீதிஉலா வந்தார்.

30.08.2014 சில ஆண்டுகளாக தடைப்பட்டிருந்த இந்து மக்களின் பாரம்பரிய நிகழ்வாகிய தலயாத் திரை கதிர்காமப் பெருமானின் ஆசியைப் பெற கிடைத்த வரமாக இனிதே திட்டமிடப்பட்டு அனைத்து பீட மாணவர்களின் ஒத்துழைப்போடு சிறப்பாக நிறைவு பெற்றது.

10.09.2014 மணவாளக்கோல தின நவோத்திரசகஸ்ர சங்கபிஷேகம் எம்பெருமானுக்கு கும்பாபி ஷேகம் நடந்த தினமாகிய இத்தினத்தில் காலையில் நவோத்ராகஸ்ர (1000) சங்காபிஷேகமும் நடைபெற்று மதியம் மகேஸ்வர பூஜையும் இடம்பெற்றது. மாலை வசந்த மண்டப பூஜையும் அதனைத் தொடர்ந்து திருவூஞ்சலும் இடம் பெற்றது எம்பெருமான் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட சாத்துபடியுடன் விதியுலா வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

24.09.2014 முதல் 03.10.2014 வரை நவராத்திரி விஷேஷ பூஜை பிரதமை முதல் நவமி ஈறாக ஒன்பது நாட்கள் கொலு வைக்கப்பட்டும் விஷேஷ பூஜைகள் இடம் பெற்று தேவி தோத்திரங்கள் ஓதப்பட்டன. இறுதி நாளான விஜயதசமியன்று காலையில் ஏடு தொடக்கும் வைபவமும் மாலை அம்பாள் திருவீதியுலாக் கொண்டு ஆலய முன்றலில் மானம் பூ உற்சவமும் நடைபெற்று அடியார்க ளுக்கு இராப்போசனமும் வழங்கப்பட்டது.

22.10.2014 தீபாவளி காலை அபிஷேகத்துடன் ஒளிநிறைந்த நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

24.10.2014 முதல் 29.10.2014 வரை கந்தசஷ்டி விரத ஆரம்பம் முருகப் பெருமானுக்கு விஷேஷ அபிஷேக பூஜையைத் தொடர்ந்து வசந்த பண்டப பூஜை நடைபெற்றது. கந்தசஷ்டி கவசமும் ஓதப்பட்டது. கந்தபுராண படலம் இடம்பெற்றது ஆறாம் நாள் சூரஷம்காரமும் சிறப்பாக இடம்பெற்றது.

30.10.2014 திருக்கல்யாணம் முருகப் பெருமான் திருவேட்டைக்கு சென்றமை வள்ளியை மணந் தமை, எட்டுக்குடி ஏசல், யாகசாலை பிரவேசம் என்பவற்றுடன் விநாயகப் பெருமான் முன்னிலையில் திருமாங்கல்ய தாரணமும் இனிதே நடைபெற்றது.

05.12.2014 திருக்காத்திகை உற்சவம் எம்பெருமான் ஆலயம் அகல் விளக்குகளின் ஒளி வெள்ளத் தில் மிதக்க வள்ளி தேவசேனா சமேதராக குறிஞ்சிக் குமரன் திரு வீதிஉலா வலம் வந்தார்.

27.12.2014 விநாயக விஷேஷ உற்சவம் விநாயகப் பெருமானுக்கு விஷேஷ அபிஷேக பூசைகள் இடம்பெற்று எம்பெருமான் திருவீதிஉலா வலம்வந்தார்.

27.12.2014 முதல் 04.01.2015 வரை திருவெம்பாவை தினமும் அதிகாலை சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமானுக்கு விஷேட பூஜைகள் ஆராதனைகளுடன் திருப்பள்ளி எழுச்சி திருவெம் பாவை பராணயங்கள் ஓதப்பட்டு சிறப்பாக நடைபெற்றது. இறுதி நாளன்று நடேசர் ஆருத்திரா அபிஷே கமும் ஆருத்திரா தரிசனமும் சிறப்பாக நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிட்ட விடயங்களுடன் கார்த்திகை உற்சவங்களில் நடேசர் அபிஷேக தினங்கள், பங்குனி உத்தரம், ஆனி உத்தர நடேசர் தரிசனம், கிருஷ்ண ஜெயந்தி, சுவர்க்க வாயில் ஏகாதசி, விஷேட அபிஷேக பூஜைகள், வெள்ளிக்கிழமை பூஜைகள், பஜனைகள் மற்றும் பல நிகழ்ச்சிகளும் அவன் அருளால் சிறப்புற நடைபெற்றன. எமது செயற்குழு சிறப்பாக இயங்க அருளாசி தந்த எம்பெருமான் குறிஞ்சிக் குமரனுக்கும், ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

இணைச் செயலாளர்கள்
தி .ஜனாதன்
த.திருவரன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1952ம் ஆண்டு முதல் இன்று வரை இந்து மாணவர் சங்கப் பெருந்தலைவர்கள்

| ஆண்டு | பெருந்தலைவர் | தலைவர் |
|---|---|---|
| 1952-57 | பேராசிரியர் ரி. ஆர்.வீ.மூர்த்தி | |
| 1957-58 | பேராசிரியர் த.நடராஜா | திரு. ஏ.முத்துக்கிருஷ்ணன் |
| 1959-62 | | |
| 1962-63 | பேராசிரியர் த.நடராஜா | திரு. க.சிவஜோதி |
| 1963-64 | பேராசிரியர் த.நடராஜா | |
| 1964-65 | பேராசிரியர் த.நடராஜா | திரு. ஏஸ்.நவரட்ணராஜா |
| 1965-66 | பேராசிரியர் த.நடராஜா | திரு. மு.கனகரட்ணம் |
| 1966-67 | பேராசிரியர் பே.கணகசபாபதி | திரு. து.அப்புலிங்கம் |
| 1967-68 | பேராசிரியர் பே.கணகசபாபதி | திரு. கு.சண்முகநாதன் |
| 1968-69 | பேராசிரியர் பே.கணகசபாபதி | திரு. க.கிருஷ்ணானந்தசிவம் |
| 1969-70 | பேராசிரியர் பே.கணகசபாபதி | திரு. ந.சுகுமாரன் |
| 1970-71 | பேராசிரியர் பே.கணகசபாபதி | திரு. க.ஜெயபாலன் |
| 1971-72 | பேராசிரியர் பே.கணகசபாபதி | திரு. என்.சந்திரகாந்தன் |
| 1972-73 | பேராசிரியர் பே.கணகசபாபதி | திரு. என்.சந்திரகாந்தன் |
| 1973-74 | பேராசிரியர் பே.கணகசபாபதி | திரு. பா.பத்மநாதன் |
| 1974-75 | பேராசிரியர் பே.கணகசபாபதி | திரு. க.குமரேசன் |
| 1975-76 | பேராசிரியர் சி.தில்லைநாதன் | திரு. கு.கந்தசாமி |
| 1976-77 | பேராசிரியர் சி.தில்லைநாதன் | திரு. கு.கந்தசாமி |
| 1977-78 | பேராசிரியர் சி.தில்லைநாதன் | திரு. இ.கைலாசநாதன் |
| 1978-79 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. எஸ்.சிவனந்தன் |
| 1979-80 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. கு.சிவகணேசன் |
| 1980-81 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. போ.யுசீலாந்தன் |
| 1981-82 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. ச.தயாபரன் |
| 1982-83 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. சி.பாலகிருஷ்ணன் |
| 1983-84 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. சி.பாலகிருஷ்ணன் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 1984-85 | பேராசிரியர் த.யோகரட்ணம் | திரு. ஏ.விஜயரஞ்சன் |
| 1985-86 | பேராசிரியர் த.யோகரட்ணம் | திரு. ஏ.விஜயரஞ்சன் |
| 1986-87 | பேராசிரியர் சி.சிவயோகநாதன் | திரு. பீ.தயாபரன் |
| 1987-88 | பேராசிரியர் சி.சிவயோகநாதன் | திரு. பீ.தயாபரன் |
| 1988-89 | பேராசிரியர் சி.சிவயோகநாதன் | திரு. எஸ்.குகநேசன் |
| 1989-90 | பேராசிரியர் து.விநாயகலிங்கம் | திரு. இ.சந்திரகுமார் |
| 1990-91 | பேராசிரியர் து.விநாயகலிங்கம் | திரு. செ.இரவீந்திரநாதன் |
| 1991-92 | பேராசிரியர் து.விநாயகலிங்கம் | திரு. க.வல்லபவானாந்தன் |
| 1992-93 | பேராசிரியர் இ.சிவகணேசன் | திரு. தி.நவநீதன் |
| 1993-94 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. க.கணேசநாதன் |
| 1994-95 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. க.நந்தகுமார் |
| 1995-96 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. பா.சஞ்சயன் |
| 1996-97 | கலாநிதி செ.திருச்செல்வம் | |
| 1997-98 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. உதயசீலன் |
| 1998-99 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. க.இராகவன் |
| 1999-00 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. நே.ராஜரூபன் |
| 2000-01 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. க.கருணாநிதி |
| 2001-02 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. இ.மயூரன் |
| 2002-03 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. ச.சிவஜோதி |
| 2003-04 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. து.அரவிந்தன் |
| 2004-05 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. ப.தயாபரன் |
| 2005-06 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. நெ.நந்தகுமார் |
| 2006-07 | வைத்திய கலாநிதி தி. ஆனந்தமூர்த்தி | திரு. சா.மோகனஜீவ் |
| 2007-08 | வைத்திய கலாநிதி தி. ஆனந்தமூர்த்தி | திரு. சி.திவாகரன் |
| 2008-09 | வைத்திய கலாநிதி தி. ஆனந்தமூர்த்தி | திரு. செ.ஜெயசுதன் |
| 2009-10 | திரு. வ.தர்மதாசன் | திரு. ந.சிந்துஜன் |
| 2010-11 | திரு. வ.தர்மதாசன் | திரு. த.கோபிராம் |
| 2011-12 | திரு. சிவயோகலிங்கம் | திரு.ச.சசிக்குமார் |
| 2012-13 | திரு. சிவயோகலிங்கம் | திரு. கு.ஜெயமோகன் |
| 2013-14 | திரு. சிவயோகலிங்கம் | திரு. சி.வினோஜ் |
| 2014-15 | திரு. வ.தர்மதாசன் | திரு. கு.அபிராம் |
| 2015-16 | திரு. வ.தர்மதாசன் | திரு. தி.தர்சன் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி மறந்திலோம்

இவ்விதழ் இனிதாய் வெளிவருதற்கு பல்வேறு வழிகளிலும் துணைநின்ற அனைத்து உள்ளங்களிற்கும் நன்றி கூற நாம் கடமைப்பட்டுள்ளோம்.

இடையூறுகள் இடைவராமல் இறையருள் புரிந்திட்ட முத்தமிழ் குமரனாம் குறிஞ்சிக்குமரன்.

ஆசியுரைகள் வழங்கிய அனைத்துப் பெரியார்கள்

கருத்துப் பலசெறிந்த கட்டுரைகளைத் தந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவச் சகோதரர்கள்.

விளம்பரங்கள் தந்துதவி விழிப்பாய் இவ்விதழை களம் பெறச் செய்த அனைத்து வர்த்தகப் பெருமக்கள்

பின்புற அட்டைப்பட கவிதை வழங்கிய சி.கேசவன்

அட்டைப்படம் வரைந்த சி.சேரலாதன்

இந்நூலை சிறப்புற அச்சிட்டு வெளியிட உதவிய யாழ்ப்பாணம், தேவி அச்சகம்

ஏனைய நன்றி கூற மறந்த அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லம்.

**இதழாசிரியர்கள்**

**இந்துமாணவர்சங்கம்**


**பேராதனைப் பல்கலைக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கல்யாணம்




இந்து தருமம் நூல் வெளியீடு

நவராத்திரி



சிவராத்திரி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தைப்பூசம்

மணவாளக் கோலம்




சூரன் போர்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நவராத்திரி

மணவாளக் கோலம்



தைப்பூசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இருப்பவர்கள் (இ.வ) : தி.ஜனதன், கலாநிதி த.சிவானந்தவேள், பேராசிரியர் சாந்த ஹேனனாயக்க, (பிரதி உபவேந்தர்), பேராசிரியர் அதுல சேனாரத்ன (உபவேந்தர்), திரு வ.தர்மதாசன், கு.அபிராம், சி.சேரலாதன்

நிற்பவர்கள் (இ.வ) : ப.கீர்த்தனன், பூ.இவான்சலின், ஸ்ரீ.யரோசன், ப.கிரிதாஸ், ர.ஜதீசன், பா.சேகரன், தி.தர்சன், வை.கோகுலன், த.திருவரன், செ.வர்மிலா, லோ.சஜீவன், ர.நிரோசன், ஜெ.ஹிருசாந், உ.கதீஸ்வரன், து.புருசோத்மன், சி.கேசவன், கு.பாலகஜன், மா.சுகிதகுமார், வே.குகதாசன், சி.ரமேஷ்

படத்தில் இல்லாதோர் : திரு.ந.அகிலன், ச.மதிலக்சன், செ.சுமதி, சோ.வேணுயா, ந.நவபிரசாத்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இருப்பவர்கள் (இ.வ) : கலாநிதி தி.விநாயகதாசன், கலாநிதி த.சிவானந்தவேள், திரு து.சிவசுப்பிரமணியம், பேராசிரியர் வை.நந்தகுமார், பேராசிரியர் அதுல சேனாரத்தன (உபவேந்தர்), திரு வ.தர்மதாசன், திரு இரா.மகேஸ்வரன், கு.அபிராம்

நிற்பவர்கள் (இ.வ) : சி.சேரலாதன், தி.தர்சன், தி.ஜனதன், ர.ஜதீசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இடமிருந்து வலம்
கலாநிதி தி.விநாயகதாசன், கலாநிதி த.சிவானந்தவேள்,
பேராசிரியர் வை.நந்தகுமார், திரு இரா.மகேஸ்வரன், திரு வ.தர்மதாசன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From:

**Sri Haran Hardware**



182, Colombo Street,
Kandy.

Tel: 0094 81 - 222 3750 / 081 - 223 2371
Fax : 081 - 223 2371
E-mail : kiruba1822@yahoo.com

With Best Compliments From:

**Central Essence Suppliers**

(Suppliers to Confectioners & Bakers)
Importers & Distributors of
Quality Essences,
Colours & Chemicals For Food
Confectionery & Baking

76 B, Kings Street,
Kandy.

Tel: 081 - 222 4187,
081 - 4933008


With Best Compliments From:

**SUN TRADERS**

154, Colombo Street,
Kandy.

Tel: 081 - 2225262

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







With Best Compliments From:

RT

# RANJITHA TRADERS

IMPORTERS, GENERL MERCHANTS
&
COMMISSON AGENTS

180, Colombo Street,
Kandy.
Tel: 08 - 232350, 229155
Fax : 229156

81,Fifth Croos Street,
Colombo - 11.
Tel : 01 - 438468


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From :*

# MURUGAN STORES



**36, Colombo Street,**
**Peradeniya**
**Tel. 081-2387057, 0772533795**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து தருமம் நூல் சிறப்புற
வாழ்த்துகின்றோம்

காணி விற்பனை முகவர்


**M.G.R**

(ரு.தர்மராஜா)




Tel : 0776033259

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இந்து தருமம்

புகழ் பரப்பி எம்

நெஞ்சமதில்

நீ நிறைந்து

காத்தருள்வாய்

கதிர்வேலவனே


*With Best Compliments From :*

**VIGNESWARAN STORES**

173, Colombo Street,
Kandy
Tel. 081-2223014





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகரில் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

**மும் மொழிகளிலும் வாகனப் பயிற்சி அளிக்கப்படும்**



**பெண்களுக்கு நவீன காரில் பயிற்சிகள் வழங்கப்படும்**



**இப்பொழுது பருத்தித்துறை**
**1 ஆம் கட்டைச் சந்தியில்**
**021 498 3201, 01722 5292**
**077 722 5292**

அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

# கிருபா லேணர்ஸ்

# KIRUPA LEARNERS

(GOVT. Approved Driving Traning School)

- குறிக்கப்பட்ட காலப்பகுதியில் விரைவில் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள் நடைபெறும்.
- ஞாயிற்றுக் கிழமைகளில் மருத்துவச் சான்றிதழ் (மெடிக்கல்) புகைப்படம் என்பவற்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- அனுபவம் வாய்ந்த வாகனப் பயிற்சியாளர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்
- தாங்கள் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சிகள் வழங்கப்படும்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- வான், கார், முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள், லான்ட்மாஸ்ரர், ரக்டர், பஸ் என்பவற்றுக்குரிய பயிற்சியுடன் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.
- ரெயலில் சித்தியடையத் தவறின் தொடர் பயிற்சி இலவசமாக வழங்கப்படும்.
- எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்குச் சிறப்பு வீடியோ பட மூலமான வகுப்புக்கள் நடைபெறும்.



**எமது கிளைகள்:-**

- மன்னார் : 077 847 2737
- வவுனியா : 0759999988
- சாவகச்சேரி:- 021 492 3202, 021 320 1818
- நெல்லியடி:- 021 300 6550, 071 454 6957
- கிளிநொச்சி:- 021 228 5505, 071 454 6955
- சுன்னாகம்:- 021 224 2022, 071 454 6956
- விசுவமடு:- 021 320 1515, 071 454 6955

**தலைமைக் காரியாலயம் 226,**
**கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
210 22 4353
021 492 3200

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலவனே வேலையெடு

மயில் மீது நடமாடும் முருகா – எம்
மனம் மீது விளையாட வருவாய்
வேல் கொண்டு பகைதீர்த்த வேலா – எம்
வினைதீர்க்க விரைந்தோடி வருவாய்

ஔவைக்கு புழுங்கொடுத்த முருகா!
ஔடதமே எங்கள் முன்பு வருவாய்
சோதி விந்து வானவனின் மகனே
சோதனைகளகற்றிடுவாய் இங்கு

பாரெங்கும் கொடுங்காலன் யுத்தம் – அதைப்
பார்த்திருந்தும் ஏனையா மௌனம்?
வேலவனே வேலையெடு இன்றே – அன்றில்
வீழ்ந்திடுவார் உன் பக்தர் வெந்து

அன்பு நெறி தழைத்தோங்க முருகா – உன்
அருள் வேலையெறிந்திடுவாய் அப்பா
உன் கோயில் தனை நாடும் பக்தர் – தம்
உடன்பிறப்பாய் நீ மாறு கந்தா

கலியுகத்தின் களங்கங்களைக் களைய
கதிர்வேலவனே கருணையைக் காட்டு
குறிஞ்சியிலே மகிழ்ந்துறையும் குமரா
குதித்தோடி வரமருள வருவாய்.

தேவி Printers, Jaffna
021 300 3030

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org